# சமாதான நோக்கு

மலர் 5 இதழ் 4
நவம்பர் 2007
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



## மீட்டுத்தாருங்கள்...

## ...மனித உரிமைகளை

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / எஸ்.ஜீ.புஞ்சிஹேவா / மிராக் ரகீம் / பவானி பொன்சேகா / மகேஷ் பிரசாத் / லூயிஸ் ஆர்பர் / அமைச்சர் மகிந்த சமரசிங்க / கலாநிதி ஜெஹான் பெரேரா / சுனந்த தேசப்பிரிய / சுனிலா அபேசேகர / கலாநிதி தேவநேசன் நேசையா / சேர் ஜோன் ஹோம்ஸ் / பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயகா / றொசலின் சிபோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 5 இதழ் 1 நவம்பர் 2007

தொலைபேசி : 94 (0)11 2565304/06 தொலைநகல் : 94 (0)11 4714460 மின்னஞ்சல் : cpa@sri.lanka.net


## நாம் நினைத்தால் முடியும்!

2007 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 31 வரையிலான 8 மாத காலப்பகுதியில் இலங்கையில் 1212 பேர் கொல்லப்பட்டு அல்லது காணாமல்போயுள்ளனர் என்ற மூன்று அமைப்புக்களின் மனித உரிமை கண்காணிப்பு அறிக்கை வெளிப்படுத்தும் தகவல் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு நாளொன்றுக்கு 5 பேரை இழப்பதென்பது இலங்கையைப் போன்றதொரு சிறிய சனத்தொகை நிலவும் நாடு தாங்கக்கூடிய நிலைமையல்ல.

மனித உரிமை மீறல் நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகக் கூறும் நடவடிக்கைகளின் போதாமையைச் சுட்டிக்காட்டும் பல்வேறு சர்வதேச அமைப்புக்களும், இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ள நிலையில், மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து சிவில் சமூகக் குழுக்கள் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளே பாதிக்கப்படும் மக்களுக்கு ஓரளவு ஆறுதல் தரும் விடயமாக இருக்கிறது.

2007 ஜூன் மாதம் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த வடக்கு, கிழக்குத் தமிழர்களை பலவந்தமாக வாகனங்களில் ஏற்றி அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு சிவில் சமூக அமைப்புக்களும், மனித உரிமைக் குழுக்களும் காட்டிய எதிர்ப்பு இந்த நம்பிக்கையை உறுதிசெய்யும் செயற்பாடாக அமைந்திருக்கிறது.

தமிழர்கள் பாதிக்கப்பட்ட இந்தச் சம்பவம் குறித்த எதிர்ப்புக்கள் அதிகளவில் சிங்கள சமூகத்தின் மத்தியிலிருந்து வந்தமையானது, இன்னமும் இந்த நாட்டில் இன ஐக்கியம் செத்துவிடவில்லை என்பதைப் பறைசாற்றி நின்றது.

அடிப்படை மனித உரிமைகளை மீறும் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நீதிமன்றம் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுத்தது இது. இந்த நாட்டின் சிவில் சமூகக் குழுக்களும், மனித உரிமை அமைப்புக்களும் ஒன்று திரண்டு செயற்பட்டால் இலங்கையில் மனித உரிமை நிலைமைகளைச் சீராக்கலாம் என்ற செய்தியை தெளிவாக எடுத்துக் காட்டுகிறதல்லவா?


ஆசிரியர் குழு : பாக்கியசோதி சரவணமுத்து, லயனல் குருகே, பீராக் ரஹீம்

தொகுப்பாசிரியர் : கே. ரஷோங்கன்

பக்க வடிவமைப்பு, அச்சாக்கம் : LC Ways (Pvt) Ltd. தொலைபேசி : 94 (0) 11 5673483



[illegible]

[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








மனித உரிமைப் பாதுகாவலர்களும் சிவில் சமூக...
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து — 02

நாம் எங்கே வாழ்கிறோம்?
எஸ்.ஜீ.புஞ்சிஹேவா — 07

காணாமல்போனவர்களுக்காகக் காத்திருக்கிறோம்
மகேஷ் பிரசாத் — 10

பாதுகாப்பதற்கான பொறுப்பு - R2P
கரீத் இவான்ஸ் — 15

கிழக்கில் மீள்குடியேற்றங்கள்
பிராக் ரஹீம் — 16

மனித உரிமைக் கழகத்தின் பங்கு
பவானி பொன்சேகா — 21

ஐ.நா. மனித உரிமை கண்காணிப்பகம் ...
லூயிஸ் ஆர்பர் — 24

என்ன செய்யப்படவேண்டும் என்பதை நாமே...
மஹிந்த சமரசிங்க — 25

ஒரு நாளைக்கு ஐந்து பேர் கொல்லப்படுகின்றார்
மூன்று அமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கை — 29

அரசாங்கத்தின் மறுப்புக்களுடன் முரண்படும்...
கலாநிதி ஜெஹான் பெரேரா — 32

ஒரு குடிமகனின் தினக்குறிப்பு
சுனந்த தேசப்பிரிய — 36

எல்லாத் தரப்பினரும் கொடிய குற்றங்களை...
சுனிலா அபேசேகர — 39

அரசியல்யாப்பின் மீதான நம்பிக்கையை நாம் ...
கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன — 42

மக்களைக் கொன்றழிப்பதன் மூலம் கிழக்கை...
யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் — 45

இன்னுமொரு இழக்கப்பட்ட சந்தர்ப்பம்
கலாநிதி தேவநேசன் நேசையா — 46

கொழும்பு விடுதி தமிழர் வெளியேற்ற நடவடிக்கை
மகேஷ் பிரசாத் — 48

மனிதநேயப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு...
ஜோன் ஹோம்ஸ் — 52

இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை...
பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க — 53

ஹோம்ஸின் சந்திப்பில் படையினரின் தலை...
சிவில் சமூக அமைப்புக்கள் — 54


விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச...
பவானி பொன்சேகா — 56

மனிதநேயச் சட்டமீறல்களின் தண்டனையிலிருந்து...
கிறாசலின் பிபோஸ் — 60




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைப் பாதுகாவலர்களும் சிவில் சமூகச் செயற்பாட்டுக் கொள்கையும்



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்




இலங்கையின் மனித உரிமை நிலைமை சீர்குலைந்துகொண்டு போவது நன்றாகவே நிலைநாட்டப்பட்டு, இன்று அது சர்வதேசக் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும் ஒரு பிரச்சினையாகிவிட்டது. இச்சீர்குலைவானது சேர்ந்து, நாட்டின் நல்லாட்சியையும், சட்ட நிலைப்பாட்டையும் சீர்குலைக்கும் பல காரணிகளுக்குக் காரணமாகக்கூறலாம். முரண்பாடு, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தத்தமது குறிக்கோள்களை பேச்சுவார்த்தைகள் மூலமாகவன்றி, போர் மூலமாகத் தீர்த்துக்கொள்ளும் முறையை எடுத்துக்கொண்டதும் இந்தச் சீர்குலைவுகள் அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாகிறது. யுத்தத்தை நடத்துவதென்ற இருதரப்பினரது தெரிவும் இதை மேலும் இணக்கப்படுத்தியுள்ளது.

போர் என்ன வழியில் முன்னெடுக்கப்பட்டாலும் அது அதிகரித்த மனித உரிமை மீறல்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும். நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவதும், பின்னர் கைப்பற்றிய பிரதேசங்களை மறுபடி மீளப்பெறுதலும், அதன் பின்னர் நடக்கும் தாக்குதல்களுக்கெதிரான தாக்குதல்களும் தான் இப்போரின் நோக்கமாக இலங்கையில் இதுகாலவரை இருந்து வந்துள்ளது. இதன் விளைவாக, எந்த மக்களின் பெயரால் இரண்டு தரப்பினரும் போரை முன்னெடுக்கின்றனரோ அவர்களின் பாதுகாப்பே கேள்விக்குள்ளாக்கப்படுவதுதான் இங்குள்ள முரண்பாடு. பொதுமக்கள் அவர்களின் வதிவிடங்களில் அடிக்கடி பெயர்ந்து மீண்டும் இடம்பெயர்க்கப்பட்டும், பாதுகாப்பைத் தேடியலைந்து தமது சொந்த இடங்களுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் திரும்பிப்போகும் உரிமைகள் அடிக்கடி மறுக்கப்பட்டும், மனிதக்

> “போர் என்ன வழியில் முன்னெடுக்கப்பட்டாலும் அது அதிகரித்த மனித உரிமை மீறல்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாட்களாகப் பணிக்கமர்த்தப்பட்டும், கட்டாயமாகப் படைகளில் சேர்க்கப்பட்டும், எதிராளிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாகவும், எதிரிகளுக்குத் தகவல் சொல்பவர்களாகவும் சந்தேகிக்கப்பட்டும் உள்ளனர். இப்படியான சந்தர்ப்பங்களில், மிகக்கொடூரமான முறையில் அவர்கள் ஒரு உதாரணமாகக் காட்டப்படுகிறார்கள். இவ்வன்முறைகளைப் புரிவோர் மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய அரசாங்கத்தின் முகவர்களாகவிருக்கும் பட்சத்தில், தாமாக முன்வந்து அவர்களுக்கெதிராகச் சாட்சிசொன்னால் தமது உயிர்களுக்கு உத்தரவாதமிருக்காதென இவ்வன்முறையினால் பாதிக்கப்பட்டோரும் சாட்சியங்களும் பயப்படுகின்றனர்.

இதனால், இப்படியான செயல்களைத் தடுப்பதும், இக்கொடுமைகளைப் புரிவோருக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதும் சிவில் சமூகக் குழுக்களின் பொறுப்பாகிறது. ஆனபோதிலும், எதிர்த்துக் குரல்கொடுப்போரெல்லாம் - 'துரோகிகள்' என்றும் 'பகைவர்கள்' என்றும் குறிவைக்கப்பட்டு, மிரட்டல்களும் கொலைப்பயமுறுத்தல்களும் விடுக்கப்படுவதால், இதுபற்றிய சிவில் சமூகக் குழுக்களின் முயற்சிகள் எல்லாம் பயங்கரங்கள் நிறைந்தவையாயிருக்கின்றன. உதாரணமாக, பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களின் வெளிப்படுத்தல் அவர்களின் மனோதைரியத்துக்குப் பங்கம் விளைவிக்கும் என்று கருதப்படுவதால், அவ்வாறான நடவடிக்கைகள் வேண்டுமென்றே அவர்களின் வெற்றியை நோக்கிய பயணத்துக்குத் தடையேற்படுத்தும் செயற்பாடாகப் பார்க்கப்படுகின்றன. இதேவிதமான வாதம் விடுதலைப் புலிகளாலும் முன்வைக்கப்படுகிறது. எந்த மக்களைப் பாதுகாப்பதாகக் கூறுகிறார்களோ, எந்த மக்களின் பெயரால் தாம் யுத்தம் புரிவதாகக் கூறுகிறார்களோ, அந்த மக்களுக்கு தமது நடவடிக்கைகள் ஏற்படுத்தும் அச்சம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வுகள் குறித்த எந்த அக்கறையும் இல்லாமல், இரு தரப்பினரும் ஒருவர்மீதொருவர் மாறி மாறிக் குற்றங்கூறிப் பழி சுமத்துகின்றனர்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொறுப்பானவர்கள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள், அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது சாதாரண பொதுமக்களின் பிரதிநிதிகள் போன்றோர், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் ஏனைய எல்லோர் சார்பாகவும் பேசி, மனித உரிமைப் பாதுகாவலர்களாகச் செயற்படும் குரல்கொடுத்தும் வந்தால், அவர்கள் அத்தியாவசியமான, விரும்பத்தக்க, மிகமுக்கியமானதொரு செயலைச் செய்தவர்களாவர். அவர்களது தீவிரச் செயற்பாடு இல்லாவிட்டால், நீதி, சமாதானம் மற்றும் இணக்கப்பாடு போன்றவற்றுக்கான எதிர்பார்ப்புக்கள் இல்லாமல் போய்விடும். இப்படியானவர்களை இச்சமூகத்தில் நிறுவனப்படுத்தாத பட்சத்தில், இச்சமூகம் ஒரு முடிவில்லாத போரில் மூழ்கி அதற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துவிடும்.

> **"எந்த மக்களின் பெயரால் இரண்டு தரப்பினரும் போரை முன்னெடுக்கின்றனரோ அவர்களின் பாதுகாப்பே கேள்விக்குள்ளாக்கப் படுவதுதான் இங்குள்ள முரண்பாடு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் முன்னின்று செயற்படுவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட நான்கு முக்கியமான மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு இவ்வெளியீடு வணக்கஞ் செலுத்துகிறது. அவர்களது செயற்பாடுகள், பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களின் இருண்ட காலமாகிய தற்போதைய காலம் உள்ளிட்ட இரண்டரை தசாப்தங்களாக நீடித்து வருகிறது. அவர்களது செயற்பாடுகள் பற்றிய சர்வதேச மற்றும் தேசிய அங்கீகாரம் உண்மையாகவே பாராட்டுக்குரியவை.

மனித உரிமைகள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகளுக்கான (யாழ்ப்பாணம்) மார்டின் என்னல்ஸ் உயர் விருதைப் பெற்றவர்களில் ஒருவரும், பேராசிரியருமான ராஜன் ஹூல், வடக்கு கிழக்கில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் வன்முறைகள், மற்றும் மனித உரிமைகளோடு சம்பந்தப்பட்ட தனிப்பட்டவர்களது உயிர்களும் தன்னுரிமைகளும் பறிக்கப்பட்டமைக்கெதிராக துணிச்சலானதும் சில சமயங்களில் தனித்துமானதுமான போராட்டத்தைக் கொண்டு நடத்தினார். அதிகாரத்தின் அரசியல் இராணுவ சார்நிலைகளுக்கு அப்பால், வன்முறையின் அழுத்தங்களுக்கெதிராகவும், அடக்குமுறைக்கெதிராகவும் மக்கள் சார்பாக அவர்கள் எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள். அமெரிக்காவின் சிறந்த மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு மற்றும் INFORM அமைப்புக்களின் மனித உரிமைகள் விருதை இணைந்து வென்றவர்களில் ஒருவரான கலிஸா அபேசேகர, இலங்கை முழுவதும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை தொடர்ந்தும் ஆவணப்படுத்தி வருகிறார். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவும் கட்டமைப்பையும் வழங்குவதில் அவர் முன்னணியில் நிற்பதுடன், இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நிறுவன மற்றும் சட்ட மீளமைப்பிற்காக பிரசாரம் செய்து வருகிறார். 1998ல் உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 50ஆவது வருட நிறைவையொட்டி ஐக்கிய நாடுகளால் வழங்கப்பட்ட விருதைப் பெற்றவர்களில் கலிஸாவும் ஒருவர்.

சுனந்த தேசப்பிரிய மாற்றுப் பத்திரிகைத் துறையின் ஒரு முன்னணி பத்திரிகையாளராகவும், மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் இருந்துவருகிறார். சுதந்திர ஊடக இயக்கத்தின் ஆரம்பகால ஸ்தாபக உறுப்பினரும் தற்போதைய ஏற்பாட்டாளரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப்பிரிவின் தலைவருமான இவருக்குக் கிடைத்த, ஊடக சுதந்திரத்திற்காகப் போராடியமைக்கான சேபால குணசேன விருதானது, பயமுறுத்தல்கள், இழிவுரைகளுக்கு மத்தியில் ஊடக சுதந்திரத்தை அங்கீகரித்து ஆதரவளிக்கப் போதும் இவரது போராட்டத் தலைமைத்துவத்தின் உச்சக்கட்டமாகவுள்ளது. மனித உரிமைப் பிரச்சனைகளை 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் எழுதும் பத்திரிகையாளராகவும், சட்டத்தரணியாகவும் இருந்து, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு விடயங்களில் சிவில் சமூகக் குழுக்களின் செயற்பாடுகளின் சாத்தியங்கள், தடைகள் மற்றும் சட்டச் சவால்கள் பற்றித் துணிவாக ஊடகங்களுக்கு நினைவூட்டி வந்தமைக்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் கிஷாலி பின்ரோ ஜெயவர்த்தனவுக்கு 'வீரப் பெண்மணி' விருது வழங்கப்பட்டது. சட்டத்தின் நிலைப்பாடு மற்றும் இலங்கையின் மனித உரிமைத்துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் பற்றிய நேர்மையான அழுத்தமான விமர்சனங்களையும் இவர் கொண்டிருக்கிறார். பவானி பொன்சேகா, மனித உரிமைத் துறையில் தலைமைத்துவத்துக்கான இளையோர் வர்த்தக சபையின் 'மிகத் திறமையான இளையோர்' விருதைப் பெற்றவர். சட்டத்தரணியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான இவர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணியாளர் என்ற வகையில் முன்னெடுத்த, மக்களின் சார்பாக வழக்காடல் மற்றும் கொள்கைச் சீரமைப்பு போன்ற மனித உரிமைச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. அவரது அர்ப்பணிப்பும் துணிச்சலும் எதிர்காலச் சந்ததிப் பாதுகாவலர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், எதிர்காலத்தில், இலங்கையின் மனித உரிமைகள் பாதுகாப்புக்கான சிவில் சமூகக் குழுக்களின் பங்களிப்பு வலுப்படுத்தப்பட்டு நிலைநிறுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

பொதுமக்கள் நலனுக்காக வழக்காடுதல் என்பது, இவ்வெளியீட்டில் கூறப்பட்ட பிற மனித உரிமைப் பிரச்சனைகளில் ஒன்றாகவும், உரிமைகளுக்கான பாதுகாப்பை உயர்த்துவதில் நேரடியாக சிவில் சமூகக் குழுக்களின் செயற்பாட்டுடன் தொடர்புடைய ஒன்றாகவும் இருக்கிறது. குறிப்பாக, கடந்த ஜூன் மாதம் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதிகளிலிருந்த கிட்டத்தட்ட முன்னூறு தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியமையைத் தடுத்து நிறுத்துவதற்காக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல்கள் வழக்கு வெற்றிபெற்றது. முறைப்பாட்டாளர்களுக்கு இடைக்கால நிவாரணத்தை வழங்கும் வகையில், இந்த வெளியேற்றத்தை உடனடியாக நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதனால், அரசாங்கமும் அதற்கிணங்கி வெளியேற்றப்பட்டவர்களில் சிலரை உடனடியாகத் திருப்பியனுப்பியது. இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துமாறு முதலில் வழக்குத் தாக்கல் செய்தோருக்கும், தொடர்ந்து வழக்குத் தாக்கல் செய்த வெளியேற்றப்பட்டோருக்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. நாட்டின் எந்தப் பாகத்துக்கும் சுதந்திரமாக நடமாடவும், கொடூரமாகவோ இழிவாகவோ நடாத்தப்படாமல் இருக்குமான அனைத்து இலங்கையர்களினதும் உரிமையை அடிப்படையாகக் கொண்டே இந்த முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொதுவாக, தேசிய நிறுவனங்கள், அதன் குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அடிப்படைக் கடமையை நிறைவேற்ற முடியாமலும், இயலாமலும் உள்ளது என்ற சூழ்நிலையான உண்மையை மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் மனித உரிமைக்கான சிவில் சமூகக் குழுக்களின் செயற்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுதந்திர ஆணைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பரிந்துரைப்பதற்கான 17ஆவது திருத்தச்சட்டம் மீறப்பட்டமை மற்றும் அரசியலமைப்புச் சபையை அரசியலமைப்பாக்காமை என்பவற்றைத் தொடர்ந்து, சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி தன்னிச்சையாக உறுப்பினர்களை நியமித்ததன் காரணமாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மதிப்பிறக்கச் செய்யப்பட்டிருப்பதால், மனித உரிமை விவகாரங்களில் சிவில் சமூகச் செயற்பாடுகளின் பொறுப்புணர்வு அதிகரிக்கிறது.

இம்மாதிரியான செயற்பாடுகளும், செயற்பாட்டாளர்களும் இலங்கைக்கு அதிகம் தேவைப்படுகிறது, தேவைப்படுகின்றனர். இம்மாதிரியானவர்களுக்கும், மனிதநேயப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி, எமது நாட்டின் சிறந்த பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்து, இந்நாட்டு மக்கள் எதிர்காலத்தில் வளமாகவும் நன்றாகவுமிருக்கத் தம்மை அர்ப்பணிக்கும் சகலருக்கும் இவ்வெளியீடு தலைவணங்குகிறது.

நாம் அனுபவிக்கும் மனித உரிமை மீறல்களின் வன்முறையும் அளவும், தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரமும் எமது வழக்கங்களிலும், பாரம்பரியத்திலும் ஒரு பகுதியாகவிருப்பதை நாம் அனுமதிக்கக்கூடாது.

**“ மனிதநேயப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி, எமது நாட்டின் சிறந்த பண்பாண்டையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்து, இந்நாட்டு மக்கள் எதிர்காலத்தில் வளமாகவும் நன்றாகவுமிருக்கத் தம்மை அர்ப்பணிக்கும் சகலருக்கும் இவ்வெளியீடு தலைவணங்குகிறது. ”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எங்கே வாழ்கிறோம்?




பெருமை வாய்ந்ததும், ஏராளமான மூலவளங்கள் நிறைந்ததும், இணையற்ற அழகான நிலங்களையுடையதுமான நாட்டிலா நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?

இல்லவேயில்லை!

இன்றைய காலகட்டத்தில் திருடர்களுடைய நகைப்பெட்டியில் ஒரு நாட்டில்தான் நாம் வாழ்கின்றோம். எமது வாழ்க்கை ஆமையினது வாழ்க்கையாக மாறிவிட்டது. மோசடிக்காரர்கள் யானைத் தந்தத்தாலான மாளிகைகளிலும் ஆடம்பரக் கார்களிலும் வேகமாக வலம்வந்துகொண்டிருக்கிறார்கள். விதியின் விசித்திரமான விளையாட்டால் அவர்கள் எம்மை அன்பளிப்புகளாக ஆக்கிவிட்டார்கள்.

பரவிக்கொண்டே போகின்ற ஊழலானது தேசிய கலாசாரமாகவே ஆகிவிட்டதல்லவா? இந்த மோசடிக்காரர்கள் ஒருநாள் தேசியத் தலைவர்களாகப் போற்றப்படுவார்களல்லவா? இந்தப் புதிய கட்டளைக்கெதிராக நீங்கள் வாய்திறக்கவோ சொல்லிடவோ முடியாது.



சாக்கரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா
தமிழில்: கா.கபிலவிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்தால் நீங்கள் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிப்பவராகக் கருதப்படுவீர்கள்.

"தேசிய பாதுகாப்பு" என்றால், இந்த சிலபேர்களால் அனுபவிக்கப்படும் பாதுகாப்பே தவிர வேறொன்றுமில்லை.

பயங்கரமான போரானது தற்போது தொடர்ந்திருக்கும் பரவியுள்ளது. சிறியேனும் இப்போரானது கண்ணுக்குத் தெரியாதது.

இருபத்தைந்து அரசாங்க நிறுவனங்கள் கிட்டத்தட்ட 150 பில்லியன் ரூபாய் பெறுமதியான பொதுமக்கள் பணத்தைச் சுருட்டியுள்ளன. பெருத்த அளவில் இக்குற்றம் இருந்தபோதும், யாருமே இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதிகாரிகள் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள். 1948ல் உதயமான சுதந்திரம் இப்படியானவர்கள் நாட்டைக் கொள்ளையடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது. இவர்கள் நமது மக்களுக்கெதிராகவே போரை நடத்துபவர்கள். இது எங்கும் குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளது. இவ்வூழலிலிருந்து நழுவுவதற்காக இவர்கள் இந்தக் கொடூரமான போரை மருந்தாகக் கருதுகிறார்கள். இனப்பிரச்சனைக்குப் போர் ஒரு தீர்வல்ல. ஆனால், அரசியல் ஊழலை நிரந்தரமாக்குவதற்குத்தான் அது தேவை.

மின்சாரசபையில் ஊழலெனில் அது ஒரு முழுமையான சேவையைத் தராது. மக்களுடன் சேர்ந்து முழு நாடும் இருட்டில் மூழ்கிவிடும். இதேபோலவே வீதி அபிவிருத்திச்சபையில் ஊழல் நடக்கிறதென்றால் நாம் அமைவாகி தரமாக மட்டுமே பயணத்திற்கேற்ப முடியாம். வீதிப் பணியெல்லாம் தந்திரமான அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பொக்கெட்டிற்குள் போய் முடங்கிவிடும். வைத்தியசாலைகளில் ஊழலென்றால் நோயாளிகள் பூரணமாகக் கவனிக்கப்படவில்லை என்பதுதான் அர்த்தம்.

ஒரு அரசியல் எல்லைகளுக்கும் எட்டிவிட்ட ஊழலின் உச்ச நிலை தான் போர். எனவே, குண்டுகளின் ஒருபாதி வடக்கிலுள்ளோரைக் கொல்ல, மறுபாதி தெற்கிலுள்ளோரைக் கொல்கிறது. தெற்கில் கொலைத்தொழிலானது வடக்கின் தற்கொலைப்படையாளிகளுக்குப் பல விளக்கக் காட்டுமுறிப்பாகிவிடுகிறது. இப்படியானதொரு சூழ்நிலையில் கொலை செய்வதென்பது ஒரு ஆதாயமான தேசியக் கைத்தொழில் ஆகிவிடுகிறது!

பொருளற்ற அரசியலுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கிறான் ஒரு படைவீரன். ஒரு விவசாயி தனது விவசாயத்தைக் கைவிட்டுத் தனது சவக்குழியைத் தானே வெட்டுவதற்குப் பலவந்தப்படுத்தப்படுகிறான். ஒரு தொழிலாளி அரச யந்திரத்தில் நசுக்கப்படுகிறான். இவை எல்லாவற்றுக்கும் காரணம், முழுச் சமூகக் கட்டமைப்பும் நாசமாகிப்போனதுதான்! இதுகாலவரைக்கும் அனைத்துத் தேச நிறுவனங்களுமே ஊழலில் போட்டிபோட்டுக்கொண்டு வீணாகிக்கிடக்கின்றன.

ஊழலுக்கப்பாற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துப்பேரைச் சுட்டிக்காட்டச்சொன்னால், நீங்கள் அச்சவாலை ஏற்றுக்கொள்வீர்களா? அநேகமாகயிரிபாக அருவருக்கத்தக்கது தான். கூண்டலவல் குழப்பம், அரசாங்க நிறுவனங்களும் ஒரு பாராளுமன்றவாதியின் முகத்தில் புன்னகை மிளிர்கிறது என்றால், அது அவர் ஒரு ஏமாற்று வித்தையில் ஈடுபட்டிருக்கிறார்

“ கொலை செய்வதென்பது ஒரு ஆதாயமான தேசியக் கைத்தொழில் ஆகிவிடுகிறது! ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் அர்த்தம்? ஒரு அதிகாரி தமது தவறை மறைப்பதற்காக உங்களை வீடு வேண்டுமென்றே ஒரு தவறைக் கண்டுபிடிக்கலாம். ஊழல், சுரண்டல், ஏமாற்றுதல், வியாபாரங்கள் எல்லாமே பொதுவாக ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள்தான். திணைக்களப் பொறுப்பதிகாரி, கூட்டுத்தாபனத் தலைவர், பெருந்தொழிலதிபர், நிலச்சொந்தக்காரர், வழக்கறிஞர், வைத்தியர், பாடசாலை அதிபர் போன்ற தொழில் செய்பவர்களை இத்தவிதமான வார்த்தைகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். வணக்கத்திற்குரியதும் மரியாதைக்குரியதுமான இந்தப் பட்டங்கள் ஊழல் கலாசாரத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன.

இப்படியான சமூகப் பின்புலத்தில் பற்றாக்குறையான நம்பிக்கைகளை நாம் எமது இளஞ்சமுதாயத்தில் எதிர்பார்க்கிறோம். எமது இளஞ்சமுதாயத்தைப்பற்றிய பார்வை நாம் எப்படித் தெரிவிப்பது? தெரியாத் தாக்குதல் பயிற்சிகளுக்காகப் பிடிபடும் சிறுவர்களைக் கடத்துவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறது. அது சிறுவர்களுக்கெதிரான குற்றம் என்பதில் சந்தேகமில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனியாமல் விடுவது, போரால் வீழ்ந்தவர்களைக் கவனியாமை, கல்வி, சுகாதாரம் மறுப்பு, வறுமை, உடல் உள ரீதியான கொடுமை, உணவுப் பற்றாக்குறை, அன்புகாட்டாமை, சமூகப் பாதுகாப்பின்மை போன்றவையெல்லாம் சிறுவர்களுக்கெதிராக இழைக்கப்படும் மிகப்பயங்கரமான கொடுமைகளல்லவா? சிறுவர்களுக்கெதிரான உரிமைகளை மறுப்பதில் நாம் எல்லோருமே பங்கெடுத்து வருகிறோம். பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிகள் கொடுப்பதென்பது அம்மாதிரியான அனுமதிகளை மறுப்பது போன்றதே. இவ்வாறான எல்லாக் கெட்டவைகளுக்கும் தீமைகளுக்குமுரிய மருந்து இந்நாட்டின் அரசியல்யாப்பிலேயே உள்ளது. கவிஞரும் மார்க்ஸியவாதியுமான பேர்தோல்ட் பிரெக்ட் என்ற ஜேர்மனியரின் கருத்துப்படி, அரசியல்யாப்பிலுள்ளது ஒரே வசனத்தில் அமைந்துவிடவேண்டும். அதாவது, "அரசின் முழுதொடர்பு மக்களைக் கலைத்து அவர்களை மாற்றிப் புதியவர்களைப் பதவியில் அமர்த்தவேண்டும்" என்பதாகும்.

ஊழலுக்கப்பாற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிப்பேசுவதைச் சுட்டிக்காட்டச்சொன்னால், நீங்கள் அச்சவாலை ஏற்றுக்கொள்வீர்களா?

ஆண்டுக்கணக்காக அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்கள் விட்டுச்சென்ற சொத்து என்ன? அவர்கள் போரை "அபிவிருத்தி" செய்துவிட்டு, வறுமையைப் பெருமளவாக்கிவிட்டனர். போரால் பாதிக்கப்பட்டோரைப் பற்றிய கவலை இவர்களுக்கு இல்லை. போர்க்களத்தில் நடக்கும் இறப்புகள் எல்லாமே நாட்டுப்பற்றை அளக்கும் அளவுகோலாகிவிட்டன.

போரின் இழப்புக்களைப் பற்றி வர்ணிப்பதென்பது ஒரு புதிய ஊடகக்கலையாக மாறிவிட்டிருக்கின்றது. கொலைகளுக்கு நிதியளிக்கவே நாம் வரி கட்டுகிறோம். அவ்வரிகள் - நாட்டுப்பற்றுக்கான வரிகளாகி விடுகின்றன! மக்களின் இறைமை என்பது பிறரைக் கொல்வதற்கான அனுமதிப்பத்திரமாகிவிடுகின்றது. ஒற்றையாட்சியை நிலைநாட்டுவதற்காக நாம் இரு நாடுகளை உருவாக்குகிறோம். எல்லோராலும் மிகவும் விரும்பப்பட்ட ஒரு சொர்க்கத்தில், தோல்வியடைந்த ஒரு தேசத்தை நாம் கட்டியெழுப்புகிறோம்!

நேர்மையான சமூகத்தை ஆதரிக்கின்றவர்களெல்லாம் இப்போது போரின் சிறப்புக்களைப் பற்றி பட்டிமன்றம் நிகழ்த்துகிறார்கள்!

இந்த அரசியல்வாதிகள் தமது ஆடம்பரக் கார்களில் வீதிகளில் வலம்வரும்போது மக்களுக்குப் பாதுகாப்புண்டா?

தொலைக்காட்சி விவாதங்களில் அவர்களின் உரத்த குரல்களினால் சூழல் மாசடைகிறதல்லவா?

அவர்களைப் பார்ப்பதாலேயே மக்களுக்குக் கவலையேற்படுகிறதல்லவா? அறிவு பெற்றவர்கள் சிறிய அளவிலேயாவது இருக்கிறார்களென்றால், அவர்கள் போராட்டத்தையாகவோ கருத்துச் சொல்லவோ தான் உள்ளனர்!

வரிசெலுத்துவோரின் பணத்தில் பட்டம் பெறும் வியாபாரத்தைத் தவிர வேறொன்றும் தெரியாத தந்திரக்கார அரசியல்வாதிகளாகிய புல்லுருவிகளிடமிருந்து எப்போது இந்நாடு விடுபடுகிறதோ, அப்போதுதான் அது உண்மையான சுதந்திரமாக இருக்கமுடியும்.

**“ போரின் இழப்புக்களைப் பற்றி வர்ணிப்பதென்பது ஒரு புதிய ஊடகக்கலையாக மாறிவிட்டிருக்கின்றது. கொலைகளுக்கு நிதியளிக்கவே நாம் வரி கட்டுகிறோம். ”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படப்பிடிப்பு: மகேஸ் பிரசாத்

# காணாமல் போனவர்களுக்காகக் காத்திருக்கிறோம்

'2007ம் ஆண்டு ஒகஸ்ட் 1ஆம் திகதி கிராண்ட்பாஸில் அமைந்துள்ள பிளவர் டவ் ஹோஸ்ட் விருந்து மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிறைந்திருந்தது. திருமணங்களுக்கும், கொண்டாட்டங்களுக்குப் பெயர்போன இந்த மண்டபத்தில் இம்முறை ஆரவாரங்கள் இல்லை. சூழ்நிலை முற்றிலுமாக மாறுபட்டிருந்தது. ஒருவர் பின் ஒருவராக அமர்ந்திருந்தவர்கள் தமது கவலைகளையும், துக்கத்தையும் வெளிக்காட்டிக் கொண்டிருந்தனர். மண்டபத்தில் ஈனமான அழுகுரல்களும், கதறல்களுமே கேட்ட வண்ணமிருந்தன. பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, நண்பர்களை இழந்த உறவுகள் தமது துக்கத்தை அழுகை மூலம் வெளிக்காட்டிக்கொண்டிருந்தனர். கூட்டங்களில் காணப்படும் வழமையான கைதட்டல்கள் இல்லை. மாறாக, அங்கு கூடியிருந்த அரசியல்வாதிகள், தூதுவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரிடம், "எனது மகனை மீட்டுத்தாருங்கள்", "எனது கணவரை விடுவியுங்கள்" "எனது மகளைக் கண்டுபிடியுங்கள்", "மன உளைச்சலிலிருந்து எம்மை விடுவியுங்கள்" போன்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் காணாமல்போன, கடத்தப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்த மக்கள் கண்காணிப்புக் குழு கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பான 137 முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளது. சிங்கள, முஸ்லிம் சமூகத்தவர்கள் சிலரும் மண்டபத்தில் கூடியிருந்தனர். ஆனாலும், கடத்தப்பட்டுக் காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே.

தேசிய ரீதியில் பரந்துபட்ட பிரச்சினையாக இந்தக் கடத்தல் சம்பவங்கள் அமைந்துள்ள போதும் வடக்கு, கிழக்கிலேயே அடுத்தலாக இவை இடம்பெற்றுள்ளன. விசேடமாக, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளிலேயே அடுத்தான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2007ஆம் ஆண்டில் மாத்திரம் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டிருப்பதுடன், 2006ஆம் ஆண்டில் 1000 பேர் வரையில் காணாமல் போயிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற மனித உரிமை அமைப்புக்கள் தயாரித்திருக்கும் அறிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ளன. பல குடும்பத்தினர் பொலிஸாரிடமோ அல்லது உரிய அதிகாரிகளிடமோ முறைப்பாடு செய்யாமல்

**உறவுகளை பறிகொடுத்துவிட்டு தவித்து நிற்போருக்கு இருக்கின்ற ஒரே ஆறுதல் மக்கள் கண்காணிப்புக்குழுதான்.**



மகேஸ் பிரசாத்
ஊடகவியலாளர், INLanka இணைய ஊடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம் என்பதால், உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாமென்ற அச்சம் காணப்படுகிறது.

காணாமல்போதல்கள் இலங்கைக்கு புதிய ஒரு அனுபவம் அல்ல. "பலாத்காரமாகக் காணாமல் போகச்செய்யப்பட்டோர்" (enforced disappeared), அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமல்போகச்செய்யப்பட்டோர் (involuntary disappeared) போன்ற மனித உரிமை தொடர்பான சொற்பதங்கள் இலங்கையின் அண்மைய அரசியல் வரலாற்றின் மிகவும் இருண்டுபோயிருந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1987-9 வரையான காலப்பகுதியில் தென் பகுதியில் அரசாங்கத்துக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் (ஜே.வி.பி.) இடம்பெற்ற கிளர்ச்சியின்போது காணாமல் போன 23,087 சம்பவங்கள் தொடர்பாக காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப் பட்டிருந்தன. எனினும், 40,000த்துக்கும் அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாமென்கிறது உத்தியோகப்பற்றற்ற தகவல்கள். உள்நாட்டு மோதல்கள் இடம்பெற்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய ஆயுதக்குழுவினராலும் பலாத்காரமான கடத்தல்கள் இடம்பெற்றே வருகின்றன. எதிரிகளைப் பலமிழக்கச் செய்வதற்கும், மக்களைப் பயமுறுத்துவதற்கும் இவ்வாறான கடத்தல்கள் பயன்படுத்தப் படுகின்றன.

"காணாமல்போதல் என்பது இலங்கையின் சட்ட வரையறைக்குள் கொண்டுவரப் பட்டுவிட்டது. சட்டத்தின் வரையறைக்குள் கைது, தடுத்துவைத்தல், சித்திரவதை, படுகொலை போன்றவற்றுக்குப் பொறுப்பாக்கவேண்டிய அனைத்து சாத்தியங்களையும் இல்லாமல்செய்வதே இதன் பிரதான தத்துவம். ஆயிரக்கணக்கான காணாமல்போதல் சம்பவங்களின் மூலம் இந்தத் தத்துவம் நன்றாக

அவரை விட்டுடுங்கோ" என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தது ஏழே வயது நிரம்பிய ஏஞ்சல் யோகராஜன் என்ற பிஞ்சு. இவரது அப்பாவும், இரண்டு சகோதரர்களும் 2007 மார்ச் நீர்கொழும்பில் காணாமல்போகச் செய்யப்பட்டனர்.



படப்பிடிப்பு: புத்திக்க வீரசிங்க

**கண்காணிப்புக்குழுவின் முயற்சிகளின் மூலம் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சி இத்தகைய சம்பவங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவியிருக்கின்றது**

வைத்திருக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களிலேயே மிகவும் மோசமான ஒன்றாக சர்வதேச சமூகத்தினால் வர்ணிக்கப்படும் இத்தகைய குற்றச்செயல்களில், எந்தவொரு புதிய குற்றவாளியும் மிகவும் பாதுகாப்பாக ஈடுபடுவதற்கு இது உதவுகிறது" என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள்

"ஒவ்வொரு நாளும் நான் நித்திரைகொள்ளப் போக முதல் அப்பா எனக்கு கதைகள் சொல்லி முத்தம் தருவார். இப்ப அவர் இல்லை. தயவுசெய்து

"எனக்குப் படிக்கவேணும் என்டுதான் ஆசை. ஆனால், அப்பா காணாமல்போன பிறகு அம்மாவையும், தம்பி, தங்கையையும் காப்பாற்றுவதற்காக வேலைக்குப் போறன்" என்று தன் படிப்பை இடைநிறுத்திவிட்டு தொழில்செய்யத் தொடங்கியிருக்கும் பத்தொன்பதே வயது நிரம்பிய பெண் ஒருவர் கூறினார்.

இராணுவப் பேச்சாளரின் அலுவலகத்தில் கடமையாற்றிய இவரது தந்தை ஒரு வருடத்துக்கு முன்னர் காணாமல்போகச்செய்யப்பட்டார். குடும்பச்சுமை காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐயா! என்ரை புருசனை மீட்டுத்தாங்கையா!

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையிலிருக்கும் இந்தப் பெண், எப்படியும் தனது தந்தையை மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையுடன் வேலைக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு காணாமல்போனோர் மாநாட்டில் கலந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்.

காணாமல்போதல் சம்பவங்கள் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குடும்பத்தினர் மனரீதியான பாதிப்புக்கு உள்ளாவதுடன், சுகாதார சீர்கேடுகள், நிதிக்கஷ்டம் போன்ற பிரச்சினைகளுக்கும் உள்ளாகவேண்டிய நிலை காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு ஏற்படுகிறது.

"இரத்மலானை ஏரோ லங்காவில் வேலைசெய்யும் எனது மகளும், மருமகனும் வீட்டிலிருந்து அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளால் வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டனர். இது பற்றி எத்தனையோ இடத்தில் முறைப்பாடு செய்தும் எதுவித பலனும் இல்லை" எனக் கடத்தப்பட்ட பெண்ணின் தந்தை கூறினார்.

"நாங்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள். மகள் கடத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்து அடுத்தநாள் கொழும்புக்கு வந்தோம். ஒரு கோடி ரூபா கேட்ட கடத்தல்காரர்கள், 50 இலட்சமாவது தரவேண்டுமென்று கோரினார்கள். மகளுடைய தொலைபேசியிலேயே அவர்கள் தொடர்புகொண்டிருந்தனர். வீட்டை வித்தாவது அவர்கள் கேட்கிற பணத்தைக் கொடுத்துவிடுங்கள் என்று மகளும் போனில் சொன்னா. அதன் பின்னர் வெளிநாட்டிலிருப்பவர்களிடம் பிச்சை கேட்பதுபோல கேட்டு 50 இலட்சம் ரூபாவை கடத்தல்காரர்கள் கூறியதுபோல பொரட்டகொட பெற்றோல் நிலையத்துக்குப் பின்னால் கொண்டு வைத்தோம். இந்த விடயம் பற்றி கொட்டாஞ்சேனைப் பொலிஸார் அறிந்து கடத்தல்காரர்களில் ஒருவரைக் கைது செய்திருந்ததாகவும் அறிந்தோம். ஆனால் என்ர மகள் இன்னும் திரும்பி வரவில்லை" என கடத்தப்பட்ட ஒருவரின் தாயார் உருக்கமாகக் கூறினார்.

இதேபோலவே பலர் கடத்தப்பட்ட உறவுகளை மீட்பதற்காக வெளிநாட்டிலுள்ளவர்களிடம் கெஞ்சிப் பெற்றும், உடைமைகளை விற்றும் பணத்தைத் திரட்டி கடத்தல் குழுவினரிடம் கையளித்தபோதும் அவர்களுக்கு கிடைப்பது ஏமாற்றமே. அரசாங்கமோ, அதிகாரிகளோ உறுதியான பதிலொன்றையும் வழங்காத நிலையில், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஊடாகத் தமது உறவுகளை மீட்க முடியுமென்ற இறுதி நம்பிக்கையிலேயே அவர்கள் வாழ்கிறார்கள்.

### கேள்விக்குள்ளாகியிருக்கும் அரசாங்கத்தின் பங்களிப்பு

கடத்தல் சம்பவங்களுடன் அரசாங்கம் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டும் மனித உரிமைக் குழுக்கள் கடத்தல்களைத்



படங்கள்: புத்திக்க வீரசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லையெனக் கூறுகின்றன.

"இந்தச் சம்பவங்கள் முழுதும் அரசியல் சார்ந்தவையோ அல்லது பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு பகுதியோ அல்ல. மாறாக, வெறுமனே பணம் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் கடத்தல்களே இவை. இது இப்போது ஒரு தொழில் துறையாகிவிட்டுள்ளது" என பிரபல பத்தி எழுத்தாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் வர்ணிக்கிறார்.

இவ்வாறான சம்பவங்களுடன் பாதுகாப்புத் தரப்பினரும், அரசியல் உயர்மட்டத்தினர் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதற்கான உறுதியான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. பாதுகாப்புத் தரப்பில் சிலர் இதுதொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், பாதுகாப்புத் தரப்பினரிடமோ, அரசாங்கத்திடமோ இதுபற்றி முறையிடுவதில் மக்கள் நம்பிக்கையற்றுக் காணப்படுகின்றனர்.

தொடர் அழுத்தங்கள் காரணமாக மகாநாம திலகரட்ண ஆணைக்குழு, விசாரணைகளுக்கான ஆணைக்குழு(CoI), சுயாதீன சர்வதேச நிபுணர்கள் குழு (IIGEP) போன்ற குழுக்களை அமைத்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்வதாகக் காட்டிக்கொண்டிருந்தாலும், இந்த முயற்சிகள் எதுவும் தமது அன்புக்குரியவர்களை மீட்பதற்கோ, அல்லது அவர்களின் நிலையைக் கண்டறியவோ உதவாது என்றே காணாமல்போகச்செய்யப்பட்டோரின் உறவுகள் கருதுகின்றனர். குறைந்தது ஏழு உள்ளூர் ஆணைக்குழுக்களை நாம் கொண்டுள்ளோம். தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு,

> "திமிங்கிலங்களை விட்டுவிட்டு சிறிய மீன்களை மாத்திரமே அரசாங்கம் கைது செய்திருக்கிறது"


படப்பிடிப்பு: மிகைல் பிரசாத

ஜனாதிபதி ஆணைக்குழு, அமைச்சர்கள் குழு என்று பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கண்ட பலன் எதுவுமில்லை என்கிறார் மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளர் மனோ கணேசன்.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் குழுவொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கச் சென்றிருந்தபோதும் சந்திக்க முடியாமலேயே அவர்கள் திரும்பியிருந்தனர். இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஒருவர் இவ்வாறு விபரிக்கிறார்: "நாங்கள் யாரையும் கடத்தவில்லை. கடத்துவோருக்கான அவசியமும் எமக்கு இல்லை. இது அரசாங்கம் மீது சேறு பூசுவதற்காக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள். கணவர்மாரையும் பிள்ளைகளையும் நீங்களே ஒளித்து வைத்துவிட்டு இப்போது காணாமல்போய்விட்டதாகத் தேடுகிறீர்கள். அவர்கள் ஜேர்மனி அல்லது பிரான்ஸில் இருப்பார்கள். சென்று பாருங்கள் என ஜனாதிபதி கூறியிருந்தார்".

"மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் மீது எந்தவொரு தாக்கத்தையும் எம்மால் செலுத்த முடியாது உள்ளது" என மனோ கணேசன் கூறினார். "ஆனால் சர்வதேசத்திடமிருந்து அழுத்தம் இருந்தால் அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கும். தற்போதைய நிலைமை தொடர்ந்தால் இலங்கை மீது சர்வதேச நாடுகள் தடையைப் பிரயோகிக்கும்" என்கிறார் அவர்.


## யாரிடம் போவது?

கடத்தல்கள், காணாமல்போதல்கள் குறித்து அதிகாரிகளிடம் முறையிட்டால், கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டவர்களுக்கோ, அல்லது ஏனைய உறவினர்களுக்கோ ஏதேனும் ஆபத்து நேரலாம் என்ற அச்சம் காரணமாக, அநேகமாக அதிகாரிகளிடம் முறையிடுவதற்கு பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அஞ்சுகின்றனர்.

இந்த நிலையில், தமது உறவுகளை பறிகொடுத்துவிட்டு தவித்து நிற்போருக்கு இருக்கின்ற ஒரே ஆறுதல் மக்கள் கண்காணிப்புக்குழுதான். மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இதன் ஏற்பாட்டாளர். முன்னாள் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய அதன் தலைவர். வாசுதேவ நாணயக்கார, லக்ஸ்மன் கிரியெல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படப்பிடிப்பு: மகேஷ் பிரசாத்

சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் இந்தக் குழுவின் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளனர். தொடர்ச்சியான இவர்களுடைய முயற்சிகளால், "காணாமல்போகச் செய்யப்பட்ட" எவரும் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை என்றாலும், கண்காணிப்புக் குழுவின் முயற்சிகளின்மூலம் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சி இத்தகைய சம்பவங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவியிருக்கின்றது என்று சொல்லலாம்.

கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் காணாமல்போகச் செய்யப்பட்டோரின் உறவினர்கள் நண்பர்களை அழைத்து காணாமல்போகச் செய்யப்பட்டோரின் முழு விபரங்களையும் இப்போராட்டக் குழுவைத் திரட்டியுள்ள மக்கள் கண்காணிப்புக்குழு, 2007 ஏப்ரல் 9 மற்றும் ஜூலை 01ஆம் திகதிகளில் இரண்டு தொடர் கவன ஈர்ப்பு நிகழ்வுகளை கொழும்பில் நடாத்தியுள்ளது. எத்தகைய எதிர்ப்புகளோ, தடைகளோ வந்தாலும் காணாமல்போனவர்கள் மீட்கப்படும்வரை இந்தப் போராட்டம் தொடரும் என்று மனோ கணேசன் இந்த மாநாட்டில் கூறியிருந்தார்.

"கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது. திமிங்கிலங்களை விட்டுவிட்டு வெறும் சிறிய மீன்களை மாத்திரமே அரசாங்கம் கைதுசெய்திருக்கிறது" என்று இந்த நிகழ்வுகளில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், கடத்தப்பட்டவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள் என்ற கருத்து உண்மையாயின் இந்தப் பட்டியலிலுள்ளவர்கள் வெளிநாடு சென்றுள்ளார்களா என்பதை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டுமென்றார்.

பாராளுமன்றம் மற்றும் அவைகளுக்கு வெளியில் கடத்தல்கள் தொடர்பான பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இதில் கலந்துகொண்டிருந்தது. காணாமல்போன அன்புக்குரியவர்களை மீட்குமாறு கோரி நடத்தப்பட்ட இரண்டு மாநாடுகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கியிருந்தார்.

## கோரிக்கைகள்

இந்த மாநாட்டின் தொனிப்பொருள் "காணாமல் போனவர்களை மீட்போம்" மற்றும் "கடத்தல்களை முடிவுக்குக் கொண்டுவா" என்பதாக அமைந்திருந்தது. எனினும், இந்த விடயம் தொடர்பாக மேலும் சில கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டுமென உணர்ந்துகொண்ட ஏற்பாட்டாளர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்:

1. காணாமல்போகச்செய்யப்படும் சம்பவங்களை பாரிய குற்றமாக அறிவித்தல்.
2. காணாமல்போகச்செய்யப் பட்டோரைக் கண்டுபிடிப்பதற்கு ஐக்கிய நாடுகள் செயற்குழுவின் உதவியை நாடுதல்.
3. சர்வதேச சபாதின கண்காணிப்பு ஆணைக் குழுவொன்றை நிறுவி காணாமல் போகச்செய்யப்படும் சம்பவங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுத்தல்.
4. விருப்பத்துக்கு மாறாக காணாமல்போகச்செய்யப் படுவதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் ஐ.நா. சமவாயத்தை ஏற்றுக்கொள்தல்.

இவ்வாறு கோரிக்கைகள் இங்கே முன்வைக்கப்பட்டன. இவர்கள் கோரியிருந்ததுபோல, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் இலங்கை வந்து நிலைமைகளைப் பார்வையிட்டு இதுகுறித்த தமது நிலைப்பாட்டையும் வெளியிட்டார். ஆனால், இங்கு முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் செவிமடுக்கப்படுமா என்பது இன்னும் தெரியவில்லை.

தமது அன்புக்குரியவர்களுக்காகக் காத்திருக்கும் உறவுகளின் சோகம் ஒரு தொடர்கதையாக இன்னும் நீண்டு செல்வதைத் தவிர இதுவரையில் மாற்றங்கள் ஒன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பதற்கான பொறுப்பு - R2P



கரீத் இவான்ஸ்

"ஒரு நாட்டில் வாழும் மக்களைப் பாதுகாக்க வேண்டியது அந்த நாட்டு அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும். தனது இயலாமை காரணமாகவோ அன்றி விருப்பின்மை காரணமாகவோ அரசாங்கம் இந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறினால், மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கவேண்டியது பரந்த சர்வதேச சமூகத்தின் கடமையாகிறது. இதுவே சுருக்கமாக 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' (Responsibility to Protect - R2P) என்று சொல்லப்படுகிறது. இலங்கை இப்போது இந்த R2P நிலைமையிலேயே இருக்கிறது".

இவ்வாறு சர்வதேச நெருக்கடி குழுவின் (International Crisis Group) என்ற அமைப்பின் தலைவர் கரீத் இவான்ஸ் (Gareth Evans) கொழும்பில் கடந்த ஜூலை 24ஆம் திகதி, முரண்பாட்டுத் தீர்வுகளுக்கான சர்வதேச மையத்தின் அனுசரணையில் இடம்பெற்ற எட்டாவது நீலன் திருச்செல்வம் நினைவுப் பேருரையில் குறிப்பிட்டார்.

"கம்போடியா, ருவாண்டா, ஸ்ரேபிரேனிகா மற்றும் கொசோவா பாணியிலான பாரியளவிலான கொடூர நிலைமை இப்போது இங்கே காணப்படாமல் இருக்கலாம். அல்லது உடனடியாக அப்படியான ஒரு நிலைமை தோன்றும் சூழல் இப்போது இங்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், அத்தகைய ஒரு மோசமான நிலைமை ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை இப்போது இங்கே இருக்கிறது. எனவே, இது ஒரு R2P நிலைமைதான். சர்வதேச சமூகத்தின் உதவியுடன், இந்த நிலைமை இன்னும் மோசமடைந்து செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்பதையே இது வேண்டி நிற்கிறது" என்று திரு. இவான்ஸ் இந்த பேருரையாற்றும்போது கூறினார்.


"அண்மைக்கால இலங்கையின் வரலாறு பாரியளவிலான வெறியாட்டங்கள், பெரும் படுகொலைகள், மோசமான போர்க்குற்றங்கள் மற்றும் இனச்சுத்திகரிப்பு போன்றவற்றுக்கான அநேகமான உதாரணங்களைத் தருகிறது. இரண்டு தரப்புக்களும் ஏற்படுத்திவரும் நாசங்கள் இதனை இன்னும் மோசமாக்கி வருகின்றது. இரண்டு தரப்புகளிலிருந்தும் வரும் அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் அச்சத்தை மேலும் அதிகரித்து வருவதுடன், அடுத்த சுற்று மோதல்கள் இலங்கையின் குடிமக்களுக்கே மிகவும் கடினமானதாக இருக்கும் என்பதையே வெளிக்காட்டுகின்றன" என்று தனதுரையில் எச்சரிக்கை செய்த இவான்ஸ், இந்த உறுதியற்ற தன்மையானது உடனடியான சர்வதேசத் தலையீட்டை வேண்டிநிற்கிறது என்றும் வலியுறுத்தினார்.

> "அரசாங்கத்தால் மக்களைக் காப்பாற்ற முடியாவிட்டால் சர்வதேசம் அதனைச் செய்யவேண்டும்."

விடுதலைப் புலிகளாலும், அரச படையினராலும் நாற்றுக்கணக்கான கடத்தல்கள், காணாமல்போகச் செய்தல், கொலைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இங்கு குறிப்பிட்ட இவான்ஸ், இவை தொடர்பில் எவரும் தண்டிக்கப்படாத ஒரு சூழ்நிலையே இங்கு காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

"தன்னுடைய சொந்த மக்களையே இவ்வாறு ஒரு மோசமான ஆபத்துக்குள் சிக்கவைப்பதல்ல அரசாங்கத்தின் இறைமைப் பொறுப்பு" என்று திரு. இவான்ஸ் இங்கு கூறினார்.

இப்போதிருக்கும் வரலாற்று ரீதியான மற்றும் ஆய்வு ரீதியான ஆதாரங்கள் "விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்படுவது பெரும்பாலும் சாத்தியமற்றது" என்பதையே காட்டுகிறது என்று இங்கு குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு வலியுறுத்த முடியாது என்றும் தெரிவித்தார். "அரசியல் ரீதியான ஒரு அழுத்தம் மட்டுமே விடுதலைப் புலிகளிடமிருந்து பிரதிபலிப்பைக் காட்டக்கூடிய ஒரேயொரு அழுத்தமாகும்" என்று தனதுரையின் முடிவில் அவர் வலியுறுத்தினார்.



"ஒரு நாடு இனரீதியாக ஒருவரை பாகுபடுத்துகின்றதோ அங்கே படுகொலை நிறைந்த ஒரு சூழ்நிலைக்கே R2P தத்துவம் பொருந்தும். விடுதலைப் புலிகளால் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்ட இலங்கையின் சூழ்நிலைக்கு இது பொருந்தாது. பொருத்தமென்று கொண்டாலும் ஏனைய அரசியல் கட்சிகளும், குழுக்களும் சிங்களவர்களை விட தமிழர்களையே அதிகளவு அங்கத்தவர்களாகக் கொண்டிருந்தனர்" என்று இவான்ஸின் கருத்தை முற்றாக நிராகரித்தார், இலங்கையின் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் (SCOPP) பணிப்பாளரும், சப்பிரகமுவா பல்கலைக்கழகத்தின் மொழித்துறைப் பேராசிரியருமான ரஜீவ விஜேசிங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மீள் குடியேற்றங்கள்

கிழக்கில் பாதுகாப்புப் படைகள் தொடர்ச்சியாகப் பெற்ற இராணுவ ரீதியான வெற்றிகளைத் தொடர்ந்து அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களைத் தமது வீடுகளிலும் அவர்களுடைய சமூகங்களுக்குள்ளும் மீள்குடியேற்றுவதற்குப் பெருமளவிலான பாரிய மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக இதுவரையில் கிழக்கில் 95,000 பேர் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. இந்நடவடிக்கைகள் சிறிதளவு இயல்பு நிலையைத் தோற்றுவித்திருப்பதுடன், சமூகங்கள் மீளவும் தமது வீடுகளுக்குத் திரும்பக் கூடியதாகவும், தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை எடுக்கக் கூடியதாகவும் இருக்கின்ற போதிலும், இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ள விதம் சில முக்கியமான அக்கறைகளைத் தோற்றுவித்துள்ளது. கிழக்கில் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட விதம் குறித்து இந்தக் கட்டுரை பரிசீலனை செய்கிறது.

முதலில், என்னென்ன காரணிகள் மக்களின் இந்த மீள்குடியேற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை ஆராய வேண்டும். இரண்டுவிதமான காரணிகள் இவ்வாறு இந்த மீள் குடியேற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றன. அவை, தள்ளுகின்ற(Push) அல்லது இழுக்கின்ற(Pull) காரணிகளாக அமைந்துள்ளன. இழுக்கின்ற பிரதான காரணிகளாக பல தூண்டுதல்கள் உள்ளன. வீடுகளை மீள்புனரமைப்புச் செய்வதற்கான கொடுப்பனவுகள், உணவு உதவிகள், மீள்குடியேற்றுதலுக்கான இலவச போக்குவரத்து வசதிகள் என வெவ்வேறு வகையான காரணிகள் மக்களை மீள்குடியேற்றத்தை நோக்கி இழுக்கின்ற காரணிகளாக இருக்கின்றன. இடம்பெயர்ந்த சமுதாயங்களை மீள்குடியேறுமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தள்ளுகின்ற காரணிகளாக இருக்கின்றன. இடைத்தங்கல் முகாம்களில் காணப்படும் வசதிக்குறைவுகள், குறைந்தளவிலான உணவு விநியோகம், பாதுகாப்பின்மை மற்றும் வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புக்கள் இல்லாமை என்பவற்றை மக்களை






மிராக் ரஹீம்
முக்கிய ஆய்வாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் செப்டம்பர் மாத கணக்கெடுப்பின்படி இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 209,000 ஆகும். இதில் பெரும்பாலானவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.



மீள்குடியேற்றத்தை நோக்கித் தள்ளுகின்ற காரணிகளாகக் குறிப்பிட முடியும். இவை தவிர, இலவச உணவு விநியோகத்தை நிறுத்துதல், அரசியல் செயற்பாட்டாளர்கள் மூலம் இடம்பெயர்ந்தவர்களை கட்டாயமாக தங்களுடைய வீடுகளுக்குச் செல்லுமாறு அழுத்தங்கொடுத்தல் என்பன மீள்குடியேற்றத்தில் கூடியளவு செல்வாக்குச் செலுத்தும் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன.

## கிழக்கில் இடப்பெயர்வு

திருமலை 2006இல் அதிகரித்த வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகள் மற்றும் சமுதாயங்களை விட்டு வெளியேறத் தொடங்கினர். 2006 ஜூன் இல் கெப்பிட்டிகொலாவையில் இடம்பெற்ற பஸ் வண்டி மீதான கிளைமோர்த் தாக்குதலில் 60 பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னர் சிங்களக் கிராமங்களின் இடம்பெயர்வு பாரியளவிலான இடப்பெயர்வைப்போல், சில இடப்பெயர்வுகள் குறிப்பிட்ட சில சம்பவங்களின் உடனடி விளைவுகளாக அமைந்திருந்தன. இந்தச் சம்பவமும், இவ்வாறாக மேலும் பல சம்பவங்கள் நடக்கலாம் என்ற மக்களின் அச்சமும், அவர்களைத் தமது பிரதேசங்களைவிட்டு வெளியேற வைத்தது. முதலில் மாவிலாறு பின்னர் மூதூர் அதன்பின் ஈச்சிலம்பற்று, வாகரை இவற்றைத் தொடர்ந்து 2007இல் மட்டக்களப்பின் மேற்குப் பகுதி என கிழக்கில் புதிதாகக் களமுனைகள் திறக்கப்பட்டு நிகழ்ந்த யுத்தம் காரணமாக இங்கு வாழ்ந்த சமுதாயங்கள் இடம்பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப் பட்டன.

சம்பூர் போன்ற பிரதேசங்களில் நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சு, கனரகப் பீரங்கித் தாக்குதல், மற்றும் பரவலான இராணுவத்தினரின் நகர்வு போன்ற நேரடி வன்முறைகள், இப்பிரதேச மக்களை வலிந்து இடம்பெயர வைத்தன. போர்க்களங்களின் எல்லைகள் மாறுகின்றபோது சில சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் பல தடவைகள் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. சில சம்பூர் வாசிகளைப் பொறுத்தவரையில், போர் தெற்கு நோக்கி நகர்ந்தபோது ஆறு தடவைகள் அவர்கள் ஒரு கூடாரத்திலிருந்து இன்னொரு கூடாரத்துக்கென இடம்பெயர்ந்துள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் செப்டம்பர் மாத கணக்கெடுப்பின் படி இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 209,000 ஆகும். இதில் பெரும்பாலானவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## முகாம் வாழ்க்கை

இடப்பெயர்வின் அளவு, மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனங்களின் ஈடுபாடு, இடப்பெயர்வுக்கு அரசாங்கம் காட்டும் பதிலளிப்பு, பிரதேசங்களின் பாதுகாப்புச் சூழ்நிலை, அந்தப் பிரதேசத்தில் வழமையாக ஏற்படும் பருவநிலை என பல்வேறுபட்ட காரணிகளுக்கேற்ப இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகள் வேறுபடுகின்றன. இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் நலன்புரி முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டனர். இவை ஒன்றில் பொதுக் கட்டிடங்களாகவோ அல்லது கூடாரங்களாகவோ இருந்தன. சிலர் தமது நண்பர்கள் அல்லது உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர். முதல் சில நாட்களுக்கு தங்குமிடம் என்பது முக்கியமானதொரு பிரச்சினையாக இருந்தது. மூதூரிலிருந்து கந்தளாய்க்கு இடம்பெயர்ந்து வந்த முஸ்லிம்கள், அங்கு கட்டிடங்கள் பற்றாக்குறையாக இருந்ததனால், மரங்களின் கீழும், வீதியோரங்களிலும் உறங்க நிர்ப்பந்திக்கப்பட்டதாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்கள் வெளியாகியிருந்தன. உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கூடாரங்கள் மற்றும் இடைத்தங்கல் முகாம் வசதிகள் காரணமாக தங்குமிடப் பிரச்சினை பொதுவாகத் தீர்த்துவைக்கப்பட்டபோதும், குடிநீர் பெறுவது, மலசலகூட வசதிகள், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் தொடரும் பிரச்சினைகளாயிருந்தன. குறிப்பாக, 2007இன் முற்பகுதியில் மட்டக்களப்பில் அதிகளவில் இடப்பெயர்வு ஏற்பட்டபோது இப்பிரச்சினைகளும் மிக அதிகமாக இருந்தன.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தச் செய்வதில், முகாம்களில் இருந்த விரும்பத்தகாத சூழலும் ஒரு காரணியாக இருந்தது. முஸ்லிம்கள் கந்தளாய்க்கு இடம்பெயர்ந்தபோது பெய்த மழையினால் முகாம்களின் சூழல் பாதிக்கப்பட்டது. மழை நீர்மட்டம் உயர்ந்தபோது இயல்பாகவே கூடாரங்களில் வாழ்வது சாத்தியமற்றுப் போனது. மட்டக்களப்பை பொறுத்தவரையில் பாதுகாப்பு நிலைமைகள் மக்களை மிக அதிகளவில் பதட்டத்திற்குள்ளாக்கின. கருணா குழு மற்றும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் மற்றும் இளைஞர் ஆட்கடத்தல், பாதுகாப்புப் படைகளால் கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுத்துவைக்கப்படுதல், "இனந்தெரியாத குழு"வினரால் மேற்கொள்ளப்படும் கொலைகள் போன்றவை இதற்குப் பிரதான காரணங்களாக இருந்தன. வாரங்களையும் கடந்து மாதக்கணக்காக இடப்பெயர்வு தொடர்ந்தபோது முகாம் வாழ்க்கையானது விரக்தி மிக்கதொன்றாக மாறியது. வாழ்வாதாரம், கல்வி போன்ற தனிநபர் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாததால் இந்த நிலைமை மேலும் சலிப்பினை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. முகாம்களில் காணப்படும் சுகாதார நிலைமைகள் மற்றும் நெருக்கடி நிலைகள் நோய்களைத் தோற்றுவிப்பதற்குரிய சூழலை ஏற்படுத்தியதுடன், குறிப்பாக சிறுபிள்ளைகளிடையே இந்நிலைமையை அதிகரிக்கச் செய்தது.

### தங்குவதா அல்லது வெளியேறுவதா?

இடப்பெயர்வு நீடித்து விரக்தியும் உச்சக்கட்டத்திற்குச் சென்றபோது, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் காணப்பட்ட சூழ்நிலைகள் மீள் குடியேற்றத்தை ஒரு கவர்ச்சிகரமான தெரிவாக்கியது. அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்கள் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு, சுகாதார நிலைமைகளை மேம்படுத்தி, இடைத்தங்கல் முகாம் வசதிகளை வழங்கி, உணவு நிவாரணத்தை வழங்கியிருந்தால், மக்களை இடம்பெயர்வை நோக்கித் "தள்ளும்" காரணிகளை இல்லாமல் செய்திருக்க முடியும். இதனுடன், தாம் தமது வீடுகளிற்குத் திரும்பிப் போகாவிட்டால் தமது வீடுகள் மற்றும் சொத்துக்கள் சூறையாடப்படும் அல்லது சேதமாக்கப்படும் என்ற பயம் இடம்பெயர்ந்தவர்களிடையே வளர்ந்து வந்தது. மூதூர், வாகரை மக்களுக்கு குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிய உணவு நிவாரணம் மற்றும் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான நிதியுதவி என்பன அறிவிக்கப்பட்டபோது, அவை மீள்குடியேறுவதற்குரிய உந்துசக்தியாக அமைந்தன. இதனால் இடம்பெயர்ந்தோர் மீண்டும் தமது வீடுகளுக்குச்



“இடம்பெயர்ந்தோர் முகாம்களில் காணப்பட்ட சூழ்நிலைகள் மீள் குடியேற்றத்தை ஒரு கவர்ச்சிகரமான தெரிவாக்கியது.”

செல்வதற்குரிய பலமான விருப்பம் ஏற்பட்டது.

உள்ளூரில் இடம்பெயர்ந்தோரின் மீளக் குடியேறும் விருப்பம் அநேகமாக தவறான கண்ணோட்டத்தில் எடுத்துணரப்பட்டது. இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியேற விரும்புகிறார்களா இல்லையா என்ற கேள்வியல்ல முக்கியமானது. அவ்வாறு அவர்கள் மீள் குடியமர்வதானால், எப்போது? எந்தச் சூழ்நிலைகளின் கீழ் அவர்கள் மீளக்குடியமர்வது என்பதே இங்குள்ள கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு அவர்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பது தொடர்பாகவும், மீளத் திரும்பும் அவர்களது விருப்பம் தொடர்பாகவும் ஊடகங்களின் மூலமாகவும், பத்திரிகை அறிக்கைகள் மூலமாகவும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. எவ்வாறிருந்தபோதும், மீளத்திரும்புவதற்கான விருப்பம் என்பது நிபந்தனையற்றதாக இருக்கவில்லை. அச்சம் என்பதே பெரும்பாலான இடம்பெயர்ந்தோரால் இவற்றிற்குப் பிரதான காரணியாக முன்வைக்கப்பட்டுள்ளது. கிழக்கை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டுவிட்டதாக அரசாங்கத்தால் அறிவிக்க முடிந்தபோதும், விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் மற்றும் ஏனைய ஆயுதக்குழுக்களின் வன்முறை பற்றிய பயம் மக்களிடம் இருந்தது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள், இப்போது கருணா குழுவினரும், இராணுவத்தினரும் தாம் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்துடன் பார்க்கப்படலாம் என்று பயந்தனர். இதனால் தாம்

> “அவ்வாறு அங்கு பயங்கரம் நிலவுமெனில் எம்மை ஏன் மீண்டும் அங்கு கொண்டுசெல்ல வேண்டும்?”

ஏனைய குழுக்களால் பழிவாங்கப்படுவோமோ என்ற அச்ச உணர்வும் காணப்படுகின்றது. இப்போதும் தொடரும் சண்டைகள் பற்றிக் கேள்விப்படும்போது, தற்போதைய சூழல் பற்றிய அதிக நம்பிக்கை ஏற்படும் வரைக்கும் மீளத்திரும்புவதைப் பிற்போடுவது பற்றியே அவர்கள் பேசுகின்றனர்.

கிராமசேவையாளரையும், நலன்புரி முகாம் நிர்வாகிகளையும் "உங்கள் இடத்தைச் சென்று பாருங்கள்" எனக் கூறுவது மற்றும் சர்வதேச, உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களை அங்கு செல்ல அனுமதிப்பது என்பவற்றினூடாக அரசாங்கம் சந்தேகங்களைக் குறைத்திருக்கலாம். உதவி வழங்கும் முகவர்கள் அங்கு செல்வதை பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அரசாங்கம் தடுத்து நிறுத்துவதை பார்க்கும் மக்கள், "அவ்வாறு அங்கு பயங்கரம் நிலவுமெனில் எம்மை ஏன் மீண்டும் அங்கு கொண்டுசெல்ல வேண்டும்?" எனக் கேள்வி எழுப்புகின்றனர். மேலும், அவர்களில் கிராமங்கள் மிகவும் பின்தங்கியதாக இருப்பதாலும், வீடுகள் அழிக்கப்பட்டு இருக்கின்றமையாலும் மீள்குடியிருத்தல் தொடர்பாக இடம்பெயர்ந்த மக்கள் முன்னெச்சரிக்கையுடையவர்களாக இருக்கின்றனர்.

## நிர்ப்பந்தமா? அல்லது தன்னார்வ மீள்குடியேற்றமா?

ஓர் மனிதாபிமான நோக்கம் என்பதற்கும் அப்பால், மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பிலும், அவர்களுடைய வாழ்வை மீளக்கட்டியெழுப்புதல் தொடர்பிலும் அரசாங்கத்திற்கு வேறு காரணங்களும் உண்டு. இடம்பெயர்வதற்கும், வன்முறைகளிற்கும் முன்னர் இந்தக் கிராமங்கள் எப்படி இருந்தன, மீள ஒரு குறுகிய காலத்தினுள் எவ்வாறு அதனை மீளமைப்படுத்த முடிந்தது என்று காட்டுவதன் மூலம், சாதாரண இயல்பு வாழ்வை மீளக்கொண்டுவருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது ஒரு முதன்மையான நோக்கம். இராணுவத்தால் விடுவிக்கப்பட்டமையை ஒரு வெற்றியாகக் காட்டும் அரசியல் நோக்கமும் இங்கு காணப்படுகிறது. உண்மையில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட பெரும் அழுத்தத்திலிருந்து விடுதலை பெறவும் அதற்கு மீள்குடியேற்றம் தேவைப்பட்டது. பொருளாதாரரீதியான இடப்பெயர்வு ஏற்படுத்தும் சங்கடமான நிலைமையைத் தணிக்கவும்,



படப்பிடிப்பு: புத்திக்க வீரசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இடம்பெயர்ந்தோரின் தொகை அதிகரித்து அது மனித உரிமைக் குழுக்களால் மனிதப் பேரழிவிற்கான ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டபோது அதனைத் தணிக்கவும் அரசாங்கத்திற்கு மீள் குடியேற்றம் தேவைப்பட்டது.

என்ன காரணத்துக்காக மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதியாகக் கூறுவது கடினமாக இருந்தாலும், அது மேற்கொள்ளப்பட்ட விதம் அதன் நோக்கத்தை உணர்த்துவதாக இருக்கிறது. இடம்பெயர்ந்தோர் தாமாக மீள்குடியேற முன்வந்தபோது, பதிவுகளை மேற்கொள்ளல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உலருணவு வழங்குதல், வெடிபொருட்களை அகற்றுதல் போன்ற மிக முக்கியமான உதவும் படிமுறைகளை இடம்பெயர்ந்தோர் தொடர்பில் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இது அதிகமான முரண்பாடான செயல்முறைகளையும் உள்ளடக்குகின்றது. செப்ரெம்பர் 2006இல் கந்தளாயிலுள்ள முகாம்களிலுள்ள மக்களை பேருந்துகளில் ஏற்றி திருமலையில் அவர்களின் வீடுகளிற்கு அனுப்புவதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்தது. ஆயுதப் படைகள் இச்செயற்பாடுகளில் காத்திரமான பங்கை வகித்ததாகவும், மக்கள் தமது விருப்பத்திற்கு மாறாக மீள்குடியேறச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன. இந்தவகையாக மீள்திரும்பல் செயற்பாடுகள் வாகரையிலும், மட்டக்களப்பின் ஏனைய பகுதிகளிலும் திரும்பத்திரும்ப மேற்கொள்ளப்பட்டன. ஆனால், ஒவ்வொரு வெற்றிகரமான மீள்குடியேற்றச் செயற்பாடுகளிலும் இராணுவத்தின் பிரசன்னம் குறைவான மட்டத்திலேயே இருந்துள்ளது. இதைவிடவும், இடம்பெயர்ந்தோரில் மீளத்திரும்ப விரும்பாதவர்களுக்குரிய உணவு மற்றும் தங்குமிடம் முதலானவற்றை வழங்குவதற்குரிய மேலதிக திட்டங்களும் இருக்கவில்லை. இவ்வாறு செய்ததனூடாக, இந்த நாட்டு மக்கள் என்ற வகையிலும், இடம்பெயர்ந்தோர் என்ற வகையிலும், இலங்கை அரசியலமைப்பின் பிரகாரமும், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரகாரமும் மக்களின் உரிமைகளை அரசாங்கம் மறுதலித்துள்ளது.

திருகோணமலையின் கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் தங்கியிருந்த தமிழர்கள் பலவந்தமாக திருகோணமலை கிளிவெட்டி பிரதேசத்தில், அங்கு மீளக் குடியேறுவதற்கான எந்த அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படுவதற்கு முன்னரே மீள்குடியேற்றப்பட்டனர். இந்தப் பிரதேசம் மீளக்குடியேற்றத்துக்குப் பொருத்தமானதாக மாற்றப்படும் வரையில் மக்கள் அங்கும் இடம்பெயர்ந்தவர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டது.

> “தூய மனிதாபிமான நோக்கம் என்பதற்கும் அப்பால், மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு வேறு நோக்கங்களும் உண்டு”

## முடிவுரை

இடம்பெயர்தல் என்ற செயற்பாட்டினால் மன உளைச்சலுக்குள்ளானவர்களின் மீள்குடியேற்றம் என்பது ஒரு சூதாட்டம் போலக் காணப்படுகிறது. ஏற்கனவே இடம்பெயர்தலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள், மீளத் திரும்பினாலும் மீண்டும் தாம் இடம்பெயர நிர்ப்பந்திக்கப் படலாம் என்று அஞ்சுகின்றனர். மீளத் திரும்பியவர்கள் அங்கு எதிர்கொள்ளும் நிலக்கண்ணிவெடி போன்ற பாதுகாப்புச் சிக்கல்கள், சொத்தழிவு மற்றும் இழப்பு, தமது குடும்ப உறுப்பினர்களில் ஒருவரை இழந்துவிட்டதாலோ, பாதுகாப்புக் காரணங்களுக்காகவோ தமது வாழ்வாதாரங்களை எப்போதுமே மீளக் கட்டியெழுப்பமுடியாத நிலைமை போன்றவற்றால் மீள்குடியேற்றம் என்பது சவால் மிகுந்த ஒன்றாகவே இருக்கிறது. குறைந்தபட்சம் ஆரம்ப மாதங்களிலாவது தமது வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்ப முடியாத காரணத்தினால் உணவு நிவாரணத்திலேயே முற்றாகத் தங்கியிருக்கவேண்டிய நிலை அவர்களுக்குக் காணப்படுகிறது. ஆகக் குறைந்தபட்சம், இடம்பெயர்ந்தவர்களின் அச்சங்கள் மற்றும் சவால்களைக் புரிந்துகொள்வதன் மூலம், அவர்களின் அச்சங்களை நீக்கவும், துன்பங்களைப் போக்கவுமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மனித உரிமைக் கழகத்தின் பங்கு

தேசிய மற்றும் சர்வதேச கலந்துரையாடல் அரங்குகளில் இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களைப் பற்றி பெருமளவில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. வழக்கமாக இவ்வாறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவரும் கலந்துரையாடல் அரங்கம், ஜெனிவாவிலுள்ள மனித உரிமைக் கழகம்தான் Human Rights Council. இக்கட்டுரை, மனித உரிமைக் கழகத்தின் பங்கு பற்றியும், இலங்கையுடனான அதன் பொருத்தப்பாடு பற்றியும் விரிவாக ஆராய்கிறது.

## மனித உரிமைக் கழகம் என்றால் என்ன?

60 வருடங்களாக நிலைத்திருந்த மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மாற்றீடாக, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் தீர்மானம் 60/251 இனால் 15 மார்ச் 2006 ல் மனித உரிமைக் கழகம் உருவானது. மனித உரிமைக் கழகத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஜூன் 2006ல் நடைபெற்றது. செப்டெம்பர் 2007ல் தொடங்கப்பட்ட அதன் ஆறாவது அமர்வு, டிசம்பர் 2007ல் தொடர்வதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.


## ஆணைக்குழுவிலிருந்து கழகத்திற்கு

உருவாகி 60 வருடங்களைக் கடந்த நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, பழமை வாய்ந்ததாக இருந்ததோடு, உலகில் மாறிவரும் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான சவால்களை வெளிப்படுத்தவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அத்துடன், மனித உரிமைகள் சம்பந்தமாக மோசமான சரித்திரங்களைக் கொண்ட அக்குழுவின் சில உறுப்பு நாடுகளான கியூபா, சூடான் மற்றும் லிபியா போன்றவை, அக்குழு தனது இறுதிக்கட்டத்தில் சேர்த்துவைத்த மதிப்பிற்கும் திறமைக்கும் ஒரு குறியீடாகவிருக்கின்றன.

மாற்றத்திற்கான தேவையை உணர்ந்த அப்போதைய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான், "பெரியளவிலான சுதந்திரம்" என்ற தலைப்பிலான அறிக்கையில் குறிப்பிடும்போது, இம்மனித உரிமைக் குழுவின் "நம்பிக்கையும் தொழில்திறனும் குறைந்து வருகிறது" என்றும், "அது முழு ஐக்கிய நாடுகள் சபையின் நடைமுறையின் புகழையுமே களங்கப்படுத்திவிடும்" என்றும் குறிப்பிட்டிருந்தார். இக்குழுவுக்கு மாற்றீடாக சிறிய அளவில், "உயர்வான மனித உரிமைத் தராதரங்களுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட நாடுகளைக் கொண்ட" ஒரு மனித உரிமைக் கழகம் அமைக்கப்படவேண்டுமென அவர் பரிந்துரைத்தார்.

## மனித உரிமைக் கழகத்தின் அங்கத்துவம்

மனித உரிமைக் கழகத்தில் ஒரு நாடு அங்கத்துவம் வகிக்கவேண்டுமெனில், அது 191 அங்கத்தவர்களைக்கொண்ட ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினது 96



பவானி பொன்சேகா
ஆய்வாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: வ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் வாக்குகளைக் கட்டாயம் பெற்றிருக்கவேண்டும். மனித உரிமைக் கழக உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்போது "பொதுச்சபை அங்கத்தவர்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அதனை முன்னேற்றுவதற்காகவும் தமது பங்களிப்பைக் கொடுப்பதுடன், அவ்வாறான அர்ப்பணிப்புகள் பற்றிய உறுதிமொழிகளைத் தாமாகவே கொடுத்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்" என அவையின் தீர்மானம் குறிப்பிடுகிறது.

53 உறுப்பினர்களைக் கொண்டிருந்த மனித உரிமை ஆணைக்குழுவோடு ஒப்பிடும்போது, மனித உரிமைக் கழகத்தில் இவ்வெண்ணிக்கை குறைக்கப்பட்டு 47 ஆசனங்களாயுள்ளது. ஐக்கிய நாடுகளின் ஐந்து பிராந்தியக் குழுக்களுக்கு இவ்வுறுப்பினரவை பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: ஆபிரிக்கக் குழுவில் 13, ஆசியக் குழுவில் 13, கிழக்கு ஐரோப்பியக் குழுவில் 6, லத்தீன் அமெரிக்க மற்றும் கரிபியன் குழு (GRULAC)வில் 8, மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற குழு(WEOG)வில் 7. இலங்கை ஆசியக்குழுவில் அங்கம் வகிப்பதுடன், தற்போது மனித உரிமைக் கழகத்தின் உறுப்பு நாடாகவுமுள்ளது.

மனித உரிமைக் கழக உறுப்பினர் பதவி தொடர்ந்த இரு தவணைகளுக்கென மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் எந்தக் கழக உறுப்பினர் நாடும் இடைநிறுத்தப்படலாம்.

### துணை ஆணைக்குழுவும் தனியான நடைமுறைகளும்

மனித உரிமைகளை முன்னேற்றுவதும் பாதுகாப்பதும் சம்பந்தமான துணை ஆணைக்குழு தான் மனித உரிமைக் கழகத்தின் பிரதான நிறுவனம். அது 26 தெரிவுசெய்யப்பட்ட மனித உரிமைகள் வல்லுனர்களைக் கொண்டது. இவ்வல்லுனர்கள் நடைமுறைகள் பற்றிய வேலைகளை ஆராய்ந்து, இன, தேசிய, மத, மொழி மற்றும் சிறுபான்மை இனங்கள் என்பன சட்டபூர்வமாகப் பாதுகாக்கப்படவேண்டுமென்பதை உறுதிசெய்யப் பரிந்துரை செய்வார்கள்.


"விசேட நடைமுறைகள்" என்ற மனித உரிமை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட ஒரு நடைமுறை, பின்னர் மனித உரிமைக் கழகத்தினாலும் தொடரப்பட்டது. இந்த விசேட நடைமுறைகள், குறிப்பிட்ட சில நாடுகளில் நடக்கும் மனித உரிமை மீறல்களையோ அல்லது உலக மனித உரிமைகள் பிரச்சனைகளையோ கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. இந்த விசேட நடைமுறைகள் என்பது, ஒரு குறிப்பிட்ட தனிநபரோ, மனித உரிமைகள் சிறப்புப் பிரதிநிதியோ அல்லது சுயாதீன வல்லுனரோ அல்லது வழமையாக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகவோ இருக்கலாம்.

### உலகளாவிய கால நிகழ் மீளாய்வு

மனித உரிமைக் கழகத்தின் பிரதான பணியானது, சகல 192 ஐக்கிய நாடுகள் உறுப்பினர் நாடுகளின் மீதான மீளாய்வுகளைக் கொண்டுள்ளது. இம்மீளாய்வு உலகளாவிய காலநிகழ் மீளாய்வு (Universal Periodic Review - (UPR) எனப்படும். இம்மீளாய்வுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட வெவ்வேறு மூலங்களிலிருந்து வரும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. மூன்று மணித்தியாலங்கள் நடைபெறும் வாதப்பிரதிவாதங்கள் மூலம் ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலையையும் ஆராயப்படும். இலங்கை பற்றிய இம்மீளாய்வு வரும் 2008ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெறவுள்ளது.

### மனித உரிமைக் கழகமும் இலங்கைக்கான அதன் பொருத்தப்பாடும்

மனித உரிமைக் கழகமும் அதன் உறுப்பினர்களும், பிரதானமாக மனித உரிமைகளை முன்னேற்றுவதும் கண்காணிப்பதும் கட்டாயமானது. மனித உரிமைக் கழகத்தின் உறுப்பு நாடு என்ற வகையிலே மனித உரிமைகளை மதித்துக் காப்பாற்றி முன்னேற்றுவது இலங்கையின் கடமையாகும். வெவ்வேறான மனித உரிமைக் கழகக் கூட்டத்தொடர்களிலே இலங்கையில் மனித உரிமைச் சூழ்நிலைகள் பற்றிப் பல சந்தர்ப்பங்களில்



**மனித உரிமைக் கழகத்தின் உறுப்பு நாடு என்ற வகையில் மனித உரிமைகளை மதித்துக் காப்பாற்றி முன்னேற்றுவது இலங்கையின் கடமையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளது. பல தடவைகள் அவரது மனித உரிமைப் பணிகள் பற்றிய கேள்விகள் எழுந்துள்ளன. மிக அண்மையில் மனித உரிமைக் கழகத்தின் ஆறாவது கூட்டத்தொடரின்போது, இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமாகிக்கொண்டு போவதுபற்றி அறிவதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. அவ்வமையமான கூட்டத்தொடர்களில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இலங்கை பற்றிய அறிக்கை, சிறப்புப் பிரதிநிதியின் சமய நம்பிக்கைகள் மீதான சுதந்திரம் பற்றிய அறிக்கை, பொதுச்செயலாளரின் சிறப்புப் பிரதிநிதியின் சிறுவர்களும் ஆயுதப்போரும் பற்றிய அறிக்கை மற்றும் கழகத்தின் கவனத்தைக் கோரும் மனித உரிமைகள்



சூழ்நிலைகள் போன்றவை கலந்தாலோசிக்கப்பட்டன.

இலங்கை பற்றிய கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டாலும் கூட, இலங்கையில் நடந்துவரும் மனித உரிமை நிலைமைகள் பற்றிய எந்தவித நடவடிக்கையும் மனித உரிமைக் கழகத்தினால் இன்னும் எடுக்கப்படவில்லை. செப்டெம்பர் 2007ல் பல உறுப்பு நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பரின் இலங்கை விஜயம் பற்றி அக்கறை கொண்டிருந்ததுடன், அவர் நிலைமைகளை ஆராய்வதற்காக ஒக்டோபரில் இலங்கை வந்து சென்றபின்னர் அதுபற்றி அறிவதற்கும் ஆர்வம் காட்டினர். தனது இலங்கை விஜயத்தின் முடிவினையடுத்து உயர்ஸ்தானிகர் வெளியிட்ட காட்டமான அறிக்கையில், இலங்கையின் சூழ்நிலைகள் பற்றித் தாம் கவலைப்படுவதாகவும், விரைவான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கை பற்றிய அறிக்கையில் அவரது அறிக்கை முழுமையில் இடம்பெறும். அத்துடன் 2008 மார்ச் கூட்டத்தொடரில் அவரது இலங்கை மனித உரிமைகள் பற்றிய விரிவான ஆய்வறிக்கை முக்கிய பல உண்மைகளைக் கொண்டதாக அமையும்.

மனித உரிமைக் கழகத்தின் முதலாவது வருடத்தில், அது உலகின் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தப் பல சந்தர்ப்பங்களில் தவறியமையானது அதிருப்தி ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைக் கழகத்தின் எதிர்காலம் எவ்வாறாகும் என்பதை நிச்சயப்படுத்த இன்னும் காலம் தேவைப்படும். அதேநேரம், அதன் ஆரம்பகால நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, மாறிவரும் உலகில் மனித உரிமைகளைத் திறமையாகப் பாதுகாப்பதில் அது மிகவும் மெதுவாகவும், திறனையற்றதாகவும் செயற்படுவதாகவே தெரிகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதைப் பற்றிய ஆர்வம் அதிகமாகத் தெரிகின்றபோதிலும், இலங்கையின் நடப்பு நிலையில் மாற்றங்களைக் கொண்டுவரும் தைரியம் அங்கத்துவ நாடுகளின்

**“தேசிய மனித உரிமை நிறுவனங்கள் மனித உரிமை மீறல்களை வெளியிடத் தவறிய நிலையில், சர்வதேச சமூகத்திடமிருந்தும் மனித உரிமைக் கழகத்திடமிருந்தும் பெரியதான ஒரு எதிர்பார்ப்பு ஏற்படுகிறது.”**

அறிக்கைகளுக்கு இருக்கிறதா என்பது தெரியாமலுள்ளது. உயர்ஸ்தானிகரின் சிறப்பு நடவடிக்கைகளும் இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமாகிவருவதையும், தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரம் தோன்றிவருவதையும் குறிப்பிடு கடுமையான ஒரு அறிக்கையை மனித உரிமை கழகத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் வெளியிட்டு, இலங்கையில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளின் அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தி, இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க அதன் மூலம் நடவடிக்கையெடுக்க முன்வர வேண்டும்.

தேசிய மனித உரிமை நிறுவனங்கள் மனித உரிமை மீறல்களை வெளியிடத் தவறிய நிலையில், சர்வதேச சமூகத்திடமிருந்தும் மனித உரிமைக் கழகத்திடமிருந்தும் பெரியதான ஒரு எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. மனித உரிமைகள் கழகம் உருவானபோது இருந்த எதிர்பார்ப்புகள் உண்மையில் நடக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையில் அமைக்கப்படவேண்டும்


- லூயிஸ் ஆர்பர்

2007 ஒக்டோபர் இரண்டாம் வாரத்தில் இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார், ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதகுருமார் உட்பட பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக நேரடியாக அறிந்துகொண்டார்.

கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் காணாமல்போனோரின் உறவினர்களை மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் அவர் நேரில் சந்தித்து உரையாடியமை இவரது விஜயத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. இவருடைய யாழ் விஜயம் அவரே சொன்னதுபோல் இராணுவத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த போதும், யாழ் ஆயர் உட்பட மக்கள் பிரதிநிதிகளையும், சில காணாமல்போனோரின் உறவினர்களையும் அவர் நேரில் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

ஐ.நா. வின் மூன்றாவது நிலை உயர் அதிகாரியும், யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் முன்னாள் குற்றவழக்குரைஞருமான லூயிஸ் ஆர்பர் அம்மையார், தனது நான்கு நாள் இலங்கை விஜயத்தின் நிறைவாக கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் நடாத்தியிருந்தார். இங்கே கருத்துத் தெரிவித்த அவர், இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமைக்கு முகம் கொடுப்பதற்கு வெறுமனே தொழில்நுட்ப உதவிகளோ, பயிற்சிகளோ வழங்கப்படுவதால் பயனில்லை எனவும், ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகம்(OHCHR) இலங்கையில் அமைக்கப்படவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

தனது விஜயத்தின் நிறைவாக லூயிஸ் ஆர்பர் அம்மையார் வெளியிட்ட ஊடக அறிக்கையை இங்கே முழுமையாகத் தருகிறோம்.



என்னை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்த அதிமேதகு ஜனாதிபதிக்கும் எனது நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்த இலங்கை அரசாங்கத்துக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமது நிலைப்பாடுகள் தொடர்பாக என்னுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் அரசாங்க அதிகாரிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சக ஐ.நா. அதிகாரிகளுக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். தமது சொந்த அனுபவங்கள் தொடர்பான ஆதாரங்களுடன் வந்து என்னைச் சந்தித்தவர்களுக்கும் குறிப்பாக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்கம் 26ஐ பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்ன செய்யவேண்டும் என்பதை நாமே தீர்மானிப்போம்

- மஹிந்த சமரசிங்க

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் [illegible] ஐக்கிய நாடுகள் [illegible] ஆணையாளர் [illegible] அம்மையார் [illegible] நிறைவாக நடாத்திய [illegible] மாநாட்டில் [illegible] கருத்துக்களுடன் [illegible] அமைச்சர் மஹிந்த [illegible] மனித உரிமை [illegible] அலுவலகம் [illegible] சமரசிங்க [illegible] திட்டவட்டமான [illegible] தெரிவித்தார்.

[illegible] நாம் [illegible] ஆணையாளர் போன்றவர்கள் [illegible] ஆனால் [illegible] என்ன செய்யவேண்டும் என்பதை நாமே தீர்மானிப்போம் என்று [illegible] மாநாட்டில் [illegible] குறிப்பிட்டார்.

இலங்கையில் [illegible] மனித உரிமை [illegible] இலங்கை அரசாங்கத்தின் [illegible] மனித உரிமைகள் [illegible] அமைச்சர் மஹிந்த சமரசிங்க [illegible] வெளியிட்ட அறிக்கையை [illegible] தருகின்றோம்.

ஆணையாளர் அதிகாரிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்வேறு அரசாங்க மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை அவர் சந்தித்திருந்ததுடன், யாழ் அரசு மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்திப்பதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தன. அவருடைய கோரிக்கைக்கு அமைய வெறுமனே யாழ்ப்பாணத்திலும் எந்தவொரு பாதுகாப்பு அதிகாரிகளின் பிரசன்னமும் இன்றி சுதந்திரமான சந்திப்புக்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தன.

அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கும் பல விடயங்கள் தொடர்பாக அவருடைய ஊடக அறிக்கை கேள்வியெழுப்பியிருந்தது. உதாரணமாக, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு அவசரமாகக் கொண்டுவர அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்கும் மேலதிகமாக, 17வது அரசியலமைப்புச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்புச் சபையை மீண்டும் அமைப்பதை ஆராய்ந்து இறுதிப்படுத்தும் முயற்சியில் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஈடுபட்டுள்ளது. வழமையான நடைமுறைகளின் படி, தெரிவுக்குழுவின் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் காத்திருக்கின்றோம்.

ஆணையாளர் குறிப்பிட்ட விசாரணை, குற்ற வழக்குத் தொடர்தல், தண்டனை வழங்குதல் போன்ற துறைகளைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். உரிய பயிற்சிகள் மற்றும் இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளது. ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்த, மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கான செயற்திட்டங்களும் ஏற்கனவே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் கண்காணிப்புக் குழு அல்லது ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகமொன்று அமைக்கப்பட வேண்டுமென சில தரப்பினர் விடுக்கும் கோரிக்கை தேவையற்றது என்பதை அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு ஊடகவியலாளர் மாநாட்டில் தெளிவாகக் கூறியிருந்தது. ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் குழுவில் ஏற்கனவே அங்கம் வகிக்கின்றனர் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப உதவிகள் எவை என்பதைப் பொறுத்து, செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவைகள் குறித்து கலந்துரையாடப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பக்கம் 24இன் தொடர்ச்சி)

நேற்றையதினம் நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு சென்றபோது எனக்கான வசதிகளைச் செய்துகொடுத்த இராணுவ அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அங்கு ஆயர் எனக்களித்த வரவேற்பையும், உபசரிப்பையும் நான் மகிழ்ந்து பாராட்டி நன்றி தெரிவிக்கின்றேன்.

அனைத்து சமூகங்களையும் பாதிப்பது குறித்து எனது கலந்துரையாடல்களின்போது நான் அறிந்துகொண்டேன். ஒதுக்கல், புறந்தள்ளல்கள், பாலியல் அசமத்துவம், பொது விடயங்கள் மற்றும் அரசியலில் பெண்களின் பங்களிப்புக் குறைவாகக் காணப்படுகின்றமை, வெளிநாடுகளில் வேலைசெய்பவர்களின்





கிழக்கு மாகாணத்துக்குச் செல்வதற்கு நேரம் இடம்தராமை குறித்துக் கவலையடைகின்றேன். சிறுவர்களைப் படைக்கு ஆட்சேர்த்தல், கட்டாய ஆட்சேர்ப்பு, வைத்தியர்களைக் கடத்துதல், அரசியல் படுகொலைகள் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள், மனிதநேயச் சட்ட மீறல்கள் தொடர்பான எனது ஆழ்ந்த அக்கறையை அவர்களுக்கு நேரில் தெரிவிப்பதற்கு கிளிநொச்சிக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைக்காமையை இட்டும் வருந்துகிறேன். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களின் மீறல்கள் தொடர்பாக எனக்குக் கிடைத்த அறிக்கைகள் குறித்தும் நான் கவனம் செலுத்தியுள்ளேன்.

மோதலுடன் தொடர்புடைய விடயங்களால் மேற்கிளம்பும் பெரும்பாலான மனித உரிமை விவகாரங்கள் உரிமைகள் மற்றும் சமூக சுதந்திரம் போன்றன இதற்குள் அடங்கும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்னரும், சமாதானத்தை ஏற்படுத்திய பின்னரும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் சவாலாகவே இருக்கும் என்பதுடன், இந்த விடயங்கள் மீது அதிகூடிய கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் தேசிய பாதுகாப்புச் செயன்முறைக்கு பல அடிப்படை விடயங்கள் அவசியமாக உள்ளன. பெரும்பாலான சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களை அது ஏற்றுக்கொண்டுள்ளது. நியாயப்படுத்தக்கூடிய மனித உரிமைகள் தொடர்பான பாதுகாப்புக்களை அது அரசியலமைப்பில் கொண்டிருக்கிறது. ஒரு நீண்ட ஜனநாயக மற்றும் சட்ட பாரம்பரியத்தையும் அது கொண்டிருக்கிறது. ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக அது ஒரு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கொண்டிருக்கிறது. இலங்கையில் சிறந்த செயற்றிறன் மிக்க ஊடகங்களும், அர்ப்பணிப்பு நிறைந்த சிவில் சமூகங்கள் ஏராளமான நன்மைகளும் காணப்படுகின்றன.

எனினும், ஆயுத மோதல்கள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அவசரகால நிலைமைகள் போன்றவற்றால், சட்டத்தின் ஆட்சி பலவீனமடைந்திருப்பதுடன், தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரமும் அபாயகரமான நிலையை எட்டியுள்ளது. பெரும் எண்ணிக்கையான படுகொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போதல்கள் தொடர்பான முறைப்பாடுகள் இதுவரை தீர்க்கப்படாமல் உள்ளன. நீண்ட, தீர்க்கப்படாத காணாமல்போதல் அறிக்கைகளையும், இவ்வாறான மீறல்களிலிருந்து எவ்வாறு தற்காத்துக்கொள்வது என்பது தொடர்பான பெறுதியான விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளையும் கொண்ட ஒரு நாட்டில் இவ்வாறான நிலைமை காணப்படுவது குறிப்பாகக் கவலையளிக்கும் விடயமாகும். இந்த விடயம் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக அரசாங்கம் சுட்டிக்காட்டினாலும், இவ்வாறான பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பாக நம்பகமானதும், போதியளவு வெளிப்படுத்தல்களுக்கு பதில்கூறுவதான நிலைமை இன்னமும் தேவைப்படுகிறது. கடுமையான விசாரணைகளோ, குற்றவழக்குத் தொடரல்களோ, தண்டனைகளோ இல்லாத நிலையில் இவையெல்லாம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுக்கு வரும் என்று நம்புவது கடினமாக உள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவான ரீதியான உட்கட்டமைப்பை இலங்கை கொண்டுள்ளபோதும், பாதுகாப்புக்கு அவசியமான பல விடயங்கள் நலிவுற்றிருப்பதுடன், விட்டுக்கொடுக்கவும் பட்டுள்ளது. சிங்கராசாவின் வழக்கில், உள்நாட்டுச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல ஒப்பந்தங்கள் உயர்நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவென பாராளுமன்றத்தில் இந்த வருடம் அரசாங்கம் முன்மொழிந்த சட்டமூலங்கள், இந்தப் பிரச்சினைக்கு பகுதியளவிலேயே முகம்கொடுப்பதுடன், தேசியச் சட்டத்தில் காணப்படும் வேறுபட்ட உரிமைகள் தொடர்பான குழப்பத்தையும், ஆபத்தையுமே ஏற்படுத்துகிறது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தேசியளவில் காணப்படும் நடைமுறைகள் போதுமானது என்று கலந்துரையாடல்களின்போது அரசாங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தியபோதும், இயலளவு கட்டியெழுப்பப்படுவதற்கும், சர்வதேச சமூகத்திடமிருந்தான மேலதிக உதவிகளையும் அது வேண்டிநிற்கிறது. இதற்கு முரணாக, பெரும்பாலான ஆபத்தான மனித உரிமை துஷ்பிரயோகங்களிலிருந்து போதியளவு பாதுகாப்பளிப்பதற்கு தற்போதிருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் இயலளவு குறித்த தமது நம்பிக்கையீனத்தை, என்னைச் சந்தித்த பல அரசியல் கட்சிகளும், பல்வேறு சமூகங்களும் வெளிப்படுத்தின.

இந்த விடயத்தில் தமது வரையறுக்கப்பட்ட நிலைமையை சில அமைப்புகள் தாமாகவே ஏற்றுக்கொண்டுள்ளன. சில அரசாங்க அதிகாரிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். சாட்சிகளுக்கு உதவும், அவர்களைப் பாதுகாக்கும் செயல்பூர்வமான ஒரு நடைமுறை இல்லாமை தமது பணிகளை முன்னெடுப்பதில் பெரும் தடையாக இருப்பதாக அவர்கள் மேலும் வலியுறுத்தினர். என்னுடைய பார்வையில், பொது விசாரணைகளை நடாத்துவதன்மூலம் இந்த ஆணைக்குழு மக்களுடைய நம்பிக்கையையும், ஆதரவையும் வென்றெடுக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். விசாரணைகளுக்கான ஆணைக்குழு என்பது தொடர்ச்சியாக இடம்பெறும் எந்தவொரு அதிர்ச்சியளிக்கும் சம்பவங்களுக்கும் தற்காலிகமாகப் பதிலிறுக்கும் முறையுமே தவிர, சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்கல் முகவர்களுக்கான பதிலீடாக அது இருக்க முடியாது. ஒரு முழுமையான, செயல்பூர்வமான மனித உரிமைகள் பாதுகாப்பு செயன்முறையின் தேவையை முன்னோக்கிப் பார்க்கும் சிந்தனையைத் திசைதிருப்பும் ஒன்றாகவும் அது அமைந்துவிடக்கூடாது.

இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த காலத்தில் முன்னிலை பங்கு வகித்துள்ளது. எனினும், ஆணையாளர்களின் நியமனத்தில் ஏற்பட்ட சர்ச்சைகள் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு மீதான நம்பிக்கை பாதிக்கப்பட்டுவிட்டது. ஒழுங்கான முறையில் பொது விசாரணைகளை நடாத்துவதிலும், பொது அறிக்கைகளை வெளியிடுவதிலும் அது தவறியதன் காரணமாக,

**“ நீண்ட, தீர்க்கப்படாத காணாமல்போதல் அனுபவங்களையும், இவ்வாறான மீறல்களிலிருந்து எவ்வாறு தற்காத்துக்கொள்வது என்பது தொடர்பான போதியளவு விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளையும் கொண்ட ஒரு நாட்டில் இவ்வாறான நிலைமை காணப்படுவது குறிப்பாகக் கவலையளிக்கும் விடயமாகும். ”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவின் ஆற்றல் மற்றும் சுதந்திரத்தன்மை பற்றிய நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இவ்வாறான அமைப்புக்களை நிர்வகிக்கும் சர்வதேசப் பிரிவின் அங்கீகாரத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு இழக்க நேரிடலாம்.

எனது பார்வையில், இலங்கையின் மனித உரிமை பாதுகாப்பில் காணப்படும் குறைபாடானது, வெறுமனே அதன் இயலளவு தொடர்பான ஒரு பிரச்சினை மட்டுமன்று. சில குறிப்பிட்ட விடயங்களில் பயிற்சியும், சர்வதேச நிபுணத்துவ உதவியும் அவசியம் என்பதும், அதனை அரசாங்கம் வரவேற்கிறது என்பதையும் நான் விளங்கிக்கொள்கின்றேன்.

**“இவ்வாறான அமைப்புக்களை நிர்வகிக்கும் சர்வதேசப் பிரிவின் அங்கீகாரத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு இழக்க நேரிடலாம்.”**

அதேநேரம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்களை அறிந்து, நம்பத்தகுந்த அதிகாரபூர்வமான தகவல்கள் இல்லாமையிலேயே இலங்கையின் மனித உரிமை நிலைமைகளின் குறைபாடுகள் வேர்விட்டுள்ளன என்று நான் நம்புகிறேன்.

தகவல்களை தமது பிரசார வெற்றிக்காக விடுதலைப் புலிகள் விசேடமாகக் கையாள்வதாகப் பலர் கூறுகின்றனர். எனது பார்வையில், மனித உரிமை விடயத்தில் சுதந்திரமான தகவல் சேகரிப்பு மற்றும் பொதுமக்களுக்கு அறிக்கையிடுவதான சேவையையே இது வலியுறுத்தி நிற்கிறது.

இந்த வழியில், இலங்கை அரசாங்கத்துக்கு உதவி வழங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு விரும்புகிறது. மனித உரிமை பாதுகாப்பு விடயத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது பற்றி தேசிய ரீதியில் விவாதங்கள் நடைபெறுகின்றன என்பதையும் நான் அறிவேன். தற்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள், மற்றும் குறிப்பாக மக்களின் உயிர்களுக்குக் காணப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு நோக்கும்போது, இலங்கை அரசாங்கத்துக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கும் இடையிலான எதிர்கால ஆக்கபூர்வமான உறவுநிலை தொடர்பாக இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்களுக்கு உடனடியான தீர்வொன்றைக் காணவேண்டுமென நான் நினைக்கின்றேன்.

இறுதி அவதானிப்பு: பலாத்காரமாக காணாமல்போகச் செய்யப்படுவதிலிருந்து எல்லா மக்களையும் பாதுகாப்பது தொடர்பான புதிய சர்வதேச ஒப்பந்தத்தை விரைவாக ஏற்றுக்கொள்வது குறித்து இலங்கை அரசாங்கம் பரிசீலிப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான ஆவணப்படுத்தல்களின் அடிப்படையில், உலகின் 105 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும் ரோம் ஒப்பந்தத்துடன் இணைவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டும்.



அவன் கொலையுண்டான்

அகாலத்தின் கொடுங்கரங்கள் அவனின்
இருப்பை இறுதியாக்கிடுதற்கும் இப்பால்
அவன் ஆற்றியது பற்றியும்
யாரும் அறிந்தவர்கள் மௌன அருகில்
இருக்கவில்லை.

அவனது ஓலங்களின் காது
செவிடான வேளைகள் - மோதிமாண்டன
முனகல்களை இலையற்ற நாய்கள் குரைத்தும்
கடமில.


அவன் கொல்லப்பட்டான் -
தேவைகளின் கூட்டப்படும்
வெள்ளி மிதுங்கும் நட்சத்திரங்களுக்கேயும்,
இடமாற்றங்களைத் தடுத்தல் வேண்டியும்,
அல்லது
துரோகியெனக் கலைபட்டுப்போனதாலோ,
இனசுத்திகரிப்பு உத்தரவின் பெயரிலோ,
உள்ளகப் பூசலோ,
மேலிடத்தின் பணிப்போ,
இவையன்றி -
வெறிக்கும் மதுவிலோ,
புத்தி மட்டாக்கும் அத்திபத்திலோ,
வேசையரி குறிப்பி
அது எதுவாயிருக்கலாம் -
அவனைக் கொன்றுபோட்டார்கள்.

ஏ. எம். ரஷ்மி
'காவுகொள்ளப்பட்ட வாழ்வு
முதலிய கவிதைகள்'
நன்றி: [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளைக்கு ஐந்து பேர் கொல்லப்படுகின்றனர் அல்லது காணாமல்போகின்றனர்



## மூன்று அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட கணிப்பீட்டு அறிக்கை

2007 ஜனவரி 1 இலிருந்து ஓகஸ்ட் 31 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் 1212 பேர் கொல்லப்பட்டு அல்லது காணாமல்போயுள்ளனர் என்று மக்கள் கண்காணிப்புக் குழு, சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் என்பன இணைந்து ஒக்டோபர் 31இல் வெளியிட்ட கணிப்பீட்டு அறிக்கை கூறுகிறது. இந்தக் காலப்பகுதியில் 662 பேர் கொல்லப்பட்டு, 540 பேர் காணாமல்போயிருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது. இதன்படி ஒரு நாளைக்கு ஐந்து பேர் கொல்லப்படுவோ அல்லது காணாமல்போகச் செய்யப்படுவோ செய்கின்றனர் என்று விபரம் தருகிறது அந்த அறிக்கை.

படுகொலைகள், காணாமல்போதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது அறிக்கையாக இது அமைகிறது என்று குறிப்பிடும் இந்த அமைப்புக்கள், இது முறைமையான இரகசிய அறிக்கை, பெயர்கள், இடங்கள், சம்பவங்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியிருப்பதாகவும் தமது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

மகாநாம திலகரத்ன தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் ஆகியோருக்கும், இதற்கு மேலதிகமாக விருப்பத்துக்கு மாறான, பலவந்த காணாமல்போகச்செய்தலுக்கு எதிரான ஐ.நா. செயற்குழு, சட்டத்துக்கு மாறான, தன்னிச்சையான கைதுகள், கடுந்தண்டனைகள் தொடர்பான ஐ.நா. விசேட பிரதிநிதி ஆகியோருக்கும் இந்த ஆவணம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக இந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

2007 ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் கொல்லப்பட்டோர் மற்றும் காணாமல்போனோர் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களை, பால், வயது, இனம் அவர்கள் சார்ந்த மாவட்டம் என்று அடிப்படையில் பட்டியல் படுத்தி இந்த அறிக்கை விபரம் தருகிறது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையும் இலக்கமும் தம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பெயர்களைப் பிரதிபலிப்பதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதிகரித்துச் செல்லும் மனித உரிமை மீறல்களை கோடிட்டுக் காட்டுவதற்கு அப்பால், இந்தச் சம்பவங்களின் போக்கை தமது அறிக்கை சுட்டிக்காட்டுவதாகவும் இந்த அமைப்புக்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளன.

சனத்தொகையின் குறிப்பிட்ட பிரிவினர் அசாதாரண அளவில் கொலைகள் மற்றும் காணாமல் போகச்செய்யப்படுவதால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை பட்டியலிடுகிறது.

* கொல்லப்பட்டோரில் 90% காணாமல்போனோரில் 97% ஆண்களாவர்.

### கொலைகள்: பால் ரீதியாக




| பால் | இல. | % |
|---|---|---|
| பெண் | 65 | 9.78 |
| ஆண் | 595 | 89.91 |
| பதிவு செய்யப்படாதவை | 2 | 0.30 |
| | 662 | 100.00 |


### காணாமல்போனோர்: பால் ரீதியாக




| பால் | இல. | % |
|---|---|---|
| ஆண் | 528 | 97.78 |
| பெண் | 11 | 2.04 |
| பதிவு செய்யப்படாதவை | 1 | 0.19 |
| | 540 | 100.00 |


* 60% மான காணாமல்போனோர், 45% மான கொல்லப்பட்டோர் 30 அல்லது அதிலிலும் குறைந்த வயதுடையோர்.

### கொலைகள்: வயது அடிப்படையில்




| பால் | இல. | % |
|---|---|---|
| 18 வயதுக்குக்கீழ் | 25 | 3.77 |
| 18 - 24 | 124 | 18.67 |
| 25 - 30 | 148 | 22.29 |
| 31 - 35 | 98 | 14.76 |
| 36 உம் அதற்கு மேலும் | 211 | 31.38 |
| பதிவு செய்யப்படாதவை | 58 | 8.73 |
| | 662 | 100.00 |

### காணாமல்போதல்: வயது அடிப்படையில்




| பால் | இல. | % |
|---|---|---|
| 18 வயதுக்குக்கீழ் | 45 | 8.33 |
| 18 - 24 | 144 | 26.67 |
| 25 - 30 | 127 | 23.52 |
| 31 - 35 | 84 | 15.56 |
| 36 உம் அதற்கு மேலும் | 73 | 13.52 |
| பதிவு செய்யப்படாதவை | 67 | 12.41 |
| | 540 | 100.00 |

தமிழர்கள்தான் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சனத்தொகையின் 18 வீதமேயாக இருந்தபோதும், கொல்லப்பட்டோரில் 78% மானோரும், காணாமல்போகச் செய்யப்பட்டோரில் 87% மானோரும் தமிழர்களேயாவர்.

### கொலைகள்: இன அடிப்படையில்





| இனம் | இல. | % |
|---|---|---|
| தமிழர் | 554 | 83.73 |
| முஸ்லிம்கள் | 43 | 6.48 |
| சிங்களவர் | 53 | 7.98 |
| பதிவு செய்யப்படாதவை | 12 | 1.81 |
| | 662 | 100.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்போதல்: இன அடிப்படையில்



- தமிழர்
- முஸ்லிம்கள்
- சிங்களவர்
- பதிவு செய்யப்படாதவை

| இனம் | இல. | % |
|---|---|---|
| தமிழர் | 426 | 78.89 |
| முஸ்லிம்கள் | 10 | 1.85 |
| சிங்களவர் | 19 | 3.52 |
| பதிவு செய்யப்படாதவை | 85 | 15.74 |
| | 540 | 100.00 |


இந்தச் சம்பவங்களில்,

- 14 மனிதநேயப் பணியாளர்களும், மதத் தலைவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.
- 9 மனிதநேயப் பணியாளர்கள் காணாமல்போயுள்ளனர்.
- 3 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- 5 ஊடகப் பணியாளர்கள் காணாமல்போயுள்ளனர்.
- 25 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- 43 சிறுவர்கள் காணாமல்போயுள்ளனர்.

பெரும்பாலான காணாமல் போதல்களும், கொலைகளும் சில மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளன. விசேடமாக யாழ் மாவட்டத்திலேயே இவற்றில் அதிகமானவை இடம்பெற்றுள்ளன. அறிக்கையிடப்பட்ட காணாமல் போதல் சம்பவங்களில் அரைவாசிக்கும் மேலானவையும், 28% மான அறிக்கையிடப்பட்ட கொலைகளும் யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றுள்ளன.

காணாமல்போதல்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்ததாக கொழும்பும்(14.4%) அதனையடுத்து மன்னார் மற்றும் வவுனியாவும்(7%), கொலைகளைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்ததாக மட்டக்களப்பும்(20%) அதற்கடுத்ததாக வவுனியாவும்(18%) இருக்கிறது.

## கொலைகள்: மாவட்ட ரீதியாக



- அம்பாறை
- அநுராதபுரம் / பொலநறுவை
- மட்டக்களப்பு
- கொழும்பு
- யாழ்ப்பாணம்
- மன்னார்
- திருகோணமலை
- வவுனியா
- ஏனையவை
- பதிவு செய்யப்படாதவை

| மாவட்டம் | இல. | % |
|---|---|---|
| அம்பாறை | 40 | 6.02 |
| அநுராதபுரம் பொலநறுவை | 13 | 1.96 |
| மட்டக்களப்பு | 145 | 21.99 |
| கொழும்பு | 11 | 1.66 |
| யாழ்ப்பாணம் | 178 | 26.81 |
| மன்னார் | 27 | 4.07 |
| திருகோணமலை | 76 | 11.45 |
| வவுனியா | 130 | 19.58 |
| ஏனையவை | 35 | 5.42 |
| பதிவு செய்யப்படாதவை | 7 | 1.05 |
| | 662 | 100.00 |

ஒட்டுமொத்தமாக, இளம் ஆண்கள் அதிகளவு மனித உரிமை மீறல்களுக்கு முகம்கொடுக்கின்றனர் என்பது தெளிவாகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே இது அதிகம். அறிக்கையிடப்பட்ட அனைத்து காணாமல்போதல்கள் மற்றும் கொலைகளில் சராசரியாக 22% மானோர் - ஐந்து பேருக்கு ஒருவர் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தமிழ் ஆண்களாக இருக்கின்றனர். இதற்கு மாறாக, நாட்டின் எந்தப் பகுதியிலும் ஒரு சிங்களப் பெண்ணும் காணாமல் போகவில்லை. ஆபத்து மிக அதிகளவில் பாதிப்புக்குக் கூடியதாகவே இருக்கிறது என்பதையும், இவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் இந்தக் குழுவின் மீது குவிக்கப்பட வேண்டும் என்பதையும் இது காட்டுகிறது.

## காணாமல்போதல்கள்: மாவட்ட ரீதியாக



- அம்பாறை
- மட்டக்களப்பு
- கொழும்பு
- யாழ்ப்பாணம்
- மன்னார்
- திருகோணமலை
- வவுனியா
- ஏனையவை
- பதிவு செய்யப்படாதவை

| மாவட்டம் | இல. | % |
|---|---|---|
| அம்பாறை | 15 | 2.78 |
| மட்டக்களப்பு | 39 | 7.22 |
| கொழும்பு | 78 | 14.44 |
| யாழ்ப்பாணம் | 271 | 50.19 |
| மன்னார் | 40 | 7.41 |
| திருகோணமலை | 20 | 3.70 |
| வவுனியா | 14 | 2.59 |
| ஏனையவை | 26 | 4.81 |
| பதிவு செய்யப்படாதவை | 37 | 6.85 |
| | 540 | 100.00 |

முழுமையற்ற தகவல்களை வைத்து இவற்றின் போக்கை மதிப்பிடுவது சிரமம் என்றாலும், கொலைகளும், காணாமல்போகச் செய்யப்படுவதும் படிப்படியாக ஜூலை மாதத்தில் குறைவடைந்து மீண்டும் ஓகஸ்டில் கூர்மையாக அதிகரித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்கத்தின் மறுப்புக்களுடன் முரண்படும் களநிலவரம்

ஜெகான் பெரேரா
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தேசிய சமாதானப் பேரவை
தமிழில்:

கடந்த மாதங்களில் கிழக்கில் நடந்த பெரும் இராணுவத் தாக்குதல்கள் போன்ற யுத்தச் செய்திகளும் வெளிவராத நிலையில் நாட்டில் போர் ஓய்ந்திருப்பது போலவே வெளிப்படையாகத் தோற்றமளிக்கிறது. கிழக்கில் விடுதலைப் புலிகளை வென்ற பின்னர் அவர்களின் வலுவான பிரதேசமான வடக்கிலும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடரவேண்டிய அவசியம் அரசாங்கத்திற்குப் பெரிதாக ஏற்படவில்லை. அதேபோலவே, புலிகளின் அதிரடியான வான் தாக்குதல்களும் நிறுத்தப்பட்டு விட்டன. இப்படி இருப்பதால் இதன் அர்த்தம் போரில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் போரிலிருந்து சற்று ஓய்வெடுக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மாறாக, இருதரப்பையும் சேர்ந்த தலைமைகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மறைமுகமான இராணுவத் தந்திரோபாயங்களைத் திட்டுகிறார்கள் என்றே கொள்ளவேண்டும் 1.

வழமையான போரில் ஈடுபடுத்தும் இராணுவத்தின் பாரிய அளவிலான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, சிறப்புப் படையணிகளின் மட்டுப்படுத்தப்பட்டளவிலான இராணுவ நடவடிக்கைகளையே அரசாங்கம் முன்னெடுப்பதாகத் தெரிகிறது.

1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், அவர்களின் அதிகாரத்திலுள்ள பகுதியில் வசிக்கின்ற பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து பெரும் அவதிப்பட்டு வருவது தான் அவர்களுக்குச் சிக்கலான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இப்பகுதிகளில் வாழும் மக்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்துத் தொடர்ந்தும் பீதியிலும் மனப்பிராந்தியிலும் வாழ்கிறார்கள். விடுதலைப் புலிகள் புதிதாக மக்களிடமிருந்து தியாகங்களை எதிர்பார்க்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதாவது, இத்தடவை அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் இரண்டாம் நபரையும் தம்முடன் இணைந்துகொள்ளுமாறு வலியுறுத்துவதாகத் தெரிகிறது.


வடக்கில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் பெருமளவிலான ஆட்சேர்ப்புகளுடன் ஒப்பிடும்போது, கிழக்கில் கருணா குழுவின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் குறைவானவையாகவே தென்படுகிறது. இலங்கை இராணுவத்துடன் போட்டியிடுவதற்குத் தேவையான அளவில் படைச்சேர்ப்புச் செய்யவேண்டிய கட்டாயம் விடுதலைப் புலிகளுக்கிருக்கும் அதேநேரம், கருணா குழுவுக்கு விடுதலைப் புலிகளுடன் போர் புரிய பெருமளவு படையினரைச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. இலங்கை இராணுவத்தால் பேணப்படும் கருணா குழுவுக்கு அப்படியான ஒரு அவசியமும் இருப்பதாகக் கொள்ள முடியாது. கருணா குழுவை அடக்கி வைக்காமலிருக்கும் அரசாங்கத்தை சர்வதேச சமூகமும், மனித உரிமைக் குழுக்களும் எதிர்த்துத் தெரிவிப்பதுதான் அரசாங்கத்திற்குத் தொல்லை தரும் விடயமாக இருக்கிறது.

கருணா குழுவினால் மேற்கொள்ளப்படும் சிறுவர்களைப் படையில் சேர்த்தல், மக்களிடமிருந்து கப்பம் பெறுதல், மற்றும் கிழக்கில் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடுதல் போன்றவை எந்தவிதத்திலும் நியாயமற்றது என்பதில் சந்தேகமேயில்லை. கருணா குழுவானது அரசாங்கத்தின் ஆதரவுடன் செயற்படுவதால், அவர்கள் சர்வதேசத் தரத்திற்குட்பட்ட ஒழுங்கு முறையில் நடப்பதைக் கண்காணிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். துரதிர்ஷ்டவசமாக, கருணா குழு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

## மறுப்பு

இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயத்தில் நாட்டில் பிரச்சினையே இல்லை என்று அரசாங்கம் இன்னமும் சொல்லிவருகிறது என்பது (வேறு விடயம்), மனிதநேய விவகாரங்களுக்குப் பொறுப்பான ஐ.நா. கீழ் துணைச்செயலாளர் நாயகம் திரு ஜோன் ஹோம்ஸ் இலங்கையில் தெரிவித்த கருத்துக்களே பெரும் கவனத்தை ஈர்க்கும் விடயமாக இருந்துள்ளது. கருணா குழுவின் ஆயுதங்களைக் களையுமாறு இலங்கை அரசாங்கத்தை அவர் வலியுறுத்தும் அதேநேரம், மனிதநேயப் பணியாளர்கள் தமது வேலைகளைச் செய்வதற்கு உலகிலேயே ஒரு மிக ஆபத்தான நாடு இலங்கை எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்கு அரசாங்கம் மிகவும் பலத்த கண்டனங்களைத் தெரிவித்து, சர்வதேச ரீதியில் இலங்கையின் பெயருக்குக் களங்கமேற்படுத்த அவர் முயல்வதாகவும் குற்றஞ்சாட்டியது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "மனிதநேயப் பணியாளர்கள் வேலைசெய்வதற்கு இலங்கை பாதுகாப்பான



செஞ்சிலுவைச் சங்க ஊழியர் படுகொலைக்கு எதிரான போராட்டம்

நாடல்ல என்ற சேர் ஜோன் ஹோம்ஸின் கூற்றை இலங்கை அரசாங்கம் முற்று முழுதாக மறுக்கிறது" என்று கூறியுள்ளார். அதேநேரத்தில், ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த பிரெஞ்சு மனிதநேய நிறுவனமாகிய ஏ.சி.எவ். இல் பணியாற்றிய 17 ஊழியர்கள் கிழக்கு மாகாணத்தில் பயங்கரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டமையையும், அதன் தாக்கங்களையும் இலங்கையின் மனிதநேயப் பணியாளர்கள் இன்னும் நினைவுகூருகிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு மனிதநேயப் பணியாளர்கள் ஆயுதம் தரித்த பொலிஸ் மற்றும் நூற்றுக்கணக்கான பயணிகள் முன்னிலையில் கொழும்பு புகையிரத நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்ட பின்னர் இரத்தினபுரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்குச் சில வாரங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இன்னொரு மனிதநேயப் பணியாளர் சுட்டுக்கொல்லப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படப்பிடிப்பு: அஜித் வீரசிங்க

செஞ்சிலுவைச் சங்க பணியாளருக்கு இறுதிவணக்கம் செலுத்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச

**"விடுதலைப் புலிகள் மீது சர்வதேச அழுத்தம் தேவையென அரசாங்கம் விரும்பினால், சர்வதேச சமூகத்தினர் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதில் போடப்பட்டுள்ள தற்போதைய தடைகளை அது நீக்கவேண்டும்."**

இதுகாலவரையிலும் இக்கொலையாளிகளை இலங்கை அரசாங்கத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை. அத்துடன், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வன்னியிலும் குறைந்தது நான்கு மனிதநேயப் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. உலகில் மிகப் பயங்கரமான நாடுகளின் பட்டியலில் இலங்கை கடைசி வரிசையில் இருக்கிறதோ இல்லையோ, இப்படியான போர்க்கால உண்மை நிலைதான் இலங்கையில் மனிதநேயப் பணியாளர்களைத் தமது உயிருக்குப் பயப்பட வைத்திருக்கிறது. மனிதநேயப் பணியாளர்கள் மட்டும் தமக்குப் பாதுகாப்பில்லை என்று உணரவில்லை. சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கூட, பயங்கரமான ஒரு சூழலிலேயே தாம் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதாக எண்ணுகிறார்கள். கடந்த வருடத்தில் சமாதானம், மனித உரிமைகள் மற்றும் அதிகாரப்பங்கீடு பற்றிய மக்கள் குழுக் கூட்டங்கள் ஆளும் அரசியல் கட்சி உறுப்பினர்களாலும் அவர்களின் கையாட்களினாலும் குழப்பியடிக்கப்பட்டன.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கின்றதென்று உணரும் மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களுக்கு அரசாங்கம் கொடுப்பதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல், விடுதலைப் புலிகளிடம் இருக்கும் குறைகளை விட அரசாங்கத்தின் குறைபாடுகளையே பெருமளவும் கண்டுபிடிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் போன்ற சர்வதேசத் தலைவர்களின் பேச்சுகள் கட்டுக்கடங்காத நிலைமைகளுக்கும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். சிறுவர்களைப் படையில் சேர்க்கும் கொடுமை வழமையாகவிருக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பிரதேசத்துக்கு திரு ஜோன் ஹோம்ஸ் செல்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கவில்லை. ஒரு விசாரணைக்கான வருகையின் மூலமாகவேனும் விடுதலைப் புலிகளுக்கு ஒருவித சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிடக்கூடாது என்று அரசாங்கம் கருதுவதே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**ஈடுபாடு**

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் ஆதரவுகளினால் விடுதலைப் புலிகள் பெருமளவான தமது பலத்தைப் பெற்றார்கள் என்பதை அரசாங்கம் அவதானித்ததனால்தான் அவர்களைச் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்த வேண்டுமென அது விரும்பியது. ஆனபோதிலும், விடுதலைப் புலிகளுடன் சர்வதேச சமூகம் தொடர்பு கொள்ளாததனால், அரசாங்கம் மீதான சர்வதேசத்தின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளும் அழுத்தங்களும் குறையும் என்பதே இதன் பாதக விளைவு. சூழ்நிலைகளைப் பற்றிய இரண்டாந்தரச் செய்திகளை விடவும் நேரடியாகப் பார்க்கும் சாட்சியங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவையாகவும், அதற்குரிய பதில் நடவடிக்கைகளைத் தூண்டிவிடக்கூடியவையாகவும் இருக்கும்.

விடுதலைப் புலிகள் மீது சர்வதேச அழுத்தம் தேவையென அரசாங்கம் விரும்பினால், சர்வதேச சமூகத்தினர் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதில் போடப்பட்டுள்ள தற்போதைய தடைகளை அது நீக்கவேண்டும். மக்களின் மனிதநேயப் பணிகளைக் கண்காணிக்கவெனச் சர்வதேச சமூகத்தினால் நியமிக்கப்பட்டவர்கள் வன்னிப் பகுதிக்குச் சென்று அங்கு நடப்பவைப் பார்த்தும் கேட்டும் அறிந்துகொண்டு, அதனால் விடுதலைப் புலிகளின் மீதான தமது அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்வார்கள். அத்துடன், இப்படியான வருகைகளால் விடுதலைப் புலி உறுப்பினர்களிடையேயும் அதன் நிர்வாகப் பிரிவுகளிடையேயும் கூட அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு மாற்றங்கள் ஏற்படலாம். இது, சர்வதேச ஈடுபாடென்பது இருவழிப் பாதையென்பதை விடுதலைப் புலிகள் உணரவைக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்காளர்களைப் பகிஷ்கரிக்குமாறு தூண்டியதன் மூலம் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு மறைமுகமாகப் பங்களித்த செயற்பாடு குறித்து, தேர்தலின் பின்னர் இடம்பெறும் சம்பவங்கள் காரணமாக சில விடுதலைப்புலி உறுப்பினர்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள் என்பது உறுதியே. சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த காலத்தில் சர்வதேச அளவில் அதிகளவு வியாபகத்தைப் பெற்றிருந்த சந்தர்ப்பத்திலேயே பலரும் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறினர். இனப்பிரச்சனைத் தீர்வு விவகாரத்தில் விடுதலைப் புலிகளைச் சமாதான வழிமுறைக்குத் திருப்பவேண்டுமென நினைப்பவர்கள் எல்லோரும், விடுதலைப் புலிகளைச் சர்வதேச சமூகத்திடமிருந்து ஒதுக்கிவிட முயலும் தமது செயற்பாடுகள் பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கை அரசாங்கமானது, அதன் உறுப்பினர்களிடமிருந்து நிதானமானவர்களை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக அதற்கு எதிராகச் செயற்படுவோரையே முன்னிலைப்படுத்துகிறது. அரசாங்கம் வன்முறையைப் பூசி மெழுகி பல்வேறுபட்ட ஊடகங்களும் செல்லாத கிராமப்புற மக்களை நம்பவைக்கலாம். இதனால் அது தனது ஆட்சியையும் தக்கவைத்துக் கொள்ளலாம். ஆனால், இந்த மறுப்புக்களெல்லாம், சர்வதேச சமூகத்தையோ அல்லது பல்வேறுபட்ட ஊடகங்கள் மூலம் சுதந்திரமாகத் தகவல்களைச் சேகரிக்கும் இலங்கையின் ஏனைய சமூகங்களையோ எவ்விதத்திலும் ஏமாற்றிவிட முடியாது. பொறுப்புணர்வோடும் நம்பிக்கையோடும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைக்கு இம்மாதிரியான நடவடிக்கைகள் உதவாது.

நன்றி: டெய்லி மிரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்ட விருது வழங்கும் நிகழ்ச்சியில், சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரியவின் ஊடக சுதந்திரத்தின் பாதுகாப்பிற்கான நீண்டகாலப் போராட்டத்தை இனங்கண்டு அவருக்கு கௌரவம் அளிக்கப்பட்டது.

'புதிய' செய்திப் பத்திரிகையின் ஆசிரியரான சுனந்த தேசப்பிரிய சுதந்திர ஊடக இயக்கத்தை ஆரம்பித்து நடத்திய முன்னோடிகளுள் ஒருவராவார். இலங்கையின் கருத்து வெளிப்பாடு மற்றும் ஊடக சுதந்திரத்தின் பாதுகாப்பிற்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் முன்னின்று செயற்படுபவர் அவர்.

அவர் தனது கருத்துக்களை ஊடகங்கள் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து வந்தார்.

யாழ்ப்பாணத்தின் பி.பி.சி. செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்டது பற்றி சுனந்த தேசப்பிரிய 'ராவய' விற்கு 29.10.2000ல் எழுதிய கட்டுரை கீழே வெளியிடப்படுகிறது. அக்காலத்தில் சுனந்த அழுத்திக் கூறியிருப்பதுபோல ஊடகவியலாளருக்கெதிரான ஆபத்துக்கள் என்பது வெறுமனே இடைக்கிடையான தற்செயலானவையல்ல. அக்கருத்துகள் எழுதப்பட்டு ஏழு வருடங்களுக்குப் பின்னரும் அப்பயங்கரம் இன்னும் இருக்கிறதா?

# ஒரு குடிமகனின் தினக்குறிப்பு

சுனந்த தேசப்பிரிய
ஏற்பாட்டாளர், சுதந்திர ஊடக இயக்கம்
தமிழில்: [illegible]

19ம் திகதியன்று, வழமைபோலவே நிமலராஜன் தனது கடைசிச் செய்தியறிக்கையைத் தொலைபேசி மூலம் பதிவுசெய்தார். குறிப்பாக, ஒக்டோபர் 10ல் நடைபெறும் பொதுத்தேர்தல் பற்றிய பயங்கரமான கதைகள் மற்றும் அறிக்கைகள் பற்றி அவருக்கு எழுதவேண்டியவைகள் நிறையவேயிருந்தன. ஆனாலும், அரசியல் துப்பாக்கிதாரிகள் அவரை நிரந்தரமாக மௌனப்படுத்தி விட்டனர். ஊடகத்தணிக்கையின் பயங்கரமான விளைவின் கடுமையான ஊடகவியலாளரின் கொலைகளுக்கு இது ஒரு கொடூரமான உதாரணமாகும்.

பயமென்பதையறியாத, எவருக்கும் தீங்குவிளைவிக்காத ஊடகவியலாளர் நிமலராஜன். ஊடகத் தொழிலுக்குத் தம்மை உண்மையாக அர்ப்பணித்தவராக அவரை நாம் பார்க்கிறோம். தனது ஊடக ஆளுமையைப் பயன்படுத்தித் தொடர்ந்து செல்லும் இனப்பிரச்சினையைப் பக்கச்சார்பின்றி வெளிப்படுத்தினார் அவர். ஆனால், போரின் காட்டேரிகளால் நிமலராஜனின் குரல் நிரந்தரமாக அடக்கப்பட்டுவிட்டது. நிமலராஜன் இத்துன்பியலின் முதல் இரையல்ல. உலகெங்கிலுமுள்ள ஊடகவியலாளர்கள் அரசியல் அழுத்தங்களை முகங்கொடுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கொடுமையாளர்களின் துப்பாக்கிகளுக்கு இரையாகித் தமது இறுதி மூச்சை விடுவதும் நடந்துதான் வருகிறது.

ஆனால், பிறரின் செலவில் தம்மைப் பெருப்பித்துக் கொள்ளும் இந்த அரசியல் எடுபிடிகளின் பெயர்களுக்குப் பதிலாக, இந்தமாதிரியான துணிச்சலான ஊடகவியலாளர்களின் பெயர்கள் தான் உலக சரித்திரத்தில் மாலையாகத் தொடுக்கப் படுகிறது. அதனால்தான், எங்கெங்கெல்லாம் ஊடகவியலாளர்கள் கொல்லப் படுகிறார்களோ, அவ்வப்போது இந்தக் கொலையாளிகளும் இவர்களுக்குத் துதி பாடுபவர்களும், தாமிழைக்கும் இக்கொடூரக் கொலைகளை நியாயப்படுத்துவதற்காகக் காரணங்களைக் கொடுப்பார்கள்.

ரிச்சர்ட் டி சொய்சா அடித்துக் கொல்லப்பட்டதற்குக் காரணம் அவர் கலகத்தின் சேர்க்கையாளராகவிருந்தது தான் எனக் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டது! ரோகண குமாரவின் கொலையுடன் ஒரு பெண்ணைச் சம்பந்தப்படுத்தினர். இறுதியாக, நிமலராஜன் கொல்லப்பட்டதற்குக் காரணம் அவர் "ஒரு புலி உளவாளி" என்றனர். இந்த எடுபிடியாளர்களின் தொல்லை தரும் ஆவணங்களிலிருந்து பயங்கரமான அழுக்கு வெளியேறுகிறது. ரிச்சர்ட் சொய்சா மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர் என்பதில் எந்தவித இரகசியமுமில்லை. அவர் மக்கள் விடுதலை முன்னணியின் இரகசியப் படைகள் தங்குவதற்கும் இடமளித்திருந்தார். ஆனால், அவரைக் கடத்திக் கொலைசெய்வதற்கு யாருக்கும் உரிமையில்லை. இப்போது, ஒரு தொடர்மாடி வீட்டிற்கு அவரின் பெயரிடப்பட்டுள்ளமை அதிசயமானதல்லவா. அவரின் கொலையைக் கண்டித்து எம்மால் ஒரு பாரிய ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரைப்போலவே, ஊடகவியலாளருக்கும் அவருக்குப் பிடித்தமான அரசியலை ஆதரிக்கும் உரிமையிருக்கிறது. தனது அரசியல் கொள்கையைக் காட்டி ஊடகவியலாளரை இரத்தக் களரியில் அமுக்கக்கொல்ல எந்தத் தனிப்பட்டவருக்கோ அல்லது தேசிய நிறுவனத்திற்கோ உரிமையில்லை.

விடுதலைப் புலிகளுக்கெதிரான டக்ளஸ் தேவானந்தாவிற்குக்கூட அந்த உரிமையில்லை!

நிமலராஜனின் அரசியல் கருத்துக்கள் அரசாங்கத்திலிருந்து வேறுபட்டவை. அவர் யாழ்ப்பாணத்தில் ஒரு இராணுவ ஆட்சியை விரும்பவில்லை. வடக்கு மட்டுமல்ல, கிழக்கும் அதன் மக்களாலேயே ஆளப்பட வேண்டுமென்பதே அவரது உறுதியான நம்பிக்கையாகவிருந்தது. அவரது தொழில் சகாக்களான நாம் அவருடைய அரசியல் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளாமல் விட்டிட்டு அவரது ஆளுமையின் பெருமையைச் சொல்ல உறுதியெடுத்துள்ளோம்.

தனது வாழ்க்கைக்காக அவர் தன் அரசியல் கருத்துக்களைத் தாழ்த்திக்கொள்ளவில்லை. தன் சொந்த சுதந்திர ஊடகத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். யாழ்ப்பாணத்திலிருந்து அவர் வெளியிட்ட செய்தியறிக்கைகள் விடுதலைப் புலிகளையோ அரசாங்கத்தையோ பார்த்தவையல்ல. பதிலாகத் தமது வாசகர் முழுவதும் திறமையான பத்திரிகையாளராக அவர் தொடர்ந்தார்.

ஆதலால்தான் நாம் அவரை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் அதேநேரம், [illegible] முடியாமல் அவரது கொலையாளிகளை மிகவும் வெறுக்கிறோம். அவர் தொழில்முறைத் திறமைசாலிகளில் ஒருவராகவும், அதனால் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவராகவுமிருக்கிறார். அவரைப்போன்ற ஊடகவியலாளர்கள் இயற்கையாகவே ஊடகவியலுக்கு உயிரையும் வித்தியாசங்களையும் கொடுக்கிறார்கள்.

ஊடகவியலின் "குரு"வான ஆர். எச். ஹிக்பக்கர் ஒருதடவை, "பகுத்தறிவுள்ள மக்கள் தாம் சுதந்திரமற்றதிய முயற்சியிலீடுபடும்போது, ஒரு வைத்தியக்குழுக் கூட்டம் மெல்ல மெல்ல நெருக்கியடித்துக் கொண்டு உள்ளே நுழைகிறது. இவ்வைத்தியக்காரக் கூட்டம் தான் ஊடகவியலாளர்கள்" என்று சொன்னார்.

பயத்தைக் காலடியில் போட்டு மிதிக்க நினைத்த நிமலராஜனும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர் தான்.

போர் அல்லது இயற்கை அனர்த்தங்கள் பயம் எதுவானாலும் மக்களை முன்னமே எச்சரிக்கைப்படுத்தித் தம் உயிர்களைத் துச்சமென மதித்து அபாயப் பிரதேசங்களுக்குச் சென்று செய்திகளை அறிவிப்பதன்

**“ என்ன? ஏன்? எப்போது? எங்கே? யாரால்? எப்படி? போன்ற முடிவற்ற கேள்விகள் இவ்வாராய்வுணர்வால் தான் எழுகின்றன. ”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உதவுபவர்கள் ஊடகவியலாளர்கள் தான். ஆனால், எல்லா ஊடகவியலாளரும் இப்பிரிவுக்குள் அடங்குவதில்லை.

போரின் மத்தியிலிருந்து செய்திகளை வெளியிட்ட நிமலராஜன் உண்மையாகவே ஒரு துணிச்சல்காரர் தான்.

ஊடகவியலாளர் குழுக்களிடையே காணப்படும் இயல்பான பண்புகளான ஆராய்வுணர்வு, துணிச்சல், சாவுகளின் மீதான இரக்கம் போன்றவற்றின் கலப்புத்தான் நிமலராஜன். ஆராய்வுணர்வு மட்டும் மற்றவற்றுடன் சேராதுவிடின் ஒரு ஊக்கத்தையளிக்கும்.

என்ன? ஏன்? எப்போது? எங்கே? யாரால்? எப்படி? போன்ற முடிவற்ற கேள்விகள் இவ்வாராய்வுணர்வால் தான் எழுகின்றன. மனிதர்கள் மீதான இரக்கத்துடன் சேர்ந்த ஆராய்வுணர்வு தான் மனிதநேயத்தைக் கடவுளாக வணங்கும் ஊடக இனத்தைச் சேர்ந்தவர்களை உருவாக்குகிறது.

நிமலராஜன் ஒரு சிறந்த ஊடகவியலாளராக இருந்த காரணத்தால் தான் அவர், கொழும்பிற்கோ, சென்னைக்கோ, லண்டனுக்கோ அல்லது ரொறொன்ரோவிற்கோ தப்பிச்செல்லாமல் யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்தும் இருந்தார். அத்துடன் இங்கு இலட்சக்கணக்கில் தமது மக்கள் சுட்டத்திடையேயுள்ளவர்களிடையே அவர் இணையவுமில்லை. ஆனாலும், அவரைப் பொறுத்தவரை யாழ்ப்பாண வாழ்க்கையென்பது ஒரு ரோஜாப்படுக்கையல்ல. அது கொடூரமானதும் கஷ்டமானதும் இருந்தபோதிலும், அவர் தனது வேலையின் மீதுகொண்ட காதலினால் அங்கேயே வசித்தார்.

நாமெல்லோரும் நிமலராஜனை மதிப்பதற்குக் காரணம், அவரும் எம்மைப்போல ஒரு ஊடகவியலாளராக இருந்ததால் அல்ல. அவர் இயற்கையாகவே சிறந்த மனிதனாக இருந்ததுதான்.

1988ல் உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றிய செய்திகளை அறிவிப்பதற்காக நான் யாழ்ப்பாணம் சென்றநேரத்தில் எனக்கு நிமலராஜன் பற்றி எதுவுமே தெரியாது. "புத்திய" பத்திரிகையின் ஆசிரியர் யாழ் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட அவர் சைக்கிளில் என்னைச் சந்திக்க வந்திருந்தார். தனது பழைய சைக்கிளில் என்னை ஏற்றிக்கொண்டு சென்று அவர் என்னைத் தம் வீட்டில் தங்கவைத்தார். நிமலராஜனின் மரணத்திற்குப் பின்னர், "புத்திய" வில் 18.7.1998ல் நான் எழுதிய கட்டுரையை மீண்டும் மீண்டும் படித்தேன்.

யாழ்ப்பாணத்தைப் பற்றியும், நிமலராஜனின் பரம்பரை வீடு இராணுவ டாங்கிகள் சென்றதற்காக தரைமட்டமாக இடிக்கப்பட்டமையையும், வாடகை வீட்டில் பின்னர் அவர் வாழ்ந்த வறிய வாழ்க்கை பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாத் துன்பங்களுக்கும் மத்தியிலும் அவரது மனிதநேயம் புத்துணர்வுடன் அவருடனேயே இருந்தது பற்றியும் நான் அறிந்துகொண்டேன்.

இப்போது நிமலராஜன் இல்லை. அவரது பெற்றோர்கள் வைத்தியசாலையில். அவரது அனாதைக் குழந்தைகளின் விதி என்ன?

அன்று நான் மதிய உணவிற்குப் பின்னர் நிமலராஜனின் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது, அவரது 3 வயது மகள் நிவேதினி அவரது கழுத்தைக் கட்டிக்கொண்டு தந்தையை வீட்டை விட்டு வெளியே போகவேண்டாமென அழுதாள். அவரது இரண்டாவது மகள் அப்போது ஒரு சிசு. நிமலராஜனின் மனைவியால் நிவேதினியைத் தகப்பனாரிடமிருந்து பிரிக்க முடியவில்லை. பின்னர் பாட்டனார் அதில் தலையிடவேண்டியிருந்தது.

"இத்தொழிலில் ஈடுபட்டவர்களின் பிள்ளைகளின் விதி இதுதான்" என்று நிமலராஜன் சொன்னார். எனது இரு பெண் குழந்தைகள் பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டனர். நிவேதினி அழுகையை நிறுத்தியபோது அவளை முத்தமிட்டுச் சமாதானப் படுத்திவிட்டு நாம் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வழியில் திரும்பினோம்.

> "நிமலராஜன் ஒரு சிறந்த ஊடகவியலாளராக இருந்த காரணத்தால் தான் அவர், கொழும்பிற்கோ, சென்னைக்கோ, லண்டனுக்கோ அல்லது ரொறொன்ரோவிற்கோ தப்பிச்செல்லாமல் யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்தும் இருந்தார்."

(பக்கம் 41ஐப் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "எல்லா தரப்பினரும் கொடிய குற்றங்களைப் புரிந்துள்ளனர்"

- சுனிலா அபேசேகர

மனித உரிமைக் கண்காணிப்புக்குழு வழங்கும் அதியுயர்ந்த விருதான "மனித உரிமைப் பாதுகாவலர் விருது" பெறுவதற்கு கொலம்பிய தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஹொல்மன் மொறிஸ், மற்றும் இலங்கை மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுனிலா அபேசேகர ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்த விருதுகள் பெறும் இருவருமே, இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள, தமது பிரச்சனைகளை வெளியே சொல்லமுடியாத, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டதால், கொலைப் பயமுறுத்தல்களைச் சந்தித்ததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டைவிட்டே வலுக்கட்டாயமாக வெளியேறவேண்டிய சூழ்நிலையில் இருந்தவர்கள். அவர்கள் கிராமப்புறங்களுக்குப் பயணஞ் செய்து வெளியே வரமுடியாத சாட்சிகளைவெளிக்கொணர்ந்தவர்கள் என மனித உரிமைக் கண்காணிப்புக்குழுவின் இணையத்தளச் செய்தி குறிப்பிடுகிறது.

"போரின் காரணமாகச் சமூகத்தின் மூலையிருட்டில் மறைக்கப்பட்டுள்ள உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, இலங்கையிலும் கொலம்பியாவிலுமுள்ள பல உயிர்கள் துன்பப்பட்டுப் பலியாவதைத் தடுக்க எடுக்கும் அவர்களது துணிவான முயற்சிகளுக்காக ஹொல்மனையும், சுனிலாவையும் நாம் கௌரவப்படுத்துகின்றோம்" என மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் நிறைவேற்று அதிகாரி கெனத் ரொத் தெரிவித்தார். "துணிச்சல், நீதிக்காகத் தொடர்ந்து தம்மை அர்ப்பணித்தல் மற்றும் பாதிக்கப்பட்டோரது உரிமைகளைப் பற்றி ஆத்மார்த்தமாகக் கவலைப்படுதல் போன்ற மனித உரிமைகள் இயக்கத்தின் கோட்பாடுகளுக்கு அவர்களது செயற்பாடுகள் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுனிலா, இலங்கையின் அரசசார்பற்ற மனித உரிமைகள் நிறுவனமான 'INFORM' ன் நிறைவேற்றுப் பொறுப்பதிகாரியாக இருந்துவருகிறார்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் சிலர் தமது உத்தியோக வாழ்க்கையை நாடகமேடைகளில் ஆரம்பிக்கிறார்கள். சுனிலா அபேசேகர பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே ஒரு நடிகையாகவும் பாடகியாகவும் விளங்கி, பின்னர் இலங்கையில் ஒரு நாடக விமர்சகரானார்.

நாடகவியலே அபேசேகரவிற்கு முதல் உத்தியோகத்தை வழங்கியபோதும், இலங்கையின் உள்நாட்டுப் போரானது அவரை மேடையிலிருந்து கீழிறக்கி விட்டது. 1971ல் தோன்றிய இடதுசாரிக் கிளர்ச்சியும், அதற்கான அரசாங்கத்தின் பிரதிபலிப்பும் அவரை அரசியல் கைதிகளை ஆதரிக்கும் குழுவினருடன் சேரத் தூண்டியது. பின்னர், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் மூளவும் அவர், வலுக்கட்டாயமான தடுப்புக்காவல்கள், துன்புறுத்தல் மற்றும் அரசியல் கொலைகள் என்பனவற்றை வெளிப்படுத்தத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "பெரும்பான்மைச் சமூகத்தினைச் சேர்ந்த நான் எனது வாழ்க்கையின் பெரும்பான்மையான பகுதியைக் கூட்டு நடவடிக்கைகள் மற்றும் உபயோகமான செயற்பாடுகள் மூலம் சிறுபான்மைச் சமூகத்தினது உரிமைகளையும், கலாசாரங்களையும் பாதுகாப்பதற்காகச் செலவிட்டு வந்துள்ளேன்..."

செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்கள், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வேலையை ஆபத்தாக்குவதுடன் கடினமாக்கியது. ஆனால், அபேசேகர அப்போதிருந்தே மனித உரிமைகளுக்கு ஆதரவாக இருந்து வருகிறார்.

இரு தசாப்தங்களுக்கும் மேலாக நடந்துவரும் போரின் பின்னர் 2002ல் போர்நிறுத்தத்திற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொண்டனர். ஒரு பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததையடுத்து 2006ல் அது முறிந்ததும், வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான கொடூரமான மனித உரிமை மீறல்களும் பெரும் இடப்பெயர்வுகளும் முன்பில்லாத வகையில் திடீரென அதிகரித்தன.

இரு தரப்பினர் மீதும் குற்றஞ்சாட்டப்படும் தற்போது நடக்கும் வன்முறைகள், "முன்னெப்போதுமில்லாத வகையில் மோசமானது" என்கிறார் அபேசேகர.

பெருந்தொகையாகக் குடிமக்களைக் கொல்லுதல், பாரபட்சமற்ற விமானத் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும், சிறுவர்களைக் கடத்திப் படையில் சேர்ப்பதற்குத் துணைபோதல் போன்ற குற்றங்களை அரசாங்கப் படைகள் புரிந்துள்ளன. பொதுமக்கள் மீது நேரடியாகத் தாக்குதல், அரசியல் எதிரிகளைக் குறிவைத்துத் தாக்குதல் மற்றும் சிறுவர்களைத் தொடர்ந்தும் படையில் சேர்த்தல் போன்றவற்றிற்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர்களாவர். இதன் விளைவாக, "எமக்கு மனிதநேய நெருக்கடியுடன் மனித உரிமைகள் அபாயமும் ஏற்பட்டுள்ளது" என்கிறார் அபேசேகர.

பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த அபேசேகர, 1983 இனப்பிரச்சனைக்குப் பின்னர் தமிழ்ச் சமூகத்துடன் குறிப்பாகப் பெண்களுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட மிகச் சில சிங்களவர்களிடையே ஒருவராவார். "பெரும்பான்மைச் சமூகத்தினைச் சேர்ந்த நான் எனது வாழ்க்கையின் பெரும்பான்மையான பகுதியைக் கூட்டு நடவடிக்கைகள் மற்றும் உபயோகமான செயற்பாடுகள் மூலம் சிறுபான்மைச் சமூகத்தினது உரிமைகளையும், கலாசாரங்களையும் பாதுகாப்பதற்காகச் செலவிட்டு வந்துள்ளேன்" என்கிறார் அபேசேகர.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்கள் என்ற போர்வையில் பாதுகாப்புப் படைகள் மனித உரிமை மீறல்களைப் புரிவது பற்றி அவர் மேலும் வெளிப்படுத்தியுள்ளார். அவரது வேலைகள் அடிக்கடி அவரது உயிருக்கு ஆபத்தானதாக இருந்து வந்துள்ளது. 1988 ல் அவர் இலங்கையை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேறிச் சிறிது காலத்திற்கு நெதர்லாந்தில் தஞ்சம் கோரவேண்டிய நிலைமையேற்பட்டது.

அபேசேகரவின் பெரும்பாலான நடவடிக்கைகள் பெண்களின் மனித உரிமைகள் பற்றியே குறிப்பாக அமைந்தன. "சில நன்னெறிகளை நாம் பரம்பரை பரம்பரையாக அடையப் பெற்றிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. அவைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையிருக்கிறது. ஆனால், சமயம், சாதி, பால் போன்றவற்றை அடிப்படையாக வைத்து அம்மக்களைப் பாகுபாடு காட்டுவதற்கு எமது சமயத்தையும் கலாசாரத்தையும் உதவியாகக் கொள்ளலாமா?" என்று கேள்வியெழுப்புகிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுரிமை மற்றும் மனித உரிமைகள் பற்றிய அபிசேகரவின் அணுகுமுறையானது வெறுமனே கொள்கையளவில் மட்டுமிருக்கவில்லை. மக்களது தினசரி வாழ்க்கையிலுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி அவர் வெளிப்படுத்த விரும்பினார்.

"வன்முறைகளை வெளிப்படுத்துவதும், அதுபற்றிய செய்திகளை வழங்குவதும் அறிக்கைகளைத் தயாரிப்பதும் அல்ல. இச்சூழ்நிலையை மாற்றக்கூடிய இந்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள மக்களால் வாசிக்கப்பட்டு அறியப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதும் தான் எமது வேலை" என்கிறார் அபிசேகர. அவரைப் பொறுத்தவரையில் இலங்கையென்பது, "மனித உரிமைகளும், சுதந்திரங்களும் நேர்மையில்லாதவர்களால் தினசரி அழிக்கப்பட்டு வருகின்ற, தண்டனையிலிருந்து தப்புவதும், வன்முறைக் கலாசாரமும் மக்கள் வாழ்க்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியுள்ள" ஒரு நாடு.

அவரது வேலை காரணமாக அபிசேகர பெரும்பாலும் வெளியேயுள்ள இடங்களுக்கு, குறிப்பாக இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளின் மோதலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அடிக்கடி செல்லவேண்டியிருக்கும்.

பெண்கள் மீதான அவரது கவனம், இலங்கையின் வன்முறைச் சூழலின் நடுவே அவரை நிறுத்தியுள்ளது. "எந்தவிதமான பிரச்சனைகளிலும் பெண்களும் சிறுவர்களுமே முதலில் பாதிக்கப்படுகிறார்கள்" என்று கூறும் அவர், "இலங்கையில் வன்முறை காரணமாக, வடக்குக் கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆண்கள் இராணுவத்திலோ அல்லது ஆயுதக்குழுக்களுடனோ இணைந்து கொள்கிறார்கள். நாட்டை விட்டு வெளியேறுதல் மூன்றாவது தெரிவாகக் காணப்படுகிறது. குடும்பத்தை இணைப்பதும், குழந்தைகளைப் பாதுகாப்பதும் பெண்களிலேயே தங்கியுள்ளது. கிட்டத்தட்ட பத்து இலட்சம் இடம்பெயர்ந்தோர் இலங்கையிலுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர்" என்று ஆதங்கப்படுகிறார்.

தனது நாடகம் மற்றும் கலைகள் மீதான ஆர்வத்தை அபிசேகர முழுமையாகக் கைவிடவில்லை. இந்நாட்டின் கலாசாரத்தில் பெண்களின் பிரச்சனைகள் பற்றி விளக்குவதன் மூலம் கலைகள் மற்றும் திரைப்பட விமர்சனங்களில் அவர் இன்னும் ஈடுபடுகின்றார். உண்மையில் அபிசேகர, கலைகள் மூலம், முக்கியமாக இசை தனது எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறார். அவரது தந்தையாரும் முன்னைய தலைமுறையைச் சார்ந்தவருமான சார்லி அபிசேகர, இலங்கையில் முதன்முதல் அரசசார்பற்ற நிறுவனத்தை ஆரம்பித்த செயற்பாட்டாளருள் ஒருவராவர். சுனிலா அபிசேகர தனது மாணவப் பருவத்தில் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டவராக இருந்தபோதும், அக்காலத்தின் மார்க்ஸிய ஆயுதப் புரட்சியில் கலந்துகொள்ளவில்லை. அபிசேகரவின் இசை மற்றும் கதை சொல்லும் திறன் தான், இரவு நேரத்தில் பொலிஸ் நிலையங்களிலோ தனது வீட்டில் அதிகாலைச் சோதனையில் சங்கடம் கொடுக்கும் சிக்கலான தருணங்களிலோ சமாளித்துத் தனது காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்குப் பலமாகவிருந்தது.

அபிசேகரவின் வாழ்க்கை மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதை அவரது நாளாந்தக் கடமைகள் பிரதிபலிக்கின்றன. மனித உரிமைகள் சம்பந்தமான வேலைகளில் களைப்பின்றிப் போராடி, எங்கெங்கு எப்படிப் பிரச்சனைகள் தோன்றுகிறதோ அங்கெல்லாம் அதை முன்கொண்டு வருகின்றார். இலங்கையின் அதிகமான போரில் ஈடுபடும் சகலருக்குமிடையில் சமாதான முன்னெடுப்புக்களையும் அமைதியையும் உருவாக்குவதற்காகவே இவர் நேரடியாகச் செயற்பட்டு வருகிறார்.

"எல்லாத் தரப்பினரும் கொடிய குற்றங்களைத் தாம் புரிந்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன்பின்னர், நாம் அதைக் காணச் செய்யவேண்டியதைப் பார்க்கலாம்" என்று தனது கண்காணிப்பை அவர் குறிப்பிடுகிறார். "மக்கள் கடந்த காலத்திலேயே வாழும் நிலைமையால் அதனால் எந்தத் தீர்வும் ஏற்படாது. எமது சரித்திரத்திலேயே மிகவும் கொடியதும் பயங்கரமானதுமானதொரு காலகட்டத்தை நாம் கடந்து வந்துள்ளோம். எல்லாச் சமூகங்களிலுமுள்ள மூத்த தலைமுறையினர், தாம் ஒன்றாகச் சந்தோஷமாகவிருந்த நாட்களை இன்னும் நினைத்துப் பார்க்கின்றனர். மொழியும் பிரிவினைகளையும் துன்பத்தையும் இன்றைய இளஞ்சமுதாயம் தான் சந்திக்கிறது. இச்சூழ்நிலையை இன்னும் சரிப்படுத்தாமல் விட்டால், அதன்பின்னர் இலங்கையில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமிராது" என்கிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்யாப்பின் மீதான நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம்



**- வீரத்திற்கான சர்வதேசப் பெண்கள் விருதை வென்ற கிஷாலி**

இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர், சட்டத்தரணி மற்றும் கொள்கைபரப்பாளருமான கிஷாலி பின்ரோ ஜயவர்த்தனவை இனங்கண்டு, அவருக்கு 2007ல் அமெரிக்க இராஜாங்க அமைச்சினால் வழங்கப்படும் வீரத்திற்கான சர்வதேசப் பெண்களின் பரிசை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் பிளேக் வழங்கினார்.

அவரை இப்பரிசிற்காக முன்மொழிந்து அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் "கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன, இலங்கையின் நீதித்துறையினதும் பிரதான அரசியலமைப்புச் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட அமைப்புக்களான தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்றவற்றின் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகத் தனது சட்டரீதியான செயற்பாடுகளாலும் எழுத்துக்களாலும் நீதியின் நிலைப்பாட்டிற்காக இடைவிடாது பாடுபட்டார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி பின்ரோ ஜயவர்த்தன, அரசியல் சட்ட ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட தேசிய ஆணைக்குழுக்கள் நிலைநிறுத்தப்படவேண்டிய தேவையைப்பற்றி அரசாங்கத்திடம் வெளிப்படையாகக் கேட்டிருந்தார். சுதந்திர அமைப்புக்கள் அமைக்கும் உரிமை, விருப்பத்துக்கு மாறான கைதுகளைத் தடுத்தல், மனிதர்களைச் சமமாக மதித்தல், பேச்சுரிமை போன்ற விடயங்களில் ஈடுபட்டு, அவை பற்றிப் பத்திரிகைகளில் எழுதியும், மனித உரிமைகள், ஊடக உரிமைகள் மற்றும் பெண்ணுரிமை போன்றவை பற்றிய புத்தகங்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

"திருமதி பின்ரோ ஜயவர்த்தன சட்ட மற்றும் ஊடகத்துறையிலுள்ள பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து, சட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதில் அழிக்கமுடியாத ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளார்" என்று அமெரிக்கத் தூதுவர் இவரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், "மனித உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் அவர் தன்னை வெளிப்படுத்தியுள்ளார்" என்றும் பாராட்டியுள்ளார்.

> "ஒரு நாட்டின் பலம், எந்தவித அநீதிக்கெதிராகவும் குரல் கொடுக்கும் சாதாரண மக்களிடம்தான் தங்கியிருக்கிறது. ஒரு சில எதிர்ப்புக் குரல்கள் கூடப் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்."

தனக்கெதிரான வசைமாரிகளை, வெளிப்படையான கண்டனங்கள், மிரட்டல்கள், அவமதிப்புச்செய்திகள் போன்றவற்றிற்கு மத்தியிலும் அவர் தனது முயற்சிகளைக் கைவிடாமல் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் முன்னின்று செயற்பட்டார் என்று அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. இந்த விடயத்தைப்பொறுத்து ஜனநாயகமும் உலக நடப்பும் சம்பந்தமான அமெரிக்காவின் செயலாளர் திருமதி பௌலா டோப்ரியன்ஸ்கி வெளியிட்ட மேலதிகச் செய்தியில், வீரத்திற்கான சர்வதேசப் பெண்கள் அமைப்பில் திருமதி பின்ரோ ஜயவர்த்தனவின் பங்கினைப் பாராட்டியுள்ளார்.

இந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டு பதிலளித்த திருமதி ஜயவர்த்தன, "ஒரு நாட்டின் பலம், எந்தவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீதிக்கெதிராகவும் குரல் கொடுக்கும் சாதாரண மக்களிடம் தான் தங்கியிருக்கிறது. ஒரு சில எதிர்ப்புக் குரல்கள் கூடப் பெரிய வித்தியாசத்தையேற்படுத்தும்" என்றும் கூறினார்.

"இலங்கையர்களாகிய நாம் அரசியல்யாப்பில் நம்பிக்கையிழந்து விட்டோம். இழந்த இந்த நம்பிக்கையை உண்மையான சட்டநெறி மூலம் மீண்டும் ஏற்படுத்தும்வரை வடக்குக் கிழக்குப் பிரச்சனையை நாம் உண்மையாகத் தீர்க்கமுடியாது."

"இவ்விடயம் பற்றி நான் எப்போதும் பலமாக நம்பி, அதற்காக எமது ஊடக மற்றும் சட்டத்துறைகள் மூலம் முயற்சி செய்தேன்" என்றார் அவர். அரசியல் கலாசாரம் சீர்கேடாகப் போய்க்கொண்டிருக்கையில், அரசியல் சட்ட நிறுவனங்களில் ஏற்படும் முறைகேடுகளும் தவிர்க்கமுடியாததாகி சட்டநெறிகளும் சிதைக்கப்பட்டுவிடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

"இன்றைய எமது சூழ்நிலை என்னவெனில், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் மிகச் சாதாரணமான அடிப்படை உரிமைகளைக் கூடப் பாதுகாப்பதில் மிகச் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன், அதுபற்றிய பொதுமக்களின் அறிவு மிகக்குறைந்தளவாகவேயிருக்கிறது என்பது தான். 17வது அரசியல் திருத்தச்சட்டம் மேன்மேலும் தொடர்ந்தும் அலட்சியப்படுத்தப்படுவதும், மற்றும் சிறிய எதிர்பார்ப்புகளையுமே கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அரசியல் யாப்பிலுள்ள உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களை முன்னேற்றம் செய்வது பற்றிய உண்மையற்ற பேச்சுக்களையும் நாம் கேள்விப்படுகிறோம். இது வெறும் வேடிக்கைக்காகவே படுகிறது. இலங்கையர்களாகிய நாம் அரசியல்யாப்பில் நம்பிக்கையிழந்துவிட்டோம். இழந்த இந்த நம்பிக்கையை உண்மையான சட்டநெறி மூலம் மீண்டும் ஏற்படுத்தும்வரை வடக்குக் கிழக்குப் பிரச்சனையை நாம் உண்மையாகத் தீர்க்கமுடியாது" என்று அவர் கூறினார்.

திருமதி பின்டோ ஜயவர்த்தன "சண்டே லீடர்" பத்திரிகையின் ஆசிரியராகவும், சட்ட ஆலோசகராகவுமிருப்பதுடன், அரசியல் குடியியல் உரிமைகள் பிரிவு மற்றும் மூக நலச் சங்கத்தில் உதவி ஆலோசகராகவும் உள்ளார்.

## ஒரு குழப்பத்தின் நினைக்குறிப்பு...

நிமலராஜனின் அகாலமரணம் சில அதிர்வலைகளைத் திறந்துள்ளது. அவர்கள் தமது வேலைகளை இழப்பதற்குக் காரணம் அவர்கள் தமிழர்களாகவிருந்தமை தான். அவர்களது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. ஒரு குடும்பத்தின் ஒரே ஆண் பிள்ளை மிகக்கொடூரமான முறையில் கொல்லப்பட்டான். இவ்விருவரும் திரும்பும் வரையில் இரு பெண் பிள்ளைகளுக்கும் பொறுமையில்லை. நீண்ட காலமாகத் தம்முடனிருந்த கணவர் அவர் மனைவிக்கில்லை. அவர்கள் சொந்த மண்ணாகிய யாழ்ப்பாணம் அவர்களுக்கு ஒரு கெட்ட கனவாகக் காட்சியளித்தது.

நிமலராஜனின் அனாதைக் குழந்தைகளின் எதிர்காலம் என்னவென்று நீங்கள் கேட்கலாம்.

ஒன்று மட்டும் நிச்சயம். நிமலராஜனின் கொலையாளிகளை சரித்திரம் குப்பைக்கூடைக்குள் போட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. தமது எஜமானர்களுக்குத் துதிபாடும் இந்த இரக்கமற்ற கொலையாளிகளை சரித்திரம் இல்லாமலாக்கும்.

அக்கொலையாளிகளுக்குச் சாபம் கிடைக்கட்டும்!

எமது அன்பு நண்பரும் சகாவுமான நிமலராஜனை நாம் உண்மை வணங்குகிறோம்.

"இப்போது நிமலராஜன் இல்லை. அவரது பெற்றோர்கள் வைத்தியசாலையில். அவரது அனாதைக் குழந்தைகளின் விதி என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ராஜன் ஹூல்


கோபாலசிங்கம் ஸ்ரீதரன்

# சர்வதேச மனித உரிமைகள் விருதை வென்ற இலங்கையர்கள்

மனித உரிமைகளுக்காகப் பாடுபடுபவர்களுக்கான 2007 ஆம் ஆண்டின் "மார்டின் என்னல்ஸ்" விருதை, மனித உரிமைக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உதவி ஸ்தாபகர்களான ராஜன் ஹூலும், கோபாலசிங்கம் ஸ்ரீதரனும் பெற்றுக்கொண்டுள்ளனர். "என்னல்ஸ்" விருதானது, மனித உரிமைகளுக்காகப் பாடுபடுபவர்களுக்காகப் பதினொரு முன்னணி மனித உரிமை நிறுவனங்களால் முன்மொழியப்பட்டு வருடா வருடம் அளிக்கப்படும் விருதாகும். இவ்வாறு 2007இல் அளிக்கப்பட்ட விருதை இவர்களுடன் இணைந்து பெற்றவர் ஆபிரிக்காவின் புருண்டி நாட்டைச் சேர்ந்த மனித உரிமைப் போராட்டவாதியான பியரே கிளாவர் மொபொனிம்பா (Pierre Claver Mbonimpa) என்பவராவார்.

இந்த விருதைப் பெறுபவர்களை அறிவித்துப் பேசும்போது, நடுவர் குழுவின் தலைவரான திரு ஹான்ஸ் தூலன் இம்மூன்று தனிப்பட்ட மனிதர்களும் "மனித உரிமைகளுக்காகவும் நியாயத்திற்காகவும் போராடுவது பயங்கரமான செயல்களாகக் கணிக்கப்படும் நமது நாடுகளின் மனித உரிமை இயக்கங்களின் குறியீடுகள்" எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது, கொடுமையான இனப்போரை கருத்தாகக் கொண்டு 1988ல் சில புத்திஜீவிகளால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலக் குறிக்கோளானது, "முழுத் தமிழ்ச் சமுதாயத்தை உள்ளேயும் வெளியேயும் சூழ்ந்துள்ள பயங்கரவாதத்திற்குக் காரணமானவர்களை பொறுப்பேற்க வைத்து, எமது சமுதாய வாழ்க்கையின் சமூக அரசியல் நிலைப்பாடுகளை மனிதப்பாங்குடன் உருவாக்குவதற்குரிய இடத்தை அமைத்துக்கொடுத்தலே"யாகும்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் பிற ஆயுதக் குழுக்களால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்காணித்தும் அதை வெளிப்படுத்தியும் வந்தது. அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளின் பிரதான அம்சம் என்னவென்றால், இந்த மனித உரிமை மீறல் சம்பவங்களின் பரிமாணங்களை அரசியல் சார்பற்ற நிலைமையில் மிக விளக்கமாக வெளிப்படுத்தியிருந்தமை தான். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கையில் ஒரு அம்சமாக இருந்துவரும் பயங்கரவாதத்தையும், அதை மக்கள் வெளியே சொல்லமுடியாமல் எதிர்கொண்டுவரும் கொடியதொரு கலாசாரத்தையும், அவ்வன்முறைகளின் தன்மைகளையும் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியதால், இவ்வறிக்கைகள் மிக முக்கியமான தகவல்களாக அமைகின்றன. சமீபகால சமாதான முன்னெடுப்புகளின்போது யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது, குறிப்பாக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை வெளிப்படுத்தி மனித உரிமைகளின் அவசியத்தைக் கட்டாயமாக வலியுறுத்தியும் வந்தது.

ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய இருபது ஆண்டுகளை நிறைவு செய்த நிலையில் இச்சங்கத்தின் அறிக்கைகள், உள்ளூரிலும் உலகளாவிய ரீதியிலும் செயற்படும் மனித உரிமைகள் அமைப்புகளுக்கெல்லாம் உரிய தகவல்கள் அளிக்கக்கூடிய நம்பத்தகுந்த வெளிப்பாட்டுக் கருவியாகத் தொடர்ந்து செயற்படுகிறது. இச்சங்கத்தின் உதவி ஸ்தாபகர்களில் ஒருவரான ராஜினி திரணகம 1989ல் கொலை செய்யப்பட்டதையடுத்து, இதன் நடவடிக்கைகள் வெளியிலிருந்து தொடரப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சமீபகாலமாகத் தொடரும் போர் நடவடிக்கைகளின்போதும் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது தொடர்ந்தும் அதிர்ச்சியளிக்கும் தகவல்களைச் சேகரித்து வெளிப்படுத்தி வருகிறது. உதாரணமாக, ஜனவரி 2006ல் திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்களைக் கொலை செய்தமை, மூதூரில் 17 "ஏசிஎவ்" தொண்டு நிறுவன ஊழியர்களைப் படுபயங்கரமாகக் கொலைசெய்தமை, செப்டம்பர் 2006ல் பொத்துவிலில் 10 முஸ்லிம் கூலித் தொழிலாளர்களைக் கொன்றமை போன்றவற்றுடன், இன்றைய நாளில் வடக்குக் கிழக்கில் தினமும் தொடர்ந்து நடந்துவரும் கொடூரங்களான கொலைகள் கடத்தல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைக் கொன்றழிப்பதன் மூலம் கிழக்கை வென்றெடுக்க முடியுமா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அண்மையில் வெளியிட்ட "மக்களைக் கொன்றழிப்பதன் மூலம் கிழக்கை வென்றெடுக்க முடியுமா" என்ற அறிக்கையிலிருந்து (3.8.2007) எடுக்கப்பட்ட சில பகுதிகள்.

**“இப்போது விடுவிக்கப்பட்டுவிட்டது எனப் பயனற்ற விதத்தில் கொண்டாடப்படும் பகுதிகள் முன்பு பலமுறை கைவிடப்பட்டன என்பதை நல்ல நினைவாற்றலுள்ள பொதுமக்கள் அறிந்திருப்பர்.”**

உரிமைக்காகப் போராடும் இரு பகுதியினர் தொடர்ந்து நடாத்துகின்ற 25 வருட காலத்திற்குப் பின்னதான இராணுவ வெற்றியைக் கொண்டாடும் போது, அவ்வெற்றி பெருந்துன்பத்தையும் பயனற்ற தன்மையையுமே வெளிக்கொணர்ந்திருக்கிறது. இந்தக் கற்பனையான வெற்றியைத் தமது போர்த்தரத்தை உயர்த்துவதற்காக விடுதலைப் புலிகள் பயன்படுத்திக் கொள்வர். இராணுவ மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகளையெல்லாம் மறைத்து நிற்கும் அரசாங்கத்தின் அளவுகடந்த மகிழ்ச்சிப்பெருக்கின் மத்தியில், அது கிழக்கில் வென்று அதை விடுவித்துள்ளது என்பதுதான். இப்போது விடுவிக்கப்பட்டுவிட்டது எனப் பயனற்ற விதத்தில் கொண்டாடப்படும் பகுதிகள் முன்பு பலமுறை கைவிடப்பட்டன என்பதை நல்ல நினைவாற்றலுள்ள பொதுமக்கள் அறிந்திருப்பர்.

இதேநேரம், இந்திய மற்றும் சர்வதேச சமூகத்தின் நியாயமான கருத்துக்களுக்குக் கண்மூடித்தனமாக எதிர்ப்புக் காட்டுவதன் மூலம் நாட்டின் மனித உரிமை நிலைமை மிகவும் மோசமான நிலைமையை அடைந்துள்ளது, பொருளாதாரம் தேவையற்றவைகளிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் கண்கூடாகத் தெரிகிறது. வடக்கில் மிகப் பயங்கரமான இராணுவ நடவடிக்கை தொடங்கவிருக்கும் நிலையில், பெருத்த இராணுவத் தோல்விகளும் மக்கள் மீதான தொடர்ந்த குண்டுத் தாக்குதல்களும் பொதுமக்கள் கண்டுகொள்ளப்படாமலே இருக்கிறது. சர்வதேசச் சட்டத்தை மீறுவதானது காலப்போக்கில் இலங்கை நாட்டின் இறைமைக்கும் சட்டநிலைக்கும் குந்தகத்தை விளைவிக்கக்கூடும்.

எல்லாவற்றையும்விட மோசமான நிலையென்னவெனில், இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினரது ஆதரவைப் பெற்று அவர்களை இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் பங்கேற்க வைக்கும் முயற்சியினை முழுமையாகக் கைவிட்டிருக்கிறது. அறுதிப் பெரும்பான்மை அரசினால் தனித்துவிடப்பட்டதாகச் சிறுபான்மையினர் உணர்வதுதான் இத்துன்பியலின் ஆணிவேராகக் காணப்படுகிறதல்லவா? அனைத்துக் கட்சிக் குழுவில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வானது, விடுதலைப் புலிகளின் வன்முறைகளைக் குறைத்து நிரந்தரமான சமாதானத்தைக் கொடுக்கத் தவறிவிட்டது. விடுதலைப் புலிகளும் அவர்களின் அரசியலும் தமிழ் மக்களுக்கு ஆகாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாகச் சர்வதேச சமூகம் உணர்ந்துகொண்டிருக்கும் அதே நேரத்தில், இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சந்தர்ப்பங்களை வீணாக்கி வருவதில் அதிருப்தியும் அடைந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் பொருத்தமில்லாமல் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒடுக்குவதாகச் சொல்லிக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தினை அழித்து வருகின்றது. தமிழர்கள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கு வழிவகுப்பதுடன், சர்வதேசச் சமூகம் அவர்களிடம் அதிகாரபூர்வ ரீதியாகத் தொடர்பு கொள்வதற்கும் இடமளித்து விடுகிறது. அரசாங்கத்தின் சார்பாகத் திட்டங்கள் தீட்டுவோரும், இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவோரும் இனப்பிரச்சினையின் சிக்கலான இயல்புபற்றிய விளக்கமின்மையான அறிவையே கொண்டிருப்பதானது, சிறுபான்மையை, குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தைத் தனிமைப்படுத்திவிடுகிறது.

......... அரசாங்கம் தமிழ் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கும் ஒரு நம்பத்தகுந்த அரசியல் தீர்வை முன்வைத்து, ஜனநாயகம் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக உழைத்தால், அது தமிழ் சமுதாயத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குரிய புதியதொரு ஆரம்பத்தைக் கொடுக்கும். கடந்த இரண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளைப் போலவே தமிழ் ஜனநாயக அரசியலை அழித்தும், கிழக்கிலுள்ள தமிழ் முஸ்லிம் சமூகங்களை அழித்தும் வரும் அரச இராணுவத்தின் நடவடிக்கையில் பெரும் மாற்றம் ஏற்படுத்தப்படுவது இன்று அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னுமொரு இழக்கப்பட்ட சந்தர்ப்பம்

## கேதீஷ் லோகநாதனின் வாழ்வு பற்றிய நினைவுக்குறிப்பு

ஓகஸ்ட் 12, 2007, ஞாயிற்றுக் கிழமை கேதீஷ் லோகநாதன் நினைவாக இடம்பெற்ற நிகழ்வில் ஆற்றிய சொற்பொழிவு

இந்த ஒன்றுகூடலில் நீண்டகால நண்பனின் வாழ்வு மற்றும் சாதனைகள் தொடர்பாக நினைவுகூர்ந்து சில சொற்கள் பேசுவதற்கான சிறப்பு வாய்ப்புக் கிடைத்துள்ளது. நானும் கேதீஷும் முதன்முதலில் அவரது பெற்றோருடைய வீட்டில் சந்தித்தோம். அவரும் நானும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற நாட்களில் நெருக்கமான நண்பர்களாய் இருந்துள்ளோம். அந்நேரத்தில் நான் அபிவிருத்திப் பொருளியலில் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தை முடித்திருந்தேன். கேதீஷ் இத்துறையில் தன்னைப் பதிவு செய்வதற்கு ஆழமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார். நான் சசெக்ஸில் இருந்து அதிக அறிவைப் பெற்றுக்கொண்டேன் என்பது உரையாடல்களிலிருந்து அப்பட்ட தெரி மிகவும் மதிப்புவாய்ந்தது என்பதை கேதீஷ் உணர்ந்திருப்பார். அபிவிருத்தித் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அக்காலத்தில் சசெக்ஸ் தவிர்ந்த வேறெந்த நிறுவனமும் அவ்வளவுதூரம் ஆர்வமூட்டும் ஒன்றாக இருந்திருக்காது. கேதீஷும் தன்னை சசெக்ஸில் பதிந்து சந்தேகத்திற்கு இடமின்றி உயர் சிறப்புப் பிரிவில் சித்தி பெற்றார். இலங்கையில் அத்துறை தொடர்பான அனுபவம் கிடைக்கும் வரையிலும் தனது ஆய்வுக் கட்டுரையை வடிவமைப்பதையும் சமர்ப்பிப்பதையும் அவர் காலம் தாழ்த்தி வைத்தார்.

வெளிநாட்டில் இருந்து திரும்பியதும் கேதீஷ் மார்கா (Marga) நிறுவனத்தில் இணைந்து கொண்டார். தனது முதன்மைச் செயற்பாடாக, சமூக வறுமையிலே ஆய்வு மற்றும் பொதுக்கொள்கைகளின் மதிப்பாய்வு போன்றவற்றில் அவர் ஆழமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1978 இல் அவர் திருமணம் முடித்திருப்பினும், அவரது குடும்பப் பாரம்பரியமாக வந்த இடதுசாரி அரசியல் கொள்கைக்குள் படிப்படியாக அவர் உள்ளிழுக்கப்படுவதை திருமண வாழ்வு தடுத்து நிறுத்தவில்லை. இதன் தொடர்விளைவாக அவர் EPRLF இல் இணைந்தார். தான் பொறுப்பெடுத்த விடயத்தில் பூரண அர்ப்பணிப்புடன் செயற்படும் அல்லது ஆழமாக ஈடுபடும் அவரது இயல்பு காரணமாக, தனது சசெக்ஸ் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டப்படிப்பின் ஆய்வுக் கட்டுரையை முடிப்பதிலிருந்து அவர் படிப்படியாகத் திசைதிருப்பப்பட்டது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. தனது மாற்றமைப் பணிகளில் இருந்து ஒரு மாதம் விடுப்பெடுத்துக் கொண்டு அவருக்கிருந்த அறிவுப் புலமை மற்றும்

> “அவர் உயிர்வாழ்ந்திருந்து, அமைதி முயற்சிகள் மீளத் தொடங்கியிருக்குமானால், அதற்கு ஏற்றவகையில் அவர் பலப்படுத்தப்பட்டு, ஒரு முக்கியமான பங்களிப்பைச் செய்வதற்குரிய இயலளவு அவருக்கு இருந்தது.”



**தேவநேசன் நேசையா**
மூத்த ஆலோசகர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: க.ஜீவகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்திறன் என்பவற்றைக் கொண்டு தனது ஆய்வுக்கட்டுரையை அவர் முடித்திருக்கலாம். ஆனால், கௌரவம் மிக்க ஒரு பல்கலைக்கழகப் பட்டம் கல்விமான்/அறிஞர் என்பது அவருக்குத் முதன்மையானதாகப் படவில்லை. அவரின் பற்றார்வமானது சமூகவியல் கற்கைநெறி என்பதிலிருந்து வேறு ஒரு சவால் மிக்க துறையை நோக்கி மாறிச் சென்றது. அவர் ஒரு வருட விடுமுறை எடுத்துக்கொண்டு ஹேக்கிலுள்ள சமூகக் கற்கை நெறிகளுக்கான நிறுவனத்தில் (Institute Of Social Studies In Hague) இணைந்து 1985 இல் அதி விசேட சித்தியுடன் அபிவிருத்திக் கற்கையில் தனது முதுமாணிப் பட்டப் படிப்பினை முடித்துக் கொண்டார்.

கற்பனாவாத இடதுசாரி சிந்தனைகள் கேதீஸை படிப்படியாக செயற்பாட்டாளர் அரசியலுக்கு இட்டுச் சென்றதுடன், அரசியலில் நிறுவன ரீதியான தடைகளைத் தகர்க்கும் நோக்கினையும் ஏற்படுத்தியது. இத்தன்மை அவரை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் இணைய வைத்ததுடன், மிகவும் இளைய நிறுவனமான அதன் வளர்ச்சிக்கும், கௌரவத்திற்கும் பெரும் பங்காற்ற வழிகோலியது. மூன்று வருடங்களிற்கு முன்னர் எனது ஆர்வத்துக்கும், முன்னுரிமைகளிற்கும் தளம் அமைவதும் அக்கறைப்படுமொரு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றைத் தேடிக்கொண்டிருந்த போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானம் மற்றும் முரண்பாட்டுப் பிரிவின் தலைமையாளராகவிருந்த கேதீஸ் என்னைத் துறைசார் நிபுணராக அதில் இணைந்து கொள்ளுமாறு அழைத்தார். உடனடியாகவே நான் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். நகரங்களில் இன வன்முறை தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுக்கு விசேட பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்பு எனக்குத் தரப்பட்டது. வேறு சில குறிப்பிடத்தக்க பொறுப்புகளும் தரப்பட்டன. நான் கேதீஸுடன் பணிபுரிந்த காலப்பகுதியில் எனது பணியை மிகவும் சந்தோஷத்துடன் செய்யக்கூடியதாக இருந்ததுடன், 2006 ஏப்ரல் 1 இல் அவர் அரச சமாதானச் செயலகத்தின் பிரதித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சென்ற பின்னரும் அந்தப் பணியைத் தொடர்ந்தேன்.

கேதீஸ் அமைச்சு மட்டத்திலானவருக்கு மதிப்பளித்திருந்தவர். அரச சமாதானச் செயலகத்தில் இணைந்துகொண்டமை இவரின் இத்தகைய முரண்பட்ட செயற்பாடுகளில் மிக முக்கியமான ஒன்றாகும். இதில் பணியாற்றுவதற்கு சிறந்த தகுதிகளைக் கொண்ட ஒருவர் இல்லாதிருந்த போதும், மறைமுகமாகப் பார்க்கின்றபோது அவர் தவறான ஒரு நேரத்தில் இணைந்து கொண்டார். இவர் சில வருடங்களிற்கு முன்னர் அதில் இணைந்திருப்பாரெனில் சமாதானச் செயன்முறைகளில் முக்கியமாக பங்காற்றியிருக்க முடியும். அவர் அரச சமாதானச் செயலகத்தில் இணைந்திருந்த போது சமாதான முயற்சிகள் அனைத்தும் இறந்துபோய் இருந்தன. அதில் பொருளாதார ரீதியாக நன்மையடைவது அவரது நோக்கமாக இருக்கவில்லை. அதில் அவர் சேர்ந்ததன் நேரடி விளைவாக,




அவரது குரல் நிறுத்தப்பட்டது. அவரது அரசியல் கடைசி செயற்பாடுகளில் சீரான ஓட்டம் காய்ந்தது. இறுதியில் படுகொலை செய்யப்படக்கூடிய நிலைக்கு அவரது நிலை மேலும் மோசமாகியது. அவர் உயிரோடிருந்திருந்தால், அமைதி முயற்சிகள் மீளத் தொடங்கியிருக்குமானால், அதற்கு ஏற்றவகையில் அவர் பயன்படுத்தப்பட்டிருப்பார். சந்தேகத்துக்கிடமற்ற வகையில் சமாதான முயற்சிகளில் ஒரு முக்கியமான பங்களிப்பைச் செலுத்தக்கூடிய இயலளவு அவருக்கு இருந்தது. ஆனால், வேதனைதரும் வகையில் அவ்வாறான ஒரு சூழல் ஏற்படவிருக்கவில்லை.

கேதீஸ் பொதுவாழ்வில் ஒரு புலமையாளராக, சிவில் சமூகத்தின் ஒரு தலைவராக, ஒரு பத்திரிகையாளராக, எழுத்தாளராக அவர் ஒரு பல்வேறுபட்ட சாதனைகள் பற்றி மதிப்பிடக்கூடிய ஒன்றுமட்டல் இதுவல்ல. நான் அது போன்ற சாதனைகளை பட்டியல் படுத்துவதற்கு இங்கு அழைக்கப்படவில்லை. இருந்தபோதும், ஏனைய பலரைப் போலவும், அவரின் நீடித்து நிலைத்து நிற்கக் கூடியதென் மரபுரிமையின் பாரிய ஆவணமாக, இவரின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழர்களின் அரசியல் உடன்பாடு எனும், 1985 ஜூலை 13இல் திம்புவில் முன்வைக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகளை இனம் காணலாம் என நினைக்கிறேன்.

இக்கோட்பாடு, "தமிழ் விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றை உள்ளடக்கிய தமிழர்களின் பிரதிநிதிகளாகிய நாம்" என்ற அடிப்படையில் முன்வைக்கப் பட்டது. இக்கோட்பாடுகள் மீது

(பக்கம் 55ஐப் பார்க்க...




# இன-மத-மொழி பேதம் கடந்த மக்கள் எதிர்ப்புக்குள்ளான கொழும்பு விடுதி தமிழர் வெளியேற்ற நடவடிக்கை

2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி, கொழும்பிலுள்ள தனியார் விடுதிகள் சிலவற்றுக்குள் திடீரென பொலிசார் நுழைந்தனர். தமிழர்கள் அதிகம் வாழும் விடுதிகளுக்கு இவ்வாறு திடீரென பொலிசார் வருவதும், சோதனை நடாத்துவதும், பின்னர் கைதுசெய்யப்படுவதும் வழமையான ஒரு நிகழ்வுதான். எனினும், இம்முறை அவர்கள் வந்தது எவரையும் கைதுசெய்வதற்காக அல்ல. ஒட்டுமொத்தமாக அனைவரையும் கொழும்பை விட்டு அப்புறப்படுத்துவதே இம்முறை அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

1983 ஜூலை மாதம் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் கொழும்புவாழ் தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட மற்றுமொரு இனரீதியான அச்சுறுத்தலாக அந்த அதிகாலை வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை மனிதநேய உள்ளம் படைத்த அனைவரும் கண்டித்திருந்தனர். தமிழர்கள், சிங்களவர்கள் என்ற எந்த வேறுபாடுமின்றி பல அரசியல் தலைவர்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், அக்கறையுள்ள பொதுமக்களும் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்திருந்தனர்.

பொலிசாரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் இடம்பெற்ற எதிர்ப்புப் பேரணியில் தமிழர்களைவிட சிங்களவர்களே அதிகளவில் திரண்டிருந்து இந்த நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டியமையானது, இனரீதியான பாகுபாடு காட்டி தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரணில் விக்கிரமசிங்கா

எதிர்க்கட்சித் தலைவர்

கடந்த காலத்தில் ஜேர்மனியர்கள் யூதர்களையும், வெள்ளையர்கள், கறுப்பின ஆபிரிக்க மக்களையும் வெளியேற்றியதைப் போலவே கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து தமிழ் மக்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல், மனித கௌரவம் அற்ற நிலையில் நடத்தப்படாமல், சுதந்திரமாக எங்கும் நடமாடவும், வசிக்கவுமான இந்த நாட்டு மக்களின் அரசியலமைப்பு உரிமையை மீறியுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக் குறித்து நாங்களும் கவனம் செலுத்தியுள்ளோம். ஒருவர் மீது அரசாங்கம் சந்தேகம் கொண்டால் அவரைக் கைதுசெய்து நீதிபதியின் முன் நிறுத்தி தடுத்து வைக்கவோ, விடுவிக்கவோ முடியும். கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் அவர்கள் மேலும் வேதனை நிறைந்த துன்பங்களை எதிர்நோக்க வேண்டியவர்கள்.



## மனோ கணேசன்

தலைவர், மேலக மக்கள் முன்னணி

அரசாங்கத்தின் இன்றைய செயற்பாடுகள் தனிநாடு கோரப்படுவதை நியாயமாக்குகிறது. தற்பொழுது அரசாங்கம் இராணுவக் கொள்கையையே பின்பற்றி வருகிறது.

"இவர்களில் பலர் கொழும்பில் தங்கியிருப்பதற்கான எந்த நியாயமான ஆதாரங்களையும் கொண்டிருக்கவில்லை. வெறுமனே கொழும்பில் தங்கியிருந்துள்ளனர். சிலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல எம்மிடம் விருப்பம் தெரிவித்திருந்தனர்" என்று கூறிய அவர், சொந்த விருப்பின் பேரிலேயே அவர்கள் தமது பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் பொலிஸாரின் இந்த நியாயங்களை ஏற்றுக்கொள்ளாத மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பலரும் இதனை வன்மையாகக் கண்டித்திருந்தனர். தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தான் வாழும் இடத்தைத் தெரிவுசெய்யும் இலங்கை அரசியலமைப்பு சார்ந்த மக்களின் உரிமையை இது மறுக்கிறது என்று அந்த அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தன. "இந்த நாட்டின் தலைவர் என்ற வகையில், இந்தச் செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, இவ்வாறு நடவடிக்கைகளுக்கு எல்லாச் சிங்கள மக்களும் ஆதரவாக இல்லை என்கின்ற செய்தியை தெளிவாகப் பறைசாற்றுவதாக அமைந்திருந்தது.

இந்த நடவடிக்கைக்கு பொலிஸார் பல்வேறு நியாயங்களைக் கற்பித்திருந்தனர். கொழும்புக்குள் நடக்கும் வன்முறைகள், தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தவும், தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல்போவதைத் தடுக்கவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த அபேவர்த்தன இதற்கு நியாயம் கற்பித்தார்.



## ரட்ணசிறி விக்கிரமநாயக்கா

பிரதமர்

கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமையானது அரசாங்கம் விட்ட பாரிய தவறு. இது குறித்து தமிழ் சமூகத்திடம் நாம் எமது கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் கொழும்பில் இருக்கும்போது அல்லாமல், வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னரே அவர்கள் இவ்வாறு செல்ல விரும்புகிறார்களா இல்லையா என்று கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். நல்லதோ கெட்டதோ அனைத்து அதிகாரிகளின் செயற்பாடுகளுக்குமான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவந்தமாக அனுப்பப்பட்டவர்களை மீண்டும் கொழும்புக்கு அழைத்துவர உரிய வசதிகள் செய்து கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்'' என்று அந்த அமைப்புக்கள் ஜனாதிபதியைக் கடிதமூலம் கோரியிருந்தன.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான மையம்(CHRD), மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்(CPA), சுதந்திர ஊடக இயக்கம்(FMM), மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம்(INFORM), மனித உரிமைகள் நிறுவனம்(IHR), அனைத்து வகையிலான இனப்பாகுபாட்டுக்கும் எதிரான சர்வதேச இயக்கம்(IMADR), சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை(LST), Rights Now ஆகிய அமைப்புக்கள் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தன.

உள்நாட்டில் மட்டுமன்றி, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, கனடா, இந்தியா என பல நாடுகளும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை மோசமான மனித உரிமை மீறல் எனக் கண்டித்ததுடன், உடனடியாக இந்த நடவடிக்கையை நிறுத்தி, மக்கள் தாம் விரும்பிய இடத்தில் வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் தனித்தனியே கோரிக்கை விடுத்தன.

பொலிசாரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், அதன்



**இரா. சம்பந்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எந்தவிதமான குற்றமும் இழைக்காத அப்பாவித் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை அரசாங்கம் இதன்மூலம் அப்பட்டமாக மீறியுள்ளது. அப்பாவித் தமிழ் மக்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக காவல்துறை கனரக வாகனங்களில் ஏற்றி அனுப்பிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அடிப்படை மனிதாபிமானமே இல்லாத செயலாகும்.




**கெஹெலிய ரம்புக்வெல**

அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர்

15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் தமிழர்கள் பல்வேறு காரணங்களுக்காக தற்காலிகமாக கொழும்பில் தங்கியுள்ளனர். இந்த நடவடிக்கை, இந்நாட்டில் வாழும் 19 மில்லியன் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே மக்களின் பாதுகாப்புக்காகவே மேற்கொள்ளப்பட்டது. கடந்த பத்து வருடங்களாக இந்த விடுதிகள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

தமது பணிகள் முடிவடைந்த பின்னரும் தங்கியிருந்த 63 பெண்கள் உட்பட 260 பேர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை நாங்கள் செய்துகொடுத்திருந்தோம்.



**வீ. ஆனந்தசங்கரி**

தமிழர் விடுதலைக் கூட்டணி

தமிழ் மக்களைக் கொழும்பு விடுதிகளில் இருந்து வெளியேற்றியமை அவர்களின் பாதுகாப்புக்காக எனக் கூறுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். தமிழ் மக்களை விரட்டும் வகையிலான இவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாது என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

**சுரேஸ் பிரேமச்சந்திரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்ற தலைவர்கள் இருக்கும் வரையில் தமிழர்கள் தமிழ் ஈழம் கோரித் தனிநாடு அமைப்பதை நியாயப்படுத்தும் சூழலையே அரசாங்கம் ஏற்படுத்துகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களுக்கே உரித்தானது. அவர்கள் அங்குதான் வாழவேண்டும் என்பதை அரசியல்வாதிகள் நிரூபித்துள்ளனர். இதை இவர்கள் ஏற்றுக்கொண்டால் நாங்கள் பிரிந்துசெல்லவே நிர்ப்பந்திக்கப்படுவோம்.

அரசாங்கம் தமக்கு எதிரான அனைவரையும் துரோகிகள் எனவும், ஆதரவானவர்களை தியாகிகள் எனவும் காட்டுவதன் மூலம், சிங்கள மக்களின் மனதில் இனவாதத்தை வளர்த்து தமிழ் மக்கள் தொடர்பான தப்பபிப்பிராயத்தை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றும் பணிப்பாளர்) பாக்கியசோதி சரவணமுத்துவும் நாங்கள் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், கொழும்பிலிருந்து தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபரைப் பணித்து, அந்த நடவடிக்கைக்கு இடைக்காலத் தடையுத்தரவு விதித்தது. இலங்கைக்குள் நாம் வாழும் பிரதேசத்தைத் தெரிவுசெய்யவும், சுதந்திரமாக நடமாடவும், சட்டத்தின்முன் சம பாதுகாப்பைப் பெறவுமான மக்களின் உரிமையை இந்த நடவடிக்கை மீறுவதாக வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மனுதாரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதிட்ட வழக்கறிஞர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு, கிழக்கு தமிழர்களை கொழும்பிலிருந்து வெளியேற்றும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, 1949ஆம் ஆண்டின் 1 ஆவது ஜெனீவா உடன்படிக்கையின் 149 ஆவது சரத்தை மீறுவதாகக் குறிப்பிட்டார். இந்தப் பொலிஸ் மனிதநேயத்துக்கு எதிரான குற்றச்செயல் எனவும், தமிழர்கள் இதன்மூலம் கீழ்த்தரமாக நடத்தப்பட்டுள்ளனர் என்றும் நீதிமன்றத்தில் அவர் வாதிட்டார்.

நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து, கொழும்பிலிருந்து பலவந்தமாகத் திருப்பியனுப்பப்பட்ட சுமார் 300க்கும் அதிகமான வடக்கு, கிழக்குத் தமிழர்களில் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட சுமார் 180 பேர் மீண்டும் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு அநீதிக்கு எதிராக, இன, மத, மொழி வேறுபாடின்றி அக்கறையுள்ள மக்கள் அனைவரும் திரண்டு போராடிப் பெற்ற வெற்றியாக இது இலங்கை வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டுள்ளது என்றால் மிகையாகாது.



**ரவூப் ஹக்கீம்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றியமையானது 1983 இனக்கலவரத்தைவிட மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். காடையர்களோ, குண்டர்களோ அல்லாமல் அரசாங்கமே இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பு என்பதனால், இது 83 கலவரத்தைவிட மோசமான ஒன்றாக அமைகிறது. அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களே இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களில் பலர் அதிகாலை வேளையில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றதையே அறிந்திருக்கவில்லை.

கொழும்பில் காரணம் இன்றி தங்கியிருப்பதாகக் கூறி அரசாங்கத்தால் அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். சிங்கள, முஸ்லிம் மக்கள் இவ்வாறு கொழும்பில் தங்கியிருக்கவில்லையா? ஏன் அவர்களுக்கு இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை?

வசதி குறைந்தவர்களே விடுதிகளில் தங்கியிருப்பவர்கள். அவர்களிடம் பணம் இருந்தால் ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகளில் அவர்கள் தங்கியிருப்பார்கள். யார் மீதாவது சந்தேகம் இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம். அதைவிடுத்து இப்படிச் செய்வது பொருத்தமானதல்ல.



**அநுரகுமார திஸ்ஸநாயக்க**

ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்

தமிழ் மக்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் பிளவைத் தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. தமிழ் மக்களைக் கொழும்பு விடுதிகளிலிருந்து 'வெளியேற்றியமையானது முட்டாள்தனமான' ஒரு நடவடிக்கை.

அதிகார வெறிபிடித்த அரசியல் தலைவர்களால்தான் தமிழர்களுக்கு எதிரான 83 கலவரம் போன்ற கலவரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறான கலவரங்கள்தான் தற்பொழுது நாட்டை இவ்வாறானதொரு நிலைக்கு இட்டுச்சென்றுள்ளன.

83 கலவரம் கொழும்பு தமிழர்களுக்கு எதிராக ஆரம்பித்து நாடுபூராக பரவியது. தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கையும் அவ்வாறான நிலையொன்றையே ஏற்படுத்திவிடும். 83ஆம் ஆண்டுக் கலவரத்துக்கும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைக்கும் என்ன வித்தியாசம்? இவ்வாறான நடவடிக்கைகள் தமிழர்கள் எல்லோருமே புலிகள் என்ற நிலையை ஏற்படுத்துகின்றது.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டியதுதான். ஆனால், சாதாரண தமிழ் மக்களையும் சேர்த்துக்கொண்டே அதனைச் சாதிக்கவேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

தொகுப்பு: **மகேஷ் பிரசாத்**
உப ஆசிரியர், INLanka இணைய ஊடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு மோசமான இடமாக இலங்கை



**ஜோன் ஹோம்ஸ்**

தொகுப்பு: மகேந்திரராஜா

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளுக்கான செயலாளர் நாயகம் சேர் ஜோன் ஹோம்ஸ் ஓகஸ்ட் 6-9 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அவர், அரசாங்க அதிகாரிகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளைச் சந்தித்ததுடன், யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் விஜயமளித்திருந்தார். அவரது விஜயம் அரசாங்கத்தினால் அதிகளவு கட்டுப்படுத்தப்பட்டதுடன், ஹோம்ஸிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக, மனித உரிமைகள் குழுக்களிடையே இது பெரும் விமர்சனத்தைக் கிளப்பியது.

சேர் ஜோன் ஹோம்ஸ் தமது இலங்கை விஜயத்தின் பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள், மற்றும் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டி ஆகியவற்றின் தொகுப்பையும், ஹோம்ஸின் தெரிவித்த கருத்துக்கள் குறித்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயகாவின் பதிலுரை மற்றும், மனித உரிமை அமைப்புக்கள் ஹோம்ஸின் விஜயம் தொடர்பில் அரசாங்கத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கை என்பவற்றை இங்கே தருகிறோம்.

2007 ஓகஸ்டில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ், மனிதாபிமானப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் ஆபத்தானதொரு இடமாக இலங்கை காணப்படுவதாக தமது விஜயத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது கூறினார்.

தமது இந்த விஜயத்தின்போது கொழும்பில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த அவர், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் நேரில் விஜயம் மேற்கொண்டு அங்கு இடம்பெறும் மனிதநேயப் பணிகளை நேரடியாகப் பார்வையிட்ட பின்னர், ஓகஸ்ட் 9ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் மனிதநேயப் பணிகள் தொடர்பான தெளிவான நிலைப்பாட்டைத் தமது இந்த விஜயத்தின்போது தன்னால் நேரடியாகக் கண்டறியக்கூடியதாக இருந்தது என்று இங்கு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், யாழ் குடாநாட்டில் இடம்பெறும் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் உணவு விநியோகம் பற்றித் தான் திருப்தியடைவதாகவும் கூறியிருந்தார்.

அதிகரித்திருக்கும் மோதல்களால் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் இலங்கைக்கு அனுமதிக்கப்படவேண்டும் எனவும் தனது கொழும்பு விஜயத்தின் பின்னர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு வழங்கியிருந்த செவ்வியில் ஜோன் ஹோம்ஸ் கூறியிருந்தார்.

"மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனக்குக் கிடைத்திருக்கும் அறிக்கைகளுக்கு அமைய, மனிதநேயப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு உலகிலேயே மோசமான இடங்களில் ஒன்றாக இலங்கை காணப்படுகிறது" என்று தமது விஜயத்தின் பின்னர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் அவர் தெரிவித்தார்.

**"ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் ஏனையோரைவிட உயர்ந்த தராதரங்களால் மதிப்பிடப் படுகின்றன. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் நடத்தவேண்டிய கடப்பாடு அவற்றுக்கு உண்டு"**

"கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 34 மனிதநேயப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன. இதில் ஏ.சி.எவ். நிறுவனத்தின் 17 பணியாளர்களும் உள்ளடங்குகின்றனர்".

"ஜனநாயகமுறை தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கங்கள் ஏனையோரைவிட உயர்ந்த தராதரங்களால் மதிப்பிடப்படுகின்றன. எனவே, இவ்வாறான

(பக்கம் 55இல் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் கருத்து

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

"ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளுக்கான செயலாளர் நாயகம் திரு ஜோன் ஹோம்ஸ், மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடனான இணைந்த ஊடக மாநாட்டிற்கு சமூகமளிப்பதற்கு முன்னர், 'றொய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனத்திற்களித்த நேர்காணலின் பதிலாக சில கருத்துக்களைத் தெரிவித்ததானது இலங்கை அரசாங்கத்திற்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. அந்த நேர்காணலானது, 'உதவிப் பணியாளர்கள் வேலை செய்வதற்கு இலங்கை மிக ஆபத்தான நாடு' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட போதும், அது (மனித உரிமைகள் அமைச்சருடனான) ஊடகவியலாளர் மாநாட்டிற்குப் பின்னரே வெளியிடப்பட வேண்டும் என்று தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆதரவுடனான உறவை வளர்க்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சேர் ஜோன் ஹோம்ஸின் இந்த வருகையின், அவர் வெளியிட்ட அறிக்கையினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பற்றி நாம் மிகவும் வருத்தப்படுகிறோம். சேர் ஜோன் ஹோம்ஸ் தனது செவ்வியில் கூறியவற்றை நான் இங்கு மேற்கோள் காட்டுகிறேன்."

"மனிதநேயப் பணியாளர்களுக்கு இங்குள்ள பாதுகாப்பின்மை பற்றிய சவால்களுடன், அந்த வகையில் அது பற்றிய இங்குள்ள பதிவுகள் உலகிலேயே மிகவும் மோசமானதொன்றாகவிருக்கிறது". அவரது இந்தக் கருத்து முழுவதும் இறுதியாக இலங்கை மீதே அழுத்திக் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளுக்கான அலுவலகம் திரு ஹோம்ஸின் இலங்கை வருகை பற்றிய தமது நேற்றைய அறிக்கையில், "இலங்கை மனிதநேயப் பணியாளர்களுக்கு ஆபத்தான இடம்" என்று விபரிக்கவில்லை. இதனால், ஐ.நா.வின் அறிக்கைக்கும் கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் சொன்ன கருத்துக்களுக்கும் முரணாக, 'றொய்ட்டர்'ருக்கு வழங்கிய அறிக்கையில் திரு ஹோம்ஸ் கருத்துத் தெரிவித்தது பற்றி இலங்கை அரசாங்கம் மிகுந்த கவலை கொள்கிறது. "மனிதநேயப் பணியாளர்களுக்கு இலங்கை பாதுகாப்பான இடமல்ல" என்ற சேர் ஜோன் ஹோம்ஸின் கூற்றை இலங்கை அரசாங்கம் நிச்சயமாக மறுக்கிறது.

**" ஊடகவியலாளர்கள் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக உண்மையை மறைப்பர் என்பதனால் ஊடகத்தினருடன் எச்சரிக்கையாக இருக்கும்படி ஹோல்ம்ஸுக்கு கூறியிருந்தோம் "**

திரு ஹோம்ஸுடனான எனது பேச்சுவார்த்தையில், மனிதநேயப் பணியாளர்களுக்குரிய பாதுகாப்பை வழங்குவதில் அரசாங்கத்தின் முழுமையான அர்ப்பணிப்புப் பற்றி வெளிப்படையாக தெளிவுபட அழுத்தியிருந்ததாகத் தெரிவித்திருந்ததுடன், சேர் ஜோன் ஹோம்ஸும் வடக்குக் கிழக்கில் பணியாற்றும் மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப்புப்பற்றி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளைப்பற்றி பாராட்டியுள்ளார்.

"சேர் ஜோன் ஹோம்ஸுடனான தனது சந்திப்பில், பாதுகாப்புச் செயலாளர் நிறுவில் உண்மையான மனிதநேயப் பணியாளர்களை வரவேற்பதாகக் கூறினார், அதற்கும் மேலாக அவர் (ஹோம்ஸ்) வடக்குக் கிழக்கிற்கு நேரில் சென்று அங்கிருக்கும் நிலைமைகளையும் மக்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். பிரெஞ்சு அரசசார்பற்ற நிறுவனமான ஏ.சி.எவ். இன் 17 உதவிப் பணியாளர்களின் படுகொலை சம்பந்தமாக நடைபெறும் விசாரணைகளின் தற்போதைய நிலைமைகள் பற்றியும் அரசாங்கம் திரு ஹோம்ஸிற்குத் தெரிவித்துள்ளது".

"அவ்விசாரணைகளின் முன்னேற்றம் பற்றி அரசாங்கம் மிகவும் நம்பிக்கையுடன் இருப்பது மட்டுமன்றி, இலங்கையின் வெளிநாட்டுக் கலைஞர் சம்பந்தப்பட்ட முகவரும் சிலருக்குச் சங்கடத்தைத் தரும் அதிசயமாக சில உண்மைகள் உரிய நேரத்தில் வரக்கூடும்"

இந்தக் கூற்றினையிட்ட சேர் ஜோன் ஹோம்ஸின் பேச்சானது, இலங்கைக்கு அவமரியாதையையும் அதன் சர்வதேச அபிமானத்தைக் களங்கப்படுத்தவும் முயலும் மேற்குலகத்து நாடகம் போடுவதாகவே இலங்கை அரசாங்கம் உணர்கிறது. சேர் ஜோன் ஹோம்ஸின் அறிக்கைக்கும் கருத்துக்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் விரும்பாத அதேநேரம், அவர் 'றொய்ட்டர்' நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்த கருத்துக்களை முழுவதுமாக நிராகரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோல்ம்ஸின் சந்திப்பில் படையினரின் தலையீட்டைக் கண்டிக்கிறோம்

ஐ.நா.வின் மனிதநேய விவகாரங்களுக்கான செயலாளரின் யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப்பில் படைத்தரப்பின் தலையீட்டைக் கண்டித்து சிவில் சமூக அமைப்புக்கள் வெளியிட்ட ஊடக அறிக்கை

இலங்கையின் மனிதநேய மற்றும் மனித உரிமைகளின் நிலைமைகள் மோசமாகிக் கொண்டு போவதைப்பற்றி சிவில் சமூக நிறுவனங்கள் மிகுந்த அக்கறைகொண்டிருப்பதன் காரணமாக, ஐ.நா.வின் மனிதநேய விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் திரு ஜோன் ஹோம்ஸின் இலங்கை விஜயத்தை நாம் வரவேற்கிறோம். அவரது பதவியிலிருக்குமொரு வர் இலங்கையின் போர் நிலைமைகளை உன்னிப்பாக ஆராய்வதாவது, இலங்கையில் மீண்டும் சமாதானமேற்படுவதற்காக எதிர்காலத்தில் முன் னெடுக்கப்படும் எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் முக்கியமானதொரு அம்சமாகவிருக்கும்.

ஆனாலும், ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதியன்று யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் நடந்த கூட்டத்தில் அங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்திக்க முயன்றபோது, அது, அங்கு சமூகமளித் திருந்த பெருந்தொகையான படையினரால் குழப்பப் பட்டதாக எமக்குத் தெரியவருகிறது.

திரு ஹோம்ஸின் யாழ் வருகைக்கு முதல் நாளே சிவில் சமூகப் பிரதிநிதிகளையும், அரசசார்பற்ற நிறுவனத்தினரையும் பலாலி இராணுவத் தலைமை யகத்துக்கு அழைத்த பிரதேச இராணுவத்தளபதி, திரு ஹோம்ஸ் உடனான சந்திப்பின்போது மனித உரிமை விவகாரங்களைப்பற்றிப் பேசவேண்டாமென வும், மனிதநேய உதவிகள் பற்றி மட்டுமே பேசுமாறும் கேட்டுக்கொண்டதாக யாழ்ப்பாணத்திலுள்ள எமது சகாக்கள் எமக்கு அறியத்தந்திருந்தனர். பாதுகாப்புச் சூழ்நிலை மற்றும் மனித உரிமை விடயங்கள் பற்றி இராணுவமே திரு ஹோம்ஸிடம் சுருக்கமாகச் சொல்லுமெனவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி அரசாங்க அதிபர் சுருக்கமாக எடுத்துரைப்பார் எனவும் அன்று சமூகமளித்த சிவில் சமூகப் பிரதிநிதிகளிடமும், அரசசார்பற்ற நிறுவனப் பிரதி நிதிகளிடமும் இராணுவம் சொல்லியிருந்தது.

இராணுவத்தின் இந்தத் தலையீடு தொடர்பான தமது ஆழ்ந்த அதிருப்தியை வெளியிடுகின்றும் யாழ்ப்பாணத்திலுள்ள மனிதநேய, மனித உரிமை அமைப்புக்கள், தனிப்பட்டமுறையில் நாம் திரு ஹோம்ஸை சந்தித்துப் பேசியிருந்தால் தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் சுதந்திரமாக அவருடன் பகிர்ந்துகொண்டிருக்க முடிந்திருக்கும் எனவும் கவலை தெரிவித்திருக்கின்றன.

சிவில் சமூகம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங் களின் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் இவ்வாறான இராணுவத் தலையீட்டை நாம் கண்டிக் கிறோம். இச்செய்கையானது, ஐ.நா. பிரதிநிதிகளின் விஜயங்களின்போது சிவில் சமூகக் குழுக்களுடன் இடம்பெறும் சந்திப்புக்கள் பிறரின் தலையீடுகளின்றி இருக்கவேண்டும் என்ற வழக்கமான நடைமுறையை யும், இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத சந்திப்புக்களுக்கான அழைப்புக்களை ஏற்க மறுத்து விடும் அவர்களின் வழக்கத்தையும் முற்றாக மீறுவதும் செய்வதுபோலுள்ளது. மனிதநேய அமைப்புகள் மற்றும் மனித உரிமை நிறுவனங்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள், கொலைகள் போன்ற பாதுகாப்பற்ற தன்மையைப் பார்க்கும்போது, இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட அங்கத்தினர்களின் பாதுகாப்புப்பற்றி நாம் மிகவும் கவலைகொள்கிறோம்.

முறையான தகவல்களைத் திரு ஹோம்ஸ் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்கு யாழ்ப்பாண இராணுவம் எடுத்த நடவடிக்கைகள், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மனித உரிமைகள் மற்றும் மனிதநேயப் பிரச்சனைகள் பற்றி அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எந்தவிதத் தெளிவோ பொறுப்போ இல்லை என்ற சர்வதேச சமூகத்தின் கவலையை மீண்டும் உறுதிசெய்கிறது.

மனிதநேய அமைப்புக்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புக்களின் வித்தியாசமான பார்வைகளின் மூலம் இலங்கையின் கள நிலைமைகளைப் பற்றி முழுமை யாக அறிந்துகொள்ளும் தமது இயலுமை இத்தகைய நடவடிக்கைகளினால் எதிர்மறைப் பாதிப்புக்கு உள்ளானமை திரு. ஹோல்ம்ஸ் வெளியிடும் அறிக்கையில் பிரதிபலிக்கப்படும் என்று நாம் நம்புகிறோம்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

சுதந்திர ஊடக இயக்கம்

INFORM மனித உரிமைகள் ஆவணமாக்கல் நிலையம்

சகலவிதமான இன ஒடுக்குமுறைகளுக்கெதிரான சர்வதேச இயக்கம்

சட்ட மற்றும் சமூக அறக்கட்டளை

Rights Now



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னுமொரு இழக்கப்பட்ட சந்தர்ப்பம்...

அவசரமாக ஒரு ஆதாரமற்ற மகஜரை [illegible] தயாரிக்கப்பட்டதுடன், தெளிவின்மைகளையும் குறைபாடுகளையும் அது கொண்டிருந்தது. எவ்வாறாயினும், இக்கோட்பாடுகள் காலத்துடு நின்று பிடித்து, இரண்டு தசாப்த காலங்களாக அவர்களது அரசியல் உரிமைகளையும், இறைமையையும் [illegible] நின்றுபிடித்திருக்கின்றன. எனது அறிவுக்கெட்டியவரை கேதீஷால் பட்டியலிடப்பட்ட எந்த ஒரு அமைப்போ, அல்லது கேதீஷோ இக்கோட்பாடுகளை மறுதலிக்கவில்லை. இது பற்றிய முழுமையான அறிக்கையொன்று 1998 மார்ச்சில் அவரால் வெளியிடப்பட்ட "இலங்கை; தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள்" எனும் நூலில் மீளவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

திம்புக் கோட்பாடுகளில் உள்ள சொற்கள் தொடர்பாக சில திருத்தங்கள் செய்யப்படுவதன் தேவை தெளிவாகவுள்ளது. உதாரணமாக சுயநிர்ணயம் என இங்கு குறிப்பிடுவது, உள்ளக சுயநிர்ணய உரிமையாகக் கருதப்படுமே தவிர, பிரிவினை என்பதாகக் கருதப்படவில்லை. அத்துடன், தமிழ் பேசும் மக்களின் [illegible] தன்மையை வெளிப்படையாக அங்கீகரிப்பதாகவும் உள்ளது. உண்மையில் ஒஸ்லோ வாசகம் என்பது திம்புக் கோட்பாடுகளின் சிறப்பிக்கப்பட்ட ஒரு வரைபாகவே அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், அந்த நேரத்தில் (மார்கழி 2002) ஒஸ்லோ பிரகடனத்தின் அவசர [illegible] அடித்தளத்திலிருந்தும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு உகந்த [illegible] நிலைமையில் அரச சமாதானச் செயலகத்தில் கேதீஷ் இருக்கவில்லை என்பது ஓர் [illegible]. இந்த வகையில் இது இன்னொரு இழக்கப்பட்ட சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

## மனிதநேயப் பணியாளர்கள் பணியாற்ற...

குற்றச்சாட்டுக்கள் குறித்து உரிய கவனம் செலுத்தி, அவை தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் நடத்த வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு" என அவர் ரொய்ட்டர்ஸ் செவ்வியின் போது கூறினார்.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களை இலங்கைக்குள் அனுமதித்தால், தாம் ஒன்றையும் மறைக்கவில்லை யென்று கூறிவரும் இலங்கை அரசாங்கம் தொடர்பான சர்வதேசத்தின் கண்ணோட்டம் நல்லதாகவே இருக்கும் என ரொய்டர்சுக்கு வழங்கிய செவ்வியில் சுட்டிக் காட்டிய மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளின் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ், அரசாங்கம் மாத்திரமல்ல, விடுதலைப் புலிகள் தொடர்பிலும், சிறுவர்களைப் படையில் இணைப்பது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். கிழக்கு மாகாணத் தில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினரும் சிறுவர்களைப் படையில் இணைத்து வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகின்றன என்றும் அவர் கூறினார்.

"இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்க ளுடன் அரசாங்கப் படைகளுக்கும் தொடர்பு இருப்ப தாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக் களைத்தின் கொள்ளப்பட வேண்டியது அவசியம். மனித உரிமைகள் கண்காணிப்பகம் தேவையற்றதொரு அமைப்பல்ல. அவர்கள் தேவையற்ற குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை" என அவர் கூறினார்.

"எந்த ஒரு தரப்பின் நெருக்கடிக்கும், சந்தேகத்துக் கும் உள்ளாகாத வகையில் நாம் செயற்படக்கூடியதாக இருக்கவேண்டும்" என்று ரொய்ட்டர்ஸ் செவ்வியில் குறிப்பிட்ட ஹோம்ஸ், "மக்கள் இயல்பு வாழ்க்கையை மீள்நிறுத்த உதவுவதற்கே நாம் முயற்சிக்கிறோம்" என்றும் தெரிவித்தார்.

## இது இலங்கை அரசாங்கத்துக்கு...

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு ஒன்றை அடுத்துத் தின்படி, அவர்கள் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக உண்மையை மறைப்பர் என்று அவரது வருகையின் போது சேர் ஜோன் ஹோம்ஸுக்கு ஊடகத்தினருடன் எச்சரிக்கையாயிருக்கும்படி அரசாங்க அதிகாரிகள் எச்சரிக்கை செய்தபோதும், துரதிர்ஷ்டவசமாக, ஊடகங்கள் தமது வழமையான உண்மையை மறைத்து உணர்ச்சிகளைத் தூண்டித் தலையங்கங்களை எழுதிய தால், அவரின்ந்த செவ்வி ஐ.நா. வுடனான நம்பிக்கை யைக் கட்டியெழுப்பவெனப் போடப்பட்ட எமது திட்டத்தை மிகவும் பாதித்துள்ளது.

"ஐ.நா.வுடனும், அதன் நிறுவனங்களுடனும் ஒன்றி ணைந்து பணியாற்ற விரும்பும் எமது அரசாங்கத்தின் உண்மையான விருப்பத்தை மீண்டும் நாம் வலியுறுத் தும் அதேநேரம், கட்டுப்பாடற்ற கருத்துக்களும் யோசனைகளும் அந்த அமைப்பின் நடுநிலைமையைக் கேள்விக்குறியாக்குகிறது என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"இலங்கை முழுவதும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து, தண்டனையிலிருந்து தப்புதல் மற்றும் விசாரணைகளில் இடையூறுகள் அல்லது தாமதங்கள் உண்டாகும் சூழ்நிலையிலேயே, விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் ஆரம்பிக்கப்பட்டன."

# விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு பற்றிய விளக்கவுரை

## அறிமுகம்

விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு என்பன மனித உரிமைகள் மீதான சர்வதேசக் கண்காணிப்பு பற்றிய கவலைகளின் பிரதிபலிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவை. விசாரணை ஆணைக்குழுவை ஆரம்பிக்குந்திகதி நாள் 3 நவம்பர் 2006 ஆக இருந்ததுடன், அது 16 கடந்த கால வழக்குகளை விசாரணை செய்யவேண்டியும் இருந்தது. இப்படியான வழக்குகளும் அப்பிரமாணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2007 ஜனவரி 12இல், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் செயற்பாட்டு நோக்கங்கள்(Terms of Reference) புதுப்பிக்கப்பட்டன. விசாரணை ஆணைக்குழு நடத்தும் விசாரணைகளையும், புலனாய்வுகளையும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு அவதானிக்கும் என அந்த செயற்பாட்டு நோக்கங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை முழுவதும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து, தண்டனையிலிருந்து தப்புதல் மற்றும் விசாரணைகளில் இடையூறுகள் அல்லது தாமதங்கள் உண்டாகும் சூழ்நிலையிலேயே, விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன், உள்ளூர் நிறுவனங்களில் நியமனம் பற்றிய கேள்விகளும் எழுப்பப்பட்டதுடன், அவற்றின் தகுதி, திறமை மற்றும் அவற்றின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை போன்ற பிரச்சனைகளும் எழுப்பப்பட்டன. அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான அரசியலமைப்புச்சபை அரசியலமைப்புக்கு உட்படுத்தப்படாத நிலை, மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன விசாரணை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு மன்ற நீதிபதிகள் போன்றவர்கள் ஜனாதிபதியினால் தன்னிச்சையாக பக்கச்சார்பாக நியமிக்கப்பட்டமை போன்றன. இந்த நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் நடுநிலைமை பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன. இதன் வெளிப்பாடாக,



பவானி பொன்சேகா
(ஆய்வாளர்), மனித உரிமைச் செயற்பாட்டாளர் மற்றும் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: வ. விசுவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவிலான மனித உரிமை மீறல்கள் வெளிப்படுத்தப் படாமலோ, சுதந்திரமான முறையில் விசாரணைக்குட் படுத்தப்படாமலோ அல்லது குற்றவழக்குத் தொடர்புகளை நிறுவப்படுத்துவதில் தாமதங்களோ ஏற்படவில்லை.

விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பின்னர் நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளமையானது, விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் ஆரம்பிக்கப் பட்டமையினால் இவை தடுக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

முன்னெப்பொழுதுமில்லாத வகையில் மனித உரிமை மீறல்களும் மனிதநேயக் கொடுமைகளும் மோசமடைந்து வருவதால், ஒரு சுதந்திரமான சர்வதேசக் கண்காணிப்புச் செயல்முறையொன்றும், மனித உரிமைப் பாதுகாப்பிற்கான களத்திலிருக்கும் ஒரு அமைப்பொன்றும் மிகவும் அவசியமாகிறது. இவ்வாறான உணர்வுகள் 'சுயாதீன சர்வதேச நிபுணர்கள் குழுவின், ஜூன் 11, 2007ல் வெளிவந்த முதலாவது பொது அறிக்கையில் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. தேசிய மற்றும் சர்வதேசக் கண்காணிப்புக்குப் பதிலீடாக சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவையோ விசாரணை ஆணைக்குழுவையோ கொள்ளக்கூடாதெனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. 2007 ஒக்டோபர் 11இல் தனது இலங்கை வருகையின் நிறைவில், ஐநா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பர் வெளியிட்ட அறிக்கையில், விசாரணைக்குழுவின் பல செயல்முறைகளையும் பலவிதமான மட்டுப் படுத்தல்களையும் பற்றிய தனது கவலையையும் தெரிவித்திருந்தார்.

**"விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப்பின்னர் நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளமையானது, விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் ஆரம்பிக்கப் பட்டமையினால் இவை தடுக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது"**

விசாரணை ஆணைக் குழுவாலும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவாலும் நடத்தப்பட்ட விசாரணைகளாலும், புலனாய்வுகளாலும் எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சனைகள் பற்றி இக்கட்டுரை விரிவாகக் கருத்துரைக்கிறது. இது பற்றிய விரிவான தகவல்கள் கொள்கை விளக்கங்கள் பற்றிய வெளியீட்டில் உள்ளது. அதற்கான இணையத்தளம்: www.cpalanka.org

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்கு : தொடர்ந்த இடையூறுகள்

சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கைகளும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கொள்கை விளக்கங்களும் விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பற்றிய தன்னுரிமை மற்றும் முரண்பட்டுத்தன்மைகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்கு பற்றிக் கருத்துரைக்கின்றன. சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் அறிக்கைத் தொடரில் முதலாவதாக வெளியிட்ட அறிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குற்றவியல் விசாரணைகளிலோ அல்லது குற்றவியல் விசாரணைகளை நடத்துவதிலோ இதுவரையிலோ சம்பந்தப்படவில்லையென்றும், புலனாய்வாளர்களுக்குச் சட்ட ஆலோசனைகளை வழங்குவதில் மட்டுமே அவர்கள் சம்பந்தப் பட்டிருந்தனர் எனத் தலைவரும் சட்டமா அதிபரும் தெரிவித்துள்ளனர். "குற்றவியல் விசாரணைகள் முடிவு பெற்ற பின்னர் தான் சட்டமா அதிபர் திணைக்களம் தனது தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும்" என்று தலைவரின் அறிக்கை தெரிவிப்பதால், சட்டமா அதிபர் திணைக்களம் இந்நடவடிக்கைகளில் முறையாக எப்போது சம்பந்தப்படும் என்ற பிரச்சனை எழுகிறது. இந்தமாதிரியான நிச்சயமற்ற தன்மை, அடுத்தடுத்துவரக்கூடிய வெளியீடுகளில் முரண்பாடான தன்மையை ஏற்படுத்தும் என்ற கவலையைக் கொடுக்கிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் அரச வழக்கறிஞர்களால் அளிக்கப்பட்ட சட்டவாலோசனையின்போது, அப்பிரச்சினை சம்பந்தப்பட்ட தகவல்கள் பகிரப்படும் என்றும், அதனால், விசாரணைகள் சம்பந்தப்பட்ட தகவல்களை வழக்கறிஞர்கள் இரகசியமாக வைத்திருப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அநுகூலமான தகவல்கள் பின்னர் வரும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளில் உபயோகிக்கப்படலாம். விசாரணை நிலையின் தகவல்களை இரகசியமாக வைத்திருக்கும் அரச வழக்கறிஞர்கள் தான் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கக்கூடும் என்பதால் வழக்கறிஞர்களின் தன்னுரிமை மற்றும் முரண்பாடுகள் பற்றியதுமான பிரச்சனைகள் எழுகின்றன.

மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சம்பந்தமானது விசாரணை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை, மற்றும் இந்நடைமுறை உண்மையிலேயே நடுநிலையான தன்மையைக் கொண்டதா போன்ற கேள்விகளையும் எழுப்புகிறது.

## வழக்கறிஞர் குழு

விசாரணை ஆணைக் குழுவானது, சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள ஆறு உறுப்பினர்களையும் இரு சுதந்திரமான வழக்கறிஞர் களையும் கொண்டதான ஒரு வழக்கறிஞர் குழுவைக் கொண்டிருக்கும். இவ்விசாரணைகளுக்கும், புலனாய்வுக்கும் தேவையான பக்கச்சார்பற்றதும் நடுநிலைமையானதும் என்ற கருத்தை வலுப்படுத்தும் அல்லது வேறு பிற அம்சங்களைக் கொண்ட சுயாதீனமான வழக்கறிஞர் குழு இருக்கின்றது என்சொல்வது அவசியமான ஒரு கூற்றாகும். அப்படியான நடைமுறைகளால் பாதிக்கப் பட்டோர், சாட்சிகள் மற்றும் பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி மேலும் சாட்சியங் களையும் தகவல்களையும் தர முன்வரக்கூடும்.

## நிதியுதவி

விசாரணை ஆணைக்குழுவின் நிதிப்பிரச்சனை பற்றிய கவலைகளும் எழுப்பப் பட்டுள்ளன. நிதி, ஜனாதிபதி செயலகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றதென்றும், விசாரணை ஆணைக்குழுவுக்கு நிதிச் சுதந்திரம் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு சுயாதீன ஆணைக்குழு இயங்குவதற்கும், வெளியாரில் தங்கி நிற்காமல் நம்பகச் சுதந்திரமாகச் செயற்பட முடியுமென்று காட்டுவதற்கும், நிதிச் சுதந்திரம் முக்கியமானது. பல்வேறு தடைகளைத் திணிப்பதன் மூலமும், விசாரணை ஆணைக் குழுவிற்கான நிதியுதவியைத் தாமதப்படுத்துவதாலும், உண்மையிலேயே அரசாங்கம் தான் இவ்விசாரணை ஆணைக்குழுவையும் அதன் விசாரணைகளையும் புலனாய்வு களையும் செயற்படுத்துகிறது.

> "விசாரணைகளிலும், புலனாய்வுகளிலும் தமது ஒத்துழைப்பை வழங்க அரசாங்கம் மறுக்கிறது என்ற தெளிவான ஒரு செய்தி விசாரணை ஆணைக்குழு, சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு மற்றும் பொதுமக்களுக்குச் சொல்லப்படுகிறது"

## விசாரணைகளிலும் புலனாய்வுகளிலும் ஏற்படும் தாமதங்கள்

விசாரணைகளிலும் புலனாய்வுகளிலும் இவ்விதமான பிரச்சனைகளாகவுள்ள நேர காலங்களையும் தாமதங்களையும் அறிக்கைகள் தலையங்கப் படுத்தியுள்ளன. ஆறு மாதங்களுக்கு முன்னர் நவம்பர் மாதம் 2006ல் இது அதிகாரப்படுத்தப்பட்டபோதிலும், ஆரம்பகால விசாரணைகளும் புலனாய்வுகளும் மே மாதம் 2007 இலேயே ஆரம்பமாயின என சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு தெரிவிக்கிறது. விசாரணை ஆணைக்குழுவால் பின்தொடரப் பட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஐயம் தெரிவிக்கப்பட்டன. உள்ளக நடவடிக்கைகளிலுள்ள தெளிவற்ற தன்மை, விளக்கமான ஒரு வேலைத்திட்டத்தை அறிவிக்கத் தவறியமை, முக்கியமான சாட்சிகளை ஆட்சேர்ப்புச் செய்யத் தவறியமை, அரசாங்கத்திலிருந்து சாட்சியங்களையும் தகவல்களையும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவுடன் பகிர்ந்துகொள்ளத் தவறியமை மற்றும் விசாரணை மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புப் பிரிவுகளின் செயற்திறனின்மை போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு மேலும், அந்த மாதிரியான தாமதங்கள், "தனக்குக் கொடுக்கப்பட்ட மக்களாணையை உரிய காலத்தில் நிறைவேற்றும் விசாரணை ஆணைக்குழுவின் திறமை பற்றிய பொதுமக்களின் நம்பிக்கையைக் குலைக்கும்" என்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தகவல்களைப் பெறுவதில் தொடரும் பின்னடைவுகள்

பிரேரணையில் குறிப்பிடப்பட்ட பதினாறு வழக்குகள் பற்றிய தகவல்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிற தகவல்களும் கிடைக்கச் செய்வதென்பது நடக்காத ஒன்று. இது அரசாங்கத்தைச் சார்ந்தவர்களால், அப்பதினாறு வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் புலனாய்வு பற்றித் திரட்டப்பட்ட தகவல்களையும், விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்களால் கேட்டுக்கொள்ளப்பட்ட பிற தகவல்களையும் பரிமாறிக் கொள்வது சம்பந்தப்பட்டது. விசாரணை ஆணைக்குழு தொடர்ந்தும் எதிர்நோக்கும் பிரச்சினையென்னவெனில், தமது ஆணைக்குக் கீழுள்ள வழக்குகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதுதான். ஊடகங்களின் அறிக்கைகளின் படி, முடிக்கப்பட்ட விசாரணைகளின் அரசாங்கப் பதிவுகளைப் பெறுவதில் விசாரணை ஆணைக்குழுவுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை வழக்கைப் பொறுத்தவரையில், அது சம்பந்தமான பதிவுகள் விசாரணை ஆணைக்குழுவிற்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் மறுக்கப்பட்டுள்ளது. இம்மறுப்பின்மூலம் விசாரணைகளிலும், புலனாய்வுகளிலும் தமது ஒத்துழைப்பை வழங்க அரசாங்கம் மறுக்கிறது என்ற தெளிவான ஒரு செய்தி விசாரணை ஆணைக்குழு, சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு மற்றும் பொதுமக்களுக்குச் சொல்லப்படுகிறது. அத்துடன், மனித உரிமை மீறல்களுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தும் அதனது அர்ப்பணிப்பின் தன்மையையும் அம்மறுப்பு தெளிவாகக் காட்டுகிறது.

### சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புக் கட்டமைப்பின் முக்கியத்துவம்

இவ்விசாரணைகளிலும் புலனாய்வுகளிலுமுள்ள இன்னொரு பெரும் தடைக்கல் என்னவெனில், தாம் பழிவாங்கப் படாமல் பாதுகாக்கப்படுவது பற்றிய நம்பிக்கையின்மையால் சாட்சியங்கள் தம்மை முன்னிலைப்படுத்தாமலிருப்பதுதான். இதற்குக் காரணம் சட்டமா அதிபர் திணைக்களம், பொலிசார், பொதுச்சேவைகள், நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் குழு போன்ற நிறுவனங்களின் மீதான அவநம்பிக்கை மட்டுமல்ல, அத்துடன், இலங்கையில், சாட்சியங்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புப் பற்றிய சட்டங்களேதுவும் இல்லை. இக்காரணங்களால் பலர் தகவல்களையும் சாட்சியங்களையும் கொண்டு முன்வரத் தயங்குகிறார்கள். தகவல்களைத் தருவதில் பலருக்கேற்பட்ட பயங்கர அனுபவங்களின் விளைவாக, 12 பிரதிநிதிகளே இவ்விசாரணைக்குழுவினை அணுகியுள்ளனர் என விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் திரு பியதாச தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்டோரையும் சாட்சியங்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்துவது பற்றிய குறிப்பீடுகளை கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு சட்டமானது மிகவும் அதிகமானதைச் செய்யும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். சட்டத்தில் முழுமையான நிறைவேற்றுகை முக்கியமானது. இச்சட்டங்களும் கட்டுமானங்களும் இருக்கும் சூழ்நிலையிலேயே மனித உரிமைகளை மீறுவோர் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளாகவும், பாதுகாவலர்கள் என மக்கள் நினைத்தவர்களே குற்றமிழைத்தோராகவும் இருக்கின்றனர்.

### உறுதியானதும் ஒழுங்கானதுமான வருகைகளும் கூட்டங்களும்

விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் விசாரணைகள் நடைபெறும் இடங்களுக்கு வருகை தந்து, அவ்வழக்குகள் சம்பந்தமாக அதிகளவிலான மக்களைச் சந்திப்பது மிகவும் முக்கியமானது. அந்த மாதிரியான வருகைகளும் கூட்டங்களும் பாதிக்கப்பட்டோராலும் சாட்சியங்களாலும் மற்றும் அப்பகுதியிலுள்ள சமூகத்தினராலும் முகங்கொள்ளப்படும் கஷ்டங்களை மனதில்கொண்ட வகையில், விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவைச் சந்திக்கும் மக்களின் பாதுகாப்பைப் பாதிக்காத வண்ணம் நடத்தப்படவேண்டும்.

விசாரணை ஆணைக்குழுவும், சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவும் புதிய தகவல்களைப் பெறுவதற்காகவும், விசாரணைகள் புலனாய்வுகளின் முன்னேற்றங்கள் பற்றி சம்பந்தப்பட்ட குழுக்களிடம் தெரிவிப்பதற்காகவும், இணைந்தும் தனித்தனியாகவும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனும், சம்பந்தப்பட்ட பிற செயற்பாட்டாளர்களுடனும் அடிக்கடி கூட்டங்களை நடத்தவேண்டும். மேலும், அப்படியான கலந்துரையாடல்கள், அப்பகுதியிலுள்ள சாட்சியங்களினதும் மக்கள் சமூகத்தினதும் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தும் வகையில் நடத்தப்பட வேண்டும். அப்படியான தகவல் வழிகள், சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நடைமுறைகள் பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயச் சட்டமீறல்களின் தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரத்தை தடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள்




ஒரு சட்டத்தின் பெறுமானது, அடிப்படை விதிகளை அளிப்பதன் மூலம் ஒரு சமுதாயத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தியும், அதனை அச்சமூக மக்கள் பின்தொடர்ந்தால் அவர்களின் பொதுவான இலட்சியங்களை அடைவதற்கு இடமளிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அச்சட்டம் நல்ல விளைவுகளை ஏற்படுத்த வேண்டுமாயின், அது வெறும் அறிவுறுத்தும் நூலாக அச்சில் மட்டுமே இருப்பதோடு நின்றுவிடாமல், மக்களின் பழக்கவழக்கங்களை மாற்றக்கூடிய சக்தி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். சட்டத்தை மீறினால் தடைகளும் கட்டுப்பாடுகளும் ஏற்படும் என்ற பயத்தின் காரணமாகவன்றி, இயல்பாகவே அச்சட்டங்களுக்கு மக்கள் அடிபணியவேண்டும். தடைகள் தண்டனைகளாகவன்றி, ஒரு பாடமாக அமையவேண்டும். குற்றவியல் சட்டத்தில் தண்டனையின் விளைவுகள் என்பது, நிகழ்ந்திருக்கக்கூடியவற்றைப் பற்றிப் புலனாய்வு செய்து, அறிந்து, விசாரித்து, குற்றஞ்சாட்டித் தண்டித்தல் என்பதற்கே சமனாகவிருக்கிறது.

தற்போது இலங்கையில் நிகழ்ந்துவரும் பாரதூரமான மனித உரிமை மீறல்களும், தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரமும், அசாதாரணமான குற்றங்களுக்குரிய தடுப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய கட்டாயத்தை வலியுறுத்துகிறது. வெற்றிகரமான குற்றத்தடுப்பு விசாரணைகள் அதிர்ச்சியளிக்கும் வகையில் இலங்கையில் மிகக்குறைந்தளவில் - அதாவது - 4 வீதமளவேயுள்ளமை மட்டுமன்றி, பெரும்பாலும் இத்தகைய குற்றங்களும் மனித உரிமை மீறல் குற்றங்களும் முறையாக விசாரிக்கப்படுவதில் தோல்விபெற்றுப் பின்னர் அவை பூதாகாரமாக வடிவெடுத்து ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டு, அதற்கு ஒரு விசாரணைக் குழுவை உருவாக்கவேண்டும் என்ற கட்டாய நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விடுகின்றன.

> "சட்டத்தை மீறினால் தடைகளும் கட்டுப்பாடுகளும் ஏற்படும் என்ற பயத்தின் காரணமாகவன்றி, இயல்பாகவே அச்சட்டங்களுக்கு மக்கள் அடிபணியவேண்டும். தடைகள் தண்டனைகளாகவன்றி, ஒரு பாடமாக அமையவேண்டும்"

**றொசலின் மீபோஸ்**
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பணியாற்றியவரும், ருவாண்டாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பணிபுரிபவருமாவார்.
தமிழில்: வ.விசாலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விசாரணைக் குழுக்களின் விளைவுகளோ திருப்திகரமானதாக இருக்கவில்லை. இந்த உண்மையைத் தவிரவும், "சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் ஒப்பந்த"த்திற்குள் இலங்கை அடங்காது என்பதால், குற்றத்தன்மையின் ரீதியான தடுப்பு நடவடிக்கைகள் கொடிய மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்குப் போதாமலிருக்கிறது. ஆனபோதிலும், மிகவும் கொடுமையான மனித உரிமை மீறல்களைப் புரிபவர்களை வெறுமனே விட்டுவைக்கக் கூடாது. குவாதமாலா, முன்னைய யூகோஸ்லாவியா, சியாரா லியோன், கம்போடியா மற்றும் கிழக்குத் தீமோர் போன்ற நாடுகளை உதாரணமாகப் பார்த்தால் போர்க்காலங்களில் மனித உரிமை மீறல்களிலிருந்து தப்புவோர் தொடர்ந்தும் அக்காரியத்தைச் செய்துகொண்டேயிருப்பர் என்பது உறுதியாகிறது.

இலங்கையில் போர்க்காலக் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கெதிரான குற்றங்களைப் புரிவோருக்கெதிராக முறையான குற்றவழக்குத் தொடர்வதென்பது இயலாத காரியமாகக் காணப்படுகின்ற அதேநேரம், மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அது நடக்கவே முடியாதென்பதாய் சொல்லிவிட முடியாது. மிகவும் அடிப்படை நிலையிலே ஒரு குற்றத்தை விசாரணைக்குக் கொண்டுவருவதில் இரண்டு பகுதிகள் தேவைப்படுகின்றன. முதலாவது, ஏற்கனவே நடைமுறையிலுள்ள குறிப்பிட்ட குற்றத்திற்கெதிரான தடுப்புச்சட்டமும் அதற்கான தண்டனையும். இரண்டாவது, இம்மாதிரி வழக்குகளைக் கேட்டு அதற்குரிய நீதிகளை வழங்கக்கூடிய முறையான ஒரு விசேட நீதிமன்றம்(Tribunal). இந்த இரு பகுதிகளிலும், முதலாவது இலங்கையில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள அதேநேரம், இரண்டாவதற்குப் பல சட்டரீதியான தடைகள் ஏற்பட்டுள்ளன. போர்க்காலக் குற்றச்செயல்களையும் மனிதநேயத்திற்கெதிரான குற்றங்களையும் வழமையான உள்ளூர் நீதிமன்றங்களிலோ அல்லது இதற்கென ஏற்படுத்தப்பட்ட விசேட நீதிமன்றங்களிலோ வேறெங்களிலோ எதிர்வரும் காலங்களில் விசாரணை செய்வதற்கு எந்தத் தடைகளும் இல்லை.

## மனிதநேயச் சட்டத்தின் பொருத்தப்பாடு

மனிதநேயச் சட்டத்தின் தரத்திற்குட்பட்ட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் பயனுள்ள சட்டங்களை அமுலாக்குவதில் நடைமுறைப்படுத்துவது பற்றிய கருத்துக்கோட்பாட்டைப் பார்த்தால், தண்டனையை நிறைவேற்றுவதற்குரிய ஆணைக்குழு அமைக்கப்படும்போது அத்தண்டனைக்குரிய சட்டமானது ஏற்கனவே நடைமுறையில் இருத்தல் அவசியம் என்பது தெரிகிறது. மனிதநேயச்

> ❝ ஜெனீவா ஒப்பந்தத்தின் மூன்றாவது பொது விதியானது, போர்க்குற்றங்களான கொலைகள், கடத்தல்கள், சித்திரவதை மற்றும் இன்ன பிற கொடுமைகளிடமிருந்து பொதுமக்களைக் காப்பது பற்றிக் குறிப்பிடுகிறது ❞

சட்டங்களைக் கடைப்பிடிக்கும் திறமையான அமைப்புக்கள் போர்க்காலங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இது போர்க்குற்றங்களுக்கும் மனிதநேயக் குற்றங்களுக்கும் ஒரு சவாலாக அமையாது. பெரும்பான்மையான சர்வதேச மனிதநேயச் சட்டங்கள் ஏற்கனவே பொதுவானதொரு சர்வதேசச் சட்டத் தகுதியைப் பெற்றிருப்பதால், இலங்கை எந்தக் குறிப்பிட்டதொரு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருக்காவிட்டாலும் அது பொதுவானவையான சர்வதேச மனிதநேயச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டேயாகவேண்டும்.

இவ்வாறு பொதுவான தகுதியைப் பெற்றுள்ளவை என இனங்காணப்படும் ஒப்பந்தங்களில் 1949ன் நான்கு ஜெனீவா ஒப்பந்தங்களும் அடங்கும். உள்நாட்டு ஆயுதப் பிரச்சனை பற்றிய விடயத்தில் இலங்கைக்குக் குறிப்பாகப் பொருத்தமாகவிருக்கும் ஜெனீவா ஒப்பந்தத்தின் மூன்றாவது பொதுவிதியானது, போர்க் குற்றங்களான கொலைகள், கடத்தல்கள், சித்திரவதை மற்றும் இன்ன பிற கொடுமைகளிடமிருந்து பொதுமக்களைக் காப்பது பற்றிக் குறிப்பிடுகிறது. இதைப்போலவே, இலங்கையானது உள்நாட்டு ஆயுதப் பிரச்சனைகள் பற்றிய விடயத்திற்குப் பொருத்தமான ஜெனீவா ஒப்பந்தத்தின் மேலதிக மரபுச்சர்முறை - இரண்டின் - உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லையென்றாலும், ஆயுதப்போர்க் காலங்களில் பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டிய அதன் மூல நெறிமுறை, வழமையான சர்வதேசச் சட்டத்தில் ஒரு பகுதியாக இனங்கொள்ளப் பட்டுள்ளது.

கொலை, நாடுகடத்தல், சித்திரவதை, சிறைபிடித்தல், அரசியல் இன மற்றும் மத அடிப்படையில் கொடுமைப்படுத்தல் போன்ற திட்டமிட்டதும் பரவலானதுமான தாக்குதல்கள் எல்லாமே மனிதநேயத்திற்கெதிரான குற்றங்கள் என்பதன் அடிப்படையில், அவை வழமையான சர்வதேசச் சட்டத்திற்குள் அடங்கும் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சர்வதேசப் பிரச்சனைக்கும் உள்நாட்டுப் பிரச்சனைக்குமிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வித்தியாசமும் ஏற்படுத்தாது போனமையாலும், பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும் ஆயுதப் போருக்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டிய அவசியமின்மையாலும், மனிதநேயத்திற்கெதிரான குற்றங்கள் என்பதன் பொருத்தப்பாடு குறிப்பாக இலங்கை விடயத்திற்குச் சம்பந்தப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

மேலும், வழமையான சர்வதேச சட்டத்தின்படி, சிறுவர்களைப் படையில் சேர்ப்பது ஒரு குற்றம் என சியரா லியோன் நாட்டின் சிறப்பு நீதிமன்றும் தீர்ப்பளித்துள்ளது. கட்டாய ஆட்சேர்ப்பு, 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் படையில் சேர்ப்பது மற்றும் போரில் ஈடுபடுத்துவது என்பவையும் இதில் உட்படும். வழக்குத் தொடர்வோருக்கும் பிறிமா, கமாரா, கானு என்பவர்களுக்குமிடையே ஜூன் 2007 ல் நடந்த வழக்கில் முதன்முறையாக எதிரிகளுக்குக் குழந்தைகளைப் படையில் சேர்த்ததற்காகத் தண்டனை வழங்கப்பட்டது. இலங்கையில் பெரும்பாலான கொடும் செயல்கள் நடந்ததும் தொடர்ந்தும் நடந்துகொண்டிருப்பதும் சட்டப்படி தடை செய்யப்பட்டவை என்பது இதனால் தெளிவாகிறது.

## வழக்குத் தொடர்வதற்கான தெரிவுகள்

மனிதநேயச் சட்டத்தை மீறுவதிலிருந்து தப்புதலை முடிவுக்குக் கொண்டுவருவதில் இலங்கையில் உள்ள மிகப்பெரிய சவால் என்னவெனில், அம்மாதிரியான வன்முறைகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்படுவதில்லை என்பதாகும். அவ்வழக்குகள் பொதுவாக இலங்கையில் உள்நாட்டு நீதிமன்றங்களில் விசாரிக்கப்படலாம் அல்லது விசாரிக்கப்பட வேண்டும். ஆனபோதிலும், விசாரணைகளும்

**“ இலங்கையில் பெரும்பாலான கொடும் செயல்கள் நடந்ததும் தொடர்ந்தும் நடந்துகொண்டிருப்பதும் சர்வதேச சட்டங்களின்படி தடைசெய்யப்பட்டவை ”**

வழக்குத் தொடர்வதும் இல்லாமல்போகும் பட்சத்தில், அம்மாதிரியான குற்றங்களுக்குரிய தண்டனைகளைப் பெற்றுக்கொடுப்பதில் உள்ள இயலாமை அல்லது முடியாமை காரணமாக அவற்றைச் செய்பவர்க்கும் வழிகளும் தற்போதைக்கு முடியாமலுள்ளது. ஆனாலும், போர்க்குற்றங்களுக்காக உள்ளூரில் வழக்குத் தொடர்வதிலுள்ள தடைகள் காலப்போக்கில் இல்லாமல்போகும். உதாரணமாக, சிலி மற்றும் ஆர்ஜன்ரீனா நாடுகளில் 1970 களிலும் 1980 களிலும் அவ்வப்போதைய இராணுவ ஆட்சியாளரினால் பெருமளவில் நடத்தப்பட்ட சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், வலுக்கட்டாயமான காணாமல்போதல்கள் போன்ற பெரும் மனித உரிமை மீறல்களுக்கெதிரான விசாரணைக்கென இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இரு நாடுகளிலுமே வழக்குத் தொடர்வதற்குத் தடையாக பொதுமன்னிப்புச் சட்டங்கள் இருந்தபோதிலும், இரு நாடுகளிலும் - குறிப்பாகச் சிலியில் கொடுங்கோலரான "பினோசே"யைப் பற்றிய வெளிநாட்டின் முடிவைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சி மற்றும் அரசியல் சூழ்நிலை மாற்றங்களால் அந்தப் பொதுமன்னிப்புச் சட்டங்கள் ஒழிக்கப் பட்டன. எனவே, என்னதான் காலம் சென்றாலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடக் குற்றஞ்செய்தவர்களைத் தப்பித்துவிடாமல் சட்டத்திற்கு முன்பு உள்ளூரிலேயே நிறுத்தமுடியும்.

இலங்கை "ரோம் ஒப்பந்த"த்தில் கைச்சாத்திடாததால் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழக்குத் தொடர்வது பொருத்தமாக அமையாது. இலங்கை "ரோம் ஒப்பந்தத்"தை ஆதரித்தாலும் கூட, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் வெளிவிவகார அதிகாரம், அந்த ஒப்பந்தம் கைச்சாத்தான நாளிலிருந்தே நடைமுறைக்கு வரும். அல்லது, கைச்சாத்திடும் நாடானது எந்த நாளிலிருந்து தான் அந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க விரும்புகிறதோ, அந்த நாளிலிருந்தே "ரோம் ஒப்பந்த"த்தின் அதிகாரம் செல்லுபடியாகும். எனவே, இலங்கை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு அங்கமாக மாறினாலும் கூட, இலங்கையில் ஏற்கனவே இழைக்கப்பட்ட எண்ணற்ற மனிதநேயக் குற்றச்செயல்களுக்கெதிரான விண்ணப்பங்களை அந்நீதிமன்றத்தின் அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதேபோலவே, யூகோசிலாவியா மற்றும் ருவாண்டா போன்ற நாடுகளுக்காக நியமிக்கப்பட்ட சர்வதேசக் குற்றவியல் விசேட நீதிமன்றம் போன்ற, தேவையின் நிமித்தம் ஏற்படுத்தப்படும் விசேட நீதிமன்றங்கள் மூடப்பட்டுவிட்டன. அவற்றை உருவாக்கிய பாதுகாப்புச் சபைகளும் -அவற்றின் உருவாக்கம் காரணமாக- வேறு எந்த விசேட நீதிமன்றத்திற்கும் ஆதரவு வழங்காது. பாதுகாப்புச் சபையினால் உருவான "தேவையின் நிமித்தம் ஏற்படுத்தப்படும் விசேட நீதிமன்ற"த்தின் மூலம் முன்னாள் லெபனான் பிரதம மந்திரி ரபீக் ஹரிரியைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்கு முனைந்தமையைப் பார்க்கும்போது, இது முன்னமே நிர்மாணிக்கப்பட்ட முடிவாக இருக்கவேண்டுமென்பதில்லை எனலாம்.

**கலந்துபட்ட ஒரு தெரிவு**

போர்க்குற்றங்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்குரிய இன்னொரு தெரிவாக இருப்பது, பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு விசேட நீதிமன்றத்தை (hybrid tribunal) உருவாக்குதல் அல்லது சர்வதேச அளவிலான ஒரு அவையை இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரிக்கவென ஏற்பாடு செய்தல் ஆகும். யூகோசிலாவியா மற்றும் ருவாண்டா நாட்டின் போர்க்குற்றங்களை விசாரிக்கவென ஐநாவின் பாதுகாப்புச் சபையால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரசபை அல்லது சர்வதேசக் குற்றவியல் விசேட நீதிமன்றம் போன்றன இல்லாவிட்டால், பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு விசேட நீதிமன்றம் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்படவேண்டும். இப்படியான, பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு விசேட நீதிமன்றத்தையோ அல்லது சர்வதேச அதிகாரசபையையோ இந்த அரசாங்கம் தெரிவுசெய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையெனலாம். ஏனெனில், இந்தப் போர்க்குற்றங்கள் எல்லாப் பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்டதால் அது சம்பந்தமான விசாரணைகள் நியாயமானதாக அமையுமா என்ற ஐயப்பாடுள்ளது. ஆனால், ஆட்சிமாற்றங்களுக்குப் பின்னர் அல்லது உள்நாட்டுப் பிரச்சனைகள் ஓய்ந்த பின்னர் இப்படியான தெரிவுகள் பிற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படியான பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு விசேட நீதிமன்றத்தையோ அல்லது சர்வதேச அவையையோ தெரிவுசெய்வதென்பது பெரும்பாலும் அரசியல் வல்லமையிலேயே தங்கியுள்ளபோதிலும், சியரா லியோன், கிழக்குத்தீமோர், கம்போடியா மற்றும் பொஸ்னியா ஆகிய நாடுகள் இந்த வழிமுறையை ஏற்றுக்கொண்டதானது, இப்படியான தெரிவுகள் முற்கணிப்புக்குரியவையல்ல என்பதையே வெளிப்படுத்தியுள்ளன.

பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு விசேட நீதிமன்றத்தின் பிரதானமான சிறப்பு என்னவென்றால், நல்ல ஆட்சியைப்பற்றிக் கவனத்திற்கொள்ளும் ஒரு அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியாக ஏற்புடையதாக அமைவதுதான். அதாவது, அந்த விசேட நீதிமன்றத்திற்கு ஒரு திட்டமிட்ட கட்டமைப்போ அல்லது அமைப்போ கிடையாது என்பதாகும். பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அவை அமையத் தேவையில்லையெனினும், சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கும் ஐநா. அல்லது ஏதாவதொரு சர்வதேச நிறுவனத்திற்குமிடையிலும் ஒரு உடன்பாட்டை அமைத்து அதனை அடித்தளமாகக் கொள்ளலாம். சில சர்வதேச நீதிபதிகளையும் வழக்கறிஞர்களையும் உள்ளூர் சட்டத்தரணிகளுடன் இணைத்து உள்ளூர் மற்றும் சர்வதேசச் சட்டங்களைக் கலந்தும் அவை அமைக்கப்படலாம்.

**"இலங்கை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு அங்கமாக மாறினாலும் கூட, ஏற்கனவே இழைக்கப்பட்ட எண்ணற்ற மனிதநேயக் குற்றச்செயல்களுக்கு எதிரான விண்ணப்பங்களை அந்நீதிமன்றத்தின் அதிகார சபையால் ஏற்றுக்கொள்ள முடியாது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஒரு நீதிமன்றத்தினால் ஏற்படும் நன்மையென்னவெனில், அது தனித்த சர்வதேச அல்லது தனித்த உள்ளூர் நீதிமன்றங்களைவிட அரசியல் ரீதியில் மிகவும் செயல்திறன் மிக்கதாகவுள்ளதுடன், ஒரு குறிப்பிட்ட அமைப்புக்குள் பொருந்தக்கூடியதாகவுமுள்ளது. இலங்கை முறையின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படுவது அரசியல் ரீதியில் குறைந்த தாக்கங்களையுருவாக்கி, உள்ளூர் சட்டநிபுணர்களினதும் சமூகத்தினதும் பொறுப்பை அதிகரிக்கப்பண்ணி, மனிதநேயக் குற்றவழக்குத் தொடர்வுகளை இலங்கை முறையால் மற்று நடத்த முடியும் என்ற தன்னம்பிக்கையையும் கொடுக்கும்.

அந்நேரத்தில், பல அம்சங்களை உள்ளடக்கிய இந்த விசேட நீதிமன்றத்தில் சர்வதேச உறுப்பினர்களை அமர்த்துவதால் ஒருதலைச் சார்பாகச் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் இல்லாமல்போவதுடன், அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகள் சட்டரீதியாக நடக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்து விசாரணைகளிலும் குற்றவழக்குகளிலும் ஏற்படக்கூடிய தடைகளும் நீக்கப்படும். குறிப்பாக, வன்முறைக்குப் பெரும் மூலகாரணமாக விளங்கிய அரச தலைமைகள், உயர் அரசாங்க அதிகாரிகள், இராணுவத் தளபதிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் போன்றவர்களை விசாரிக்க இம்முறை இலகுவானதாகவிருக்கும். இது ஒரு முக்கியமான குறிப்பாகும் ஏனெனில், குற்றவியல் விசாரணையானது வெறுமனே ஒரு சாதாரண காலாட்படைவீரனுடன் நின்றுவிடாமல், மனிதநேயச் சட்டவிதிகளை மீறிய, வன்முறைகளைத் தடுப்பதற்குத் தவறிய முக்கியமான முடிவுகளையெடுக்கும் உயர்மட்டத்திலுள்ளோரையும் அடக்கக்கூடியதாக இருக்கவேண்டும். பிற நாடுகளில் இது நிறைவேறியுள்ளதற்குச் சில உதாரணங்கள் உள்ளன. லைபீரியாவின் ஜனாதிபதி, கொசோவாவின் முன்னாள் பிரதம மந்திரி சாள்ஸ் டெய்லர், ருவாண்டாவின் முன்னாள் மேயர் ரமூஷ் ஹரடினாஜ், முன்னாள் யூகோசிலாவிய இராணுவத்தளபதி டிரகோல்ஜுப் ஒஜ்டானிக் போன்றோரை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இதுவரையில் பல அம்சங்களை உள்ளடக்கிய விசேட நீதிமன்றங்கள் பின்நோக்கு விளைவுள்ளதாக உருவாக்கப்பட்டதால் அவை சட்டரீதியற்றன என்ற உறுதிப்பாடு தகர்ந்துள்ளது. ஆனபோதிலும், உருவாக்கப்பட்ட ஒரு விசேட நீதிமன்றம், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றியதான சர்வதேச உடன்படிக்கையையோ ஏனைய விசேட நீதிமன்றங்களால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளையோ மீறவேண்டிய அவசியமில்லை. திறமையுள்ள ஒரு அதிகாரசபையானது, பொருத்தமான சட்ட

"குற்றவியல் விசாரணையானது வெறுமனே ஒரு சாதாரண காலாட்படைவீரனுடன் நின்றுவிடாமல், மனிதநேயச் சட்டவிதிகளை மீறிய, வன்முறைகளைத் தடுப்பதற்குத் தவறிய முக்கியமான முடிவுகளையெடுக்கும் உயர்மட்டத்திலுள்ளோரையும் அடக்கக்கூடியதாக இருக்கவேண்டும்"

முன்னெடுப்புக்களைக் கொண்டும், நடுநிலைமையான நடைமுறைகளைக் கண்காணித்தும் அமைக்கப்படுவதே இதற்குத் தேவையானது. இம்மாதிரியான ஒரு விசேட நீதிமன்றம் நிறுவப்படுவதற்கோ அல்லது போர்க்குற்றங்கள், மனிதநேயக் குற்றங்களை விசாரிப்பதற்கோ எந்தவொரு காலக்கட்டுப்பாடும் இல்லை. கம்போடியாவின் விசேட நீதிமன்றத்தில் பார்த்ததுபோல, குற்றவிசாரணை மிகவும் காலதாமதமாகவும் வரலாம். கம்போடியாவில் நடந்ததுபோல, இலங்கையில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோரும் தமக்கு நீதி கிடைப்பதற்காக ஆண்டுக்கணக்காகக் காத்திருக்கும் அவசியம் வரக்கூடாதெனினும், காலதாமதம் ஏற்படுகின்றதென்பதற்காக, ஏற்கனவேயுள்ள உள்ளூர் நீதிமன்றங்களின் மூலமோ அல்லது பல அம்சங்களை உள்ளடக்கிய விசேட நீதிமன்றங்களின் மூலமாகவோ நீதி ஒருபோதும் கிடைக்காமல் போகாது என்பது அர்த்தமல்ல.

கொடிய மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்குத் தமது பாரம்பரிய வழக்கமேபோலவே விசாரணைக்குழுக்கள் அமைக்க இலங்கை விரும்பினாலும், குற்றவியல் விசாரணைக்கான வழியை அவை தவிர்த்துவிடக்கூடாது. அந்த இரு வழிகளுமே பாராட்டுக்குரியவையென்றாலும், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களையும் மனிதநேயத்திற்கெதிரான குற்றங்களையும் விசாரிப்பதற்கு எதிரான பெரும் தடை அரசியல் வல்லமையின்மையே என்ற முறை இதனால் எடுக்கப்படவேண்டும். ஆனால், அரசியல் வல்லமை அல்லது ஆதரவு என்பது நிலைபற்றதாகும். ஆகையால், இந்த மனிதநேயச் சட்டங்களை மீறும் வன்முறைகளுக்குப் பொறுப்பானோர் தாம் வெகுகாலம் தண்டனையிலிருந்து தப்பிக்கமுடியாதென்பதை மனதில் குறித்துவைத்துக்கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்து!

ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயற்பாடுகளை நிறுத்தி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு கோரி சுதந்திர ஊடக இயக்கம் உட்பட ஐந்து ஊடக அமைப்புக்களும், பல சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்களும் இணைந்து 2007 நொவெம்பர் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக கவன ஈர்ப்புப் போராட்டமொன்றை நடாத்தியிருந்தன.




படப்பிடிப்பு: கேதீஸ்வரன் ஜீவரத்தினம்

- குற்றவியல் அவதூறுச் சட்டம் மற்றும் போர்ச் செய்திகள் மீதான தணிக்கை அமுலப்படுத்தப் படக்கூடாது.
- கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- வானொலிகள் செய்திகளை ஒலிபரப்புவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படக்கூடாது. வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்பான சுயாதீன ஒலி - ஒளிபரப்பு அதிகாரசபை எந்த விதமான கால தாமதங்களும் இன்றி அமைக்கப்படவேண்டும்.
- பொலிஸ் மற்றும் அரசியல் அழுத்தங்களால் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது நிறுத் தப்படவேண்டும்.
- யாழ் குடாநாட்டு ஊடகவியலாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற கட்டுப்பாடுகள் மற்றும் தெளிவற்ற தணிக்கை முறைகள் உடனடியாக நீக்கப் படவேண்டும்.

Design & Print : EC Ways (Pvt) Ltd. Tel: 5673483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org